வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

வார மலர்

Eelanadu

Email : news@eelanadu.lk

மலர் : 04

02.07.2023 ஞாயிற்றுக்கிழமை

இதழ் : 205

பக்கங்கள் : 20






07

அழிவின் விளிம்பில் யாழ்ப்பாணம்?



08

இலங்கை ஆணைக்குழுக்கள் மீது அவநம்பிக்கை



09

தமிழ்க் கட்சிகளை ஒன்றிணைப்பதில் டட்லி பாணியில் ரணில்!



10

'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு' – மக்களுக்கானதா?

## பல இடங்களில் நிலநடுக்கம்

கொழும்பு, ஜூலை 02

நாட்டின் பல பகுதிகளில் நிலநடுக்கம் நேற்று மதியம் 12.59 மணியளவில் உணரப்பட்டதாக புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

தென்கிழக்கு கடலோர பகுதிகளில் பூகம்பம் உணரப்பட்டுள்ளது.

ரிச்டர் அளவில் 5.8 ஆக இந்த பூகம்பம் பதிவாகியுள்ளது.

கொழும்பு பத்தரமுல்லை,

19

### ஜனாதிபதி குறித்து பேசாதீர்கள்

# பெரமுனவினருக்கு மகிந்த வாய்ப்பூட்டு!

கொழும்பு, ஜூலை 02

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறித்தோ அல்லது அறிவிக்கப்படாத ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்பாளர் குறித்தோ சிறீலங்கா பொதுஜன பெரமுனவினர் கருத்துகள் எதையும் தெரிவிக்கக்கூடாது என்று அந்தக் கட்சியின் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

19



## 50 மருத்துவமனைகள் மூடப்படும் அபாய நிலை!

கொழும்பு, ஜூலை 02

மருத்துவர்கள் பற்றாக்குறையால் நாட்டில் 50இற்கும் மேற்பட்ட மருத்துவமனைகள் மூடப்படும் அபாயம் உள்ளது என்று ஜே. வி. பியின் மத்திய குழு உறுப்பினர் மருத்துவர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அத்துடன், நாட்டில் சுமார் 18 ஆயிரத்து 600 அரச மருத்துவர்கள் இருந்தனர். இவர்களில் 1,500 தொடக்கம் 1,700 பேர் கடமையிலிருந்து வெளியேறியுள்ளனர்.

2028ஆம் ஆண்டுக்குள் 418 இயன் மருத்துவர்கள் (பிசியோதெரபிஸ்ட்கள்) இருக்க வேண்டும். தற்போது 240 பேரே உள்ளனர் . டிசெம்பர் மாதத்துக்குள் இவர்களில் 22 பேர் ஓய்வு பெறுவார்கள்.

247 சத்திர சிகிச்சை நிபுணர்கள் இருந்தனர். ஆனால், தற்போது 145 பேர் மட்டுமே

19

## வாக்களிப்பில் பங்கேற்காத ராஜபக்ஷ குடும்பத்தினர்!

கொழும்பு, ஜூலை 02

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு பிரேரணை நேற்று பாராளுமன்றில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது ராஜபக்ஷ் குடும்பத்தினர் வாக்களிக்கவில்லை.

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு திட்டம் நேற்று பாராளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. இந்த வாக்கெடுப்பில் ஆளும் சிறீ லங்கா பொதுஜன பெரமுன, எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் பலர் வாக்களிப்பில் பங்கேற்கவில்லை.

19

## உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு திட்டம் 60 மேலதிக வாக்குகளால் நிறைவேறியது

### ஆதரவு - 122, எதிர்ப்பு - 62

கொழும்பு, ஜூலை 02

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு திட்டத் தீர்மானம் 60 மேலதிக வாக்குகளால் நேற்று நிறைவேறியது.

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு திட் டத்தை வாக்கெடுப்புக்கு விடப்படுவதற்காக விசேட வர்த்தமானி மூலமாக நேற்று பாராளுமன்றம் கூட்டப்பட்டது. மன்றில் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து விவாதங்கள் நடந்தன. பின்னர், இரவு 7.30 மணியளவில் வாக்கெடுப்பு நடைபெற்றது.

வாக்கெடுப்பில் பிரேரணைக்கு ஆதரவாக 122 வாக்குகளும், எதிராக 62 வாக்குகளும் பதிவாகின.

அரசாங்க தரப்பினர் ஆதரவாக வாக்களித்த அதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தி, இலங்கை தமிழரசு கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, விமல் வீரவன்ஸ தரப்பினர் எதிராக வாக்களித்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் ஐக்கிய மக்கள் சக்தியின் ராஜித, மனோ கணேசன், மயந்த திஸநாயக்க, ரோகிணி கவிரத்ன ஆகியோரும் இந்த வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நயினை அம்மனுக்கு இன்று தேர்த் திருவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 02

வரலாற்று பிரசித்தி பெற்ற நயினாதீவு நாகபூசணி அம்பாள் ஆலயத் தேர்த் திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

அதிகாலை 4.30 மணிக்கு அபிஷேகம் இடம்பெற்று அதிகாலை 5.30 மணிக்கு விசேட பூசை நடைபெறும். இதைத் தொடர்ந்து காலை 7 மணிக்கு வசந்த மண்டப பூசை நடைபெற்று, அம்பாள் காலை 8.30 மணிக்கு தேரில் ஆரோகணிப்பார். மாலை

19



## இந்துக்களின் பெரும்போர்; யாழ். இந்து அபார வெற்றி!

கொழும்பு, ஜூலை 02

இந்துக்களின் பெரும் போர் துடுப்பாட்டப் போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 9 விக்கெட்களால் கொழும்பு இந்துக் கல்லூரியை வெற்றி கொண்டது.

இந்துகளின் பெரும் போர் என்று வர்ணிக்கப்படும் கொழும்பு இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டி 12ஆவது தடவையாக கொழும்பு

15

## புலிகளின் நோக்கத்துக்காகவே கூட்டமைப்பு இன்று இயங்குகிறது!

### சரத் வீரசேகர சாடல்

கொழும்பு, ஜூலை 02

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் நோக்கத்துக்கு ஏற்பவே தமிழ் தேசிய கூட்டமைப்பு இன்றும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. கூட்டமைப்பின் எம்.பிக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் முன்னிலையி லேயே பதவிப் பிரமாணம் செய்தனர்.

19

## முதல் காலாண்டில் அரசுக்கு ரூ. 115,400 கோடி வருமானம்!

கொழும்பு, ஜூலை 02

இந்த வருடத்தின் முதல் காலாண்டில் அரச வருமானமாக ஒரு இலட்சத்து 15 ஆயிரத்து 400 கோடி ரூபாய் பெறப்பட்டுள்ளது என்று நிதி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

2022ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் மொத்த வருமானம் ஒரு இலட்சத்து 75 ஆயிரத்து 100 கோடி ரூபாயாக இருந்தது. உள்நாட்டு உற்பத்தியில் இது 7.3 சதவீதமாகும்.

19

## மதுபானங்களின் விலைகள் உயர்வு

கொழும்பு, ஜூலை 02

வற் வரி அதிகரிப்பு காரணமாக அனைத்து வகையான மதுபான வகைகளும் (750 மி. லீ. போத்தல்) 300 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேபோன்று பியரின் விலையும் 50 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று அந்தத்

19

# பெருந்தோட்ட மக்களின் பிரச்னைகளை கண்டறிய ஆணைக்குழுவை அமைக்குக

## பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்

கொழும்பு, ஜூலை 02

பெருந்தோட்டத்துறைகளில் வாழ்கின்ற மக்களின் பிரச்னை களை கண்டறிய சுயாதீன ஆணைக்குழுவை அமைப்பது காலத்தின் தேவை. 200 வருடங் களாக மலையக மக்கள் அனுப வித்து வரும் காணி உரிமையை பெற்றுக்கொடுப்பதுடன் கல்வி, சுகாதாரம், போக்குவ ரத்து வசதி மற்றும் உட்கட்ட மைப்பு வசதிகளை ஏற்படுத்த வும் அரசாங்கம் தீர்க்கமான முடிவு எடுக்க வேண்டும் - என்று பேராயர் மெல்கம் கர்தி னால் ரஞ்சித் ஆண்டகை வலியுறுத்தினார்.

இலங்கை கரித்தாஸ் செடெக் நிலையத்தின் தவிசாளரும் யாழ். மறை மாவட்ட ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் "பெருந்தோட்ட சமூகத்தின் கௌரவமிக்க குடியுரிமையை நோக்கி" எனும் நடந்த ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். இந்த சந்திப்பு கரித்தாஸ் செடெக் நிலையத் தில் நேற்று நடந்தது.

அங்கு அவர் மேலும் கூறுகையில்,

"திறந்த பொருளாதார முறை மையின் மூலம் தரகுக்கூலி பெற்றுக்கொண்டு சூறையாடுவ தையே நம் நாட்டு அரசியல் தலைவர்கள் செய்து வருகின்ற னர். இந்த நாட்டு வளங்களை மேம்படுத்தாது தன்னிறைவு மிக்க நாடாக மாற்ற முடியாது.

போர்த்துக்கேயர், ஒல்லாந் தர், ஆங்கிலேயர் ஆகிய ஐரோப்பியர்கள் இந்த நாட்டை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனர். அவர்கள் கைப்பற்றிய நாடுகளின் வளங் களை சுரண்டினர். அது போலவே, தற்போதும்கூட நம் நாடு போன்ற வறிய நாடுகளி டமிருந்து வளங்களை சூறை யாடுவதையே செய்து வருகின்ற னர். இதற்கு பெயர் திறந்த பொருளாதாரம்.

இந்த திறந்த பொருளாதார முறைமை மூலமாக சிறிய குழுக் களுக்கு எந்தவித எதிர்காலமும் கிடையாது. நாட்டில் தோட் டத் தொழிலாளர்கள் மாத்திரம் அல்ல, சகல தொழிலாளர்களும் புதிய வடிவில் அடிமைகளாக் கப்பட்டுள்ளனர்.

சர்வதேச நாணய நிதியம் என்பது மேலைத்தேய நாடு களின் பொருளாதார பலத்தை வைத்துக்கொண்டு, இந்த முறையை முன்னெடுக்கின்ற அமைப்பாகும். இதற்கு நிதி அளிப்பது பணம் படைத்த நாடுகள்தான். இதன் மூலம் பணத்தை எங்களுக்கு கடன் வழங்குவது நடப்பதல்ல. மாறாக எமது பணத்தை அவர்கள் சுரண்டுகிறார்கள். ஆகவே, திறந்த பொருளாதார முறைமையின் மூலமாக ஒரு போதும் நாம் சிறந்த பொரு ளாதாரம்மிக்க நாடாக உருவாக முடியாது. இந்த கடன் திட்டத் தின் காரணமாக, எமது பிரச்னைகளை எமக்கு தீர்த்துக் கொள்ள முடியாது. மேலும் தன்னிறைவுமிக்க நாடாகவும் உருவாக முடியாது.

200 ஆண்டுகளுக்கு முன்னர் தோட்டத் தொழிலாளர்கள் அடிமைகள் போல கொண்டு வரப்பட்டு, முறையான சம்ப ளம் கொடுக்காது, அவர்களுக்கு முறையானதொரு வீடு கொடுக் காமல் அடிமை வாழ்க்கை வாழ வேண்டும் என்ற போக்கை வெள்ளையர்கள் அமைத்திருந்தனர். இதனையே பெருந்தோட்ட கம்பனிகளும் தொடர்ந்து செய்து வருகிறது. இதனால் இந்த மக்கள் பெரும் அழுத்தத்துக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

சில சந்தர்ப்பங்களில் வீதி களை சற்று புனரமைத்துக் கொடுப்பதும், பகுதியளவில் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதால் மாத்திரம் அவர்களுக்கான தேவைகள் கிடைத்து விட்டது எனக் கருத முடியாது. முதலில் அவர்கள் மனிதர்களாக மதிக் கப்பட வேண்டும். சிறைக்கைதி களும் மனிதர்களே என வாசகம் எழுதப்பட்டுள்ளது. இந்த தொழிலாளர்களும் மனிதர்கள் தான். அவர்களுக்கான உரிமை களைப் பெற்றுக்கொடுக்க வேண்டும்" - என்றார். (ஐ)

# 167 மயக்க மருந்து நிபுணர்கள் நாட்டை விட்டு வெளியேறினர்

கொழும்பு, ஜூலை 02

இலங்கையில் உள்ள மயக்க மருந்து நிபுணர்கள் 167 பேர் நாட்டை விட்டு வெளியேறி இங்கிலாந்தில் பணிபுரிய சென் றுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தகவல்கள் தெரிவிக் கின்றன.

இதேவேளை, கடந்த வரு டம் ஜனவரி தொடக்கம் இதுவரை 323 விசேட மருத்து வர்களில் 160 பேர் வெளிநாடு களுக்கு பணிபுரியச் சென்றுள்ள னர் என்று சுகாதார அமைச்சின் பணிப்பாளர் (மூன்றாம் நிலை பராமரிப்பு சேவைகள்) மருத்து வர் பிரியந்த அத்தபத்து தெரி வித்தார்.

இவர்களில் சில மருத்துவர் கள் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மருத்துவர்கள் வெளிநாடு செல்வதை தடுக்கும் முறையான சட்ட அமைப்பு இந்த நாட்டில் இல்லாதது பெரும்பிரச்னை என்று கூறிய சுகாதார திணைக் கள அதிகாரிகள் அவ்வாறான சட்ட முறைமை விரைவில் தயாரிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்தனர்.

மருத்துவர்கள் வெளிநாடு செல்வதை தடுக்க வீசா ரத்து போன்ற நடவடிக்கைகள் எடுக் கப்படலாம் என்றும் நெறி முறைகளை மீறினர் எனவும் கூறி மருத்துவ சபை பதிவுக ளைக்கூட ரத்து செய்யலாம் என்றும் கூறப்படுகிறது. ஆனால், தற்போது வரை அப்படி ஒரு திட்டம் சரியாக செயல்படவில்லை என்று தெரிய வந்துள்ளது. (ஐ)

# கடன் மறுசீரமைப்பு என்ற பெயரில் நிதியமைச்சருக்கு அதிகாரங்கள்!

## மீண்டும் மோசடிகள் நடக்கும் என்கிறார் கம்மன்பில

கொழும்பு, ஜூலை 02

உள்நாட்டு கடன் மறுசீர மைப்புக்கு அங்கீகாரம் என்ற பெயரில் நிதியமைச்சருக்கு அதிக அதிகாரம் வழங்கப்பட்டு, மீண்டும் மத்திய வங்கி பிணை முறி மோசடி நடக்கும் அபா யம் உள்ளது என்று பிவித்ரு ஹெல உறுமய தலைவர் உதய கம்மன்பில கூறியுள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அத்துடன்,

அரசாங்கம் மக்களை ஏமாற் றும் மோசடியில் ஈடுபட்டுள் ளது. முதலில் 5 நாட்கள் வங்கி விடுமுறை என அறிவித்தனர். வைப்பாளர்களின் பணத்துக்கு ஆபத்து என்ற தகவல் பரவி மக்கள் பீதியடைந்தனர். வங்கி வைப்புகளுக்கு ஆபத்தில்லை யென அரசாங்கமே தகவலை கசியச் செய்தது.

இப்படியாக இங்கு பேசப் படுவது ஒரு விடயமாகவும் ஆனால், வாக்கெடுப்புக்கு விடப்படுவது மற்றொரு விடய மாகவும் உள்ளது. உள்நாட்டு கடன் மறுசீரமைப்புக்கு தேவையான சகல நடவடிக்கை களையும் மேற்கொள்ள நிதிய மைச்சருக்கு சகல அதிகாரத் தையும் வழங்குவதற்கே வாக்கெடுப்பு நடக்கவுள்ளது.

நிதியமைச்சருக்கு எல்லை யற்ற அதிகாரம் வழங்கப்பட் டால், அதன் பின்னர் வைப்பு கள், வட்டிகள் பற்றியெல்லாம் நிதியமைச்சரே முடிவெடுப் பார்.

உள்நாட்டு கடன் மறுசீர மைப்புக்கு அங்கீகாரம் என்ற பெயரில் நிதியமைச்சருக்கு அதிக அதிகாரம் வழங்கப் பட்டு, மீண்டும் மத்திய வங்கி பிணை முறி மோசடி நடக்கும் அபாயமுள்ளது - என்றார். (ஐ)

# 5, 6ஆம் திகதிகளில் பாராளுமன்ற அமர்வு

கொழும்பு, ஜூலை 02

எதிர்வரும் 05 ஆம் திகதி புதன்கிழமை முதல் 07 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை பாராளுமன்றம் கூடும் என்று பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்துள்ளார்

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடிய பாராளுமன்ற அலுவல் கள் பற்றிய குழுக் கூட்டத்தில் இது தொடர்பில் இறுதித் தீர் மானம் எடுக்கப்பட்டது. இதற் கமைய, நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பாராளு மன்ற அமர்வு இடம்பெறாது என செயலாளர் நாயகம் தெரி வித்தார். (ஐ)




# இசைவேள்வி இன்றைய நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 02

அகில இலங்கை கம்பன் கழகம் நடத்தும் "சிறீ ராம நாம கானாமிர்தம்" இசை வேள்வி கடந்த வியாழக்கிழமை முதல் நல்லூர் துர்க்கா மணி மண்டபத் தில் நடைபெற்று வருகின்றது.

இதில் இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 5 மணிக்கு திருமதி தர்மபூபதி சிதம்பர நாதன், திருமதி நேசபூபதி நாகராஜன் நினைவரங்கத்தில் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகனின் தலைமையுரையைத் தொடர்ந்து இசையரங்கு நடைபெறும். இதில், அணி செய் கலைஞர்க ளாக செல்வி பரமேஸ்வரி கணே சன் (பாட்டு), எஸ். திபாகரன் (வயலின்) பி. ரமண சர்மா (மிரு தங்கம்), ஞா. வசந் (கஞ்சிரா) பங்கேற்பர்.

அடுத்து நடக்கும் இசைப் பேரரங்கு நிகழ்வில் அணி செய் கலைஞர்களாக தமிழ்நாட்டை சேர்ந்த பத்மஸ்ரீ ஸ்ரீமதி அருணா சாய்ராம் (பாட்டு), வி. எஸ். கோகுல் (வயலின்), டில்லி எஸ். சாய்ராம் (மிருதங்கம்), எஸ். கிருஷ்ணா (கடம்) ஆகி யோர் பங்கேற்பர்.(ஐ)

# போதைப் பொருள் ஒழிப்புக்கு எம்.பிக்கள் குழு நியமனம்!

கொழும்பு, ஜூலை 02

நாட்டில் பரவிவரும் போதைப் பொருளை ஒழிப்ப தற்கு பங்களிக்க பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தலைமையில் பாராளு மன்ற குழு ஒன்று அமைக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பாக நேற்றைய தினம் சபாநாயகர் சபையில் அறிவிக்கையில்,

"நாட்டில் வேகமாகப் பரவி வரும் போதைப்பொருள் அச்சு றுத்தலை உடனடியாகக் கட்டுப்படுத்தவும் - ஒழிக்கவும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய வழிமுறைகள் குறித்து ஆராய்ந்து அது பற்றிய அவதானிப்புகளையும் விதப்பு ரைகளையும் பாராளுமன்றத் துக்கு சமர்ப்பிப்பதற்கான பாராளுமன்ற விசேட குழுவில் கடமையாற்ற டிரான் அலஸ் தலைமையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு அமைக்கப் பட்டுள்ளது.

இந்தக் குழுவில் தவராஜா கலையரசன் சட்டத்தரணி சிசிர ஜயகொடி, மருத்துவர் சீதா அரம்பேபொல, புத்திக பத் திரண, மருத்துவர் கயாஷான் நவனந்த, துஷார இந்துனில் அமரசேன, மருத்துவர் உபுல் கலப்பத்தி, சுதர்ஷன தெனி பிடிய, அசங்க நவரத்ன, உபுல் மஹேந்திர ராஜபக்ஷ, மற்றும் மஞ்சுள திஸநாயக்க ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். (ஐ)

# தீவிர உணவு பாதுகாப்பு இன்மையால் 10 ஆயிரம் இலங்கையர்கள் பாதிப்பு!

## உலக உணவு திட்ட மதிப்பீட்டில் தகவல்

கொழும்பு, ஜூலை 02

**நாட்டில் கடந்த மே மாதம் 39 இலட்சம் இலங்கையர்கள் உணவு பாதுகாப்பு இன்மையை எதிர்கொண்டனர். அத்துடன், 10 ஆயிரம் பேர் தீவிர உணவு பாது காப்பு இன்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.**

உலக உணவு திட்டம் உணவு பாதுகாப்பு தொடர்பாக நடத்திய மதிப்பீட்டிலேயே இந்த விடயம் வெளிவந்தது. இதன்படி, கடந்த மே மாதம் 39 இலட்சம் மக்கள் - நாட்டின் சனத்தொகையில் 17 வீதமானோர் உணவு பாதுகப்பு இன்மையால் பகுதியளவில் பாதிக்கப்பட்டனர். தீவிர உணவு பாதுகாப்பு இன்மையால் 10 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டனர்.

கடந்த ஆண்டு - 2022இல் 62 இலட்சம் மக்கள் பகுதியளவான உணவுப் பாதுகாப்பு இன்மைக்கும் 66 ஆயிரம் பேர் தீவிர உணவுப் பாதுகாப்பு இன்மைக்கும் முகங்கொடுத்திருந்தனர். இதனுடன் ஒப்பிடுகையில் நிலவரம் முன்னேற்றமடைந்துள்ளது.

மேலும், பெருந்தோட்ட பகுதிகளிலேயே உணவுப் பாது காப்பின்மை வீதம் உயர்வாகப் பதிவாகியுள்ளது. அங்கு பெரும்பாலான குடும்பங்கள் தமது பிரதான வருமானத்துக்கு சமுர்த்தி, விசேட தேவையுடையோருக்கான உதவிக் கொடுப்பனவு, சமூகப் பாதுகாப்பு உதவித் திட்டங்களிலேயே தங்கியுள்ளன.

இதேபோன்று, தமது உணவுத்தேவையைப் பூர்த்திசெய்வதற்காக வாழ்வாதார அடிப்படையில் பல்வேறு மாற்றுவழிகளை கையாளும் குடும்பங்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டு மே மாதம் 48 சதவீதமாக பதிவாகியிருந்த நிலையில், அது இவ்வருடம் மார்ச் மாதத்தில் 62 சதவீதமாக உயர்வடைந்துள்ளது. குறிப்பாகக் கடந்த மே மாதத்தில் 36 சதவீதமான குடும்பங்கள் தமது உணவின் அளவை சுருக்கியிருப்பதுடன், 19 சதவீதமான குடும்பங்கள் ஒருவேளை உணவை தவிர்த்துள்ளன.

இவ்வாறு பொருளாதார நெருக்கடியின் விளைவாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவும் நோக்கில் 2022 ஆம் ஆண்டு ஜூன் மாதம் உலக உணவுத் திட்டத்தால் ஆரம்பிக்கப்பட்ட உணவு விநியோக மற்றும் பாடசாலை உணவு, போசணை உதவி வழங்கல் செயல்திட்டத்தின் ஊடாக இதுவரையில் 7 இலட்சத்து 63 ஆயிரத்து 808 பேருக்கு உணவுப்பொருள் உதவிகளும் 6 இலடச்த்து 10ஆயிரத்து 172 பேருக்கு காசோலை உதவியும் வழங்கப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது. (ஐ)

# சிகரெட் விலை அதிகரித்தது!

கொழும்பு, ஜூலை 02

நேற்று சனிக்கிழமை முதல் நடைமுறைக்கு வரும் வகையில் சிகரெட் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, சிகரெட்களின் விலை 05, 15, 20 மற்றும் 25 ரூபாய்களால் அதிகரிக்கப்பட்டுள்ளது. தற்போது, சிகரெட் ஒன்றின் விலை 125, 135 ரூபாயாக விற்பனையாகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# காலநிலை மாற்ற கற்கைகளுக்காக சர்வதேச தரத்தில் பல்கலைக்கழகம்!

## கொத்மலையில் அமைக்க அரசு முடிவு



கொழும்பு, ஜூலை 02

காலநிலை மாற்றம் தொடர்பான கற்கை நெறிகளை தொடரும் வகையிலான சர்வதேச பல்கலைக்கழகத்தை கொத்மலையில் அமைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதற்கான திட்ட வரைவை தயாரித்துள்ளதாக காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவான் விஜயவர்த்தன தெரிவித்தார்.

இந்த சர்வதேச பல்கலைக் கழகத்தை அமைப்பதற்காக 400 ஏக்கர் நிலப்பரப்பு கொத்மலை பிரதேசத்தில் அடையாளப் படுத்தப் பட்டுள்ளது. மேலும், அங்கு சென்ற காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜயவர்த்தன தலைமையிலான குழுவினர் பல்கலைக்கழகத்தை அமைக்கும் பணிகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அத்துடன், காலநிலை மாற்றம் தொடர்பான கற்கை நெறிகளை தொடரும் வகையிலான சர்வதேச பல்கலைக்கழகத்தை ஆரம்பிப்பதற்கு தேவையான ஒத்துழைப்புகளை வழங்குவதற்கு அமெரிக்க தூதரகம் முன்வந்துள்ளது.

மேலும், அமெரிக்க பல்கலைக்கழகங்களின் ஒத்துழைப்புகளையும் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பதாக அமெரிக்க தூதரகம் ஜனாதிபியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தனவிடம் உறுதியளித்துள்ளது.

எவ்வாறாயினும், ஏற்கனவே அடையாளப்படுத்தப்பட்டுள்ள 400 ஏக்கர் நிலப்பரப்புக்கு மேலதிகமாக மேலும் 200 ஏக்கர் காணியை பல்கலைக்கழகம் அமைக்கும் பணிக்கு உள்வாங்கவும் தீர்மானிக்கா' பட்டுள்ளது.

சர்வதேச தரத்தில் நிறுவப் படவுள்ள இந்த பல்கலைக் கழத்தின் வதிவிட வசிதகள் உட்பட அனைத்து வளங்களையும் உள்ளடக்க தீர்மானிக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டது. (ஐ)

# சிறை அதிகாரியை தாக்கிய மூன்று சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, ஜூலை 02

மினுவாங்கொடை சிறைச்சாலை அதிகாரி ஒருவரின் வீட்டுக்குள் நுழைந்து அந்த அதிகாரியைத் தாக்கி காயப்படுத்திய சம்பவத்துடன் தொடர்புடைய 3 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதலுக்காக சந்தேக நபர்கள் பயணித்த வானையும் பொலிஸார் கைப் பற்றியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் ஐஸ் போதைப் பொருள் இருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

கிரிவத்துடுவ, ஹெய்ந்துடுவ பிரதேசத்தில் வசிக்கும் 25, 27, 41 வயதுடைய மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பாராளுமன்ற குழுக்களின் முன்பாக அதிகாரிகள் எவ்வாறு செயல்படுவது?

## வழிகாட்டல் வெளியிடுகிறது அரசு

கொழும்பு, ஜூலை 02

கோப் மற்றும் கோபா உட்பட அனைத்து பாராளுமன்ற குழுக்களுக்கும் செல்கையில் அரச அதிகாரிகள் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பது குறித்து விசேட வழிகாட்டலை வெளியிடுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பாராளுமன்ற குழுக்களின் தலைவர்கள் முன்வைத்த முறைப்பாடுகளுக்கு அமையவே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்ற குழுக்களுக்கு வரும் பெரும்பாலான அரச அதிகாரிகள் உரிய தயார் நிலையில் வருவது இல்லை என்று கோப் மற்றும் கோபா குழுக்களின் தலைவர்கள் ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்கவிடம் முறைப்பாடு அளித்துள்ளனர்.

அமைச்சுகளின் செயலாளர்கள் உட்பட பிரதான நிர்வாக அதிகாரிகள் கணக்காய்வு குறித்தும் கணக்காய்வாளர் நாயகத்தின் வழிகாட்டல்களை அவதானத்தில் கொள்ளாது சந்திப்புகளுக்கு வருகின்றனர். இதனால் பாராளுமன்ற குழுக்களின் நேர - காலம் வீணடிக்கப்படுவதாக முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளனர்.

இது தொடர்பில் குறித்த அமைச்சுக்களின் செயலாளர்களிடம், வினவிய போது, பாராளுமன்றத்திற்கு அழைத்து தம்மை அசௌகரியத்திற்கு உள்ளாக்கும் வகையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் கேள்விகளை கேட்பதும், பின்னர் அவற்றை ஊடகங்களுக்கு வெளியிடுவதுமாக உள்ளனர். இதனை ஏற்றுக் கொள்ள முடியாது என குறிப்பிட்டுள்ளனர்.

இதனடிப்படையில் இரு தரப்பினருக்கும் நெருக்கடிகளை ஏற்படுத்தாத வகையில் பொது வழிகாட்டல் ஒன்றை முன் வைக்கப்படஉள்ளதாக ஜனாதிபதி செயலாளர் இதன் போது மேலும் குறிப்பிட்டார். (ஐ)

# விமான சேவையை சீரமைக்காவிடின் 6 ஆயிரம் பேர் வேலை இழக்க நேரிடும்!

## அமைச்சர் நிமால் எச்சரிக்கை



கொழும்பு, ஜூலை 02

இலங்கை விமான சேவை மறுசீரமைப்புக்கு உட்படுத்தப் படாவிட்டால் சுமார் ஆறு ஆயிரம் பேர் தொழில் வாய்ப்புகளை இழக்க நேரிடும்.

இலங்கை விமான சேவைக்கு மாத்திரம் 120 கோடி டொலர் கடன் காணப்படுகிறது. இந்த நெருக்கடியிலிருந்து மீள வேண்டுமெனில், இலங்கை விமான சேவையின் 49 சதவீத பங்குகள் வெளிநாட்டவர்களுக்கு வழங்கப்பட வேண்டியது அவசியமாகும் என துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் ,

இலங்கை விமான சேவை எமிரேட்ஸ் நிர்வாகத்தின் கீழ் காணப்பட்ட போது 3 கோடி டொலர் இலாபமீட்டியது. அதன் பின்னர் நஷ்டத்திலேயே இயங்கிக் கொண்டிருக்கிறது.

இலங்கை அரசாங்கத்திடம் விமான சேவையொன்று உள்ளது என்பதை ஒரு வெற்றியாகக் கருதுகின்றோம். ஆனால், அந்த காரணத்துக்காக அதிகளவான பணம் செலவிடப் படுகிறது. இலங்கை விமான சேவைக்கு மாத்திரம் 120 கோடி டொலர் கடன் காணப்படுகிறது.

எனவேதான் அதனை மறுசீரமைப்பதற்கு தீர்மானிக்கப் பட்டது. அதற்கமைய அரசாங்கத்திடம் 51 சதவீத பங்குகளும் , ஏனைய தனியார் முதலீட்டாளர்களிடம் 49 சதவீத பங்குகளும் காணப்படும் வகையில் இந்த மறுசீரமைப்புக்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

எமது சட்டத்துக்கமைய விமான சேவையில் 49 சதவீதத்துக்கும் அதிக பங்குகளை வெளிநாட்டு தனியார் துறைக்கு வழங்க முடியாது. ஆனால் உள்நாட்டு முதலீட்டாளர்களுக்கு வழங்க முடியும். இந்த மறுசீரமைப்பை எவ்வாறு மறுசீரமைப்பது என்பது தொடர்பான ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை உலக வங்கியின் கீழ் இயங்கும் நிறுவனமொன்றின் ஊடாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமையவே விலைமனு கோரல் ஆவணம் தயாரிக்கப் படும். எவ்வாறிருப்பினும் தற்போது நிலைமை ஓரளவுக்கு வழமைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. தற்போது இலங்கைக்கு விமான சேவைகளை முன்னெடுப்பது தொடர்பில் ஆராய்வதற்காக இஸ்ரேல் சிவில் விமான சேவைகள் குழுவொன்று நாட்டுக்கு விஜயம் செய்துள்ளது.

அதேபோன்று ஈரான், சீஷெல்ஸ் ரஷ்யா போன்ற நாடுகளிலிருந்து நேரடியாக விமான சேவையை முன்னெடுப்பது குறித்த பேச்சுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பங்களாதேஷூக்கு துறைமுகத்தில் ஒரு பகுதியை விற்கவுள்ளதாக வெளியாகியுள்ள செய்திகள் உண்மைக்கு புறம்பானவையாகும். எவ்வாறிருப்பினும் பங்களாதேஷ் ஏதேனுமொரு முனையத்தை அபிவிருத்தி செய்ய விரும்பினால் அதற்கான வாய்ப்பினை வழங்க தயாராகவே உள்ளோம்.

மறுசீரமைப்புக்கள் தாமதமடைந்துள்ளமை உண்மையில் கவலைக்குரிய விடயமாகும். இலங்கை விமான சேவை மறுசீரமைப்புக்கு உட்படுத்தப் படாவிட்டால் சுமார் 6 ஆயிரம் பேர் தொழில் வாய்ப்புகளை இழக்க நேரிடும். (ஐ)





பிரசித்தி பெற்ற யாழ்ப்பாணம் - வண்ணை வீரமாகாளி அம்மன் கோவில் வேட்டைத் திருவிழா நேற்று முன்தினம் பக்திபூர்வமாக நடைபெற்றது. (படங்கள்: ஐ.சிவசாந்தன்)

# தடுப்பூசி ஏற்றப்பட்ட யுவதி ஒவ்வாமையால் மரணம்!

## மருந்துகளின் தரம் குறித்து அச்சம்

கொழும்பு, ஜூலை 02

கொழும்பு வடக்கு (ராகமை) போதனா மருத்துவமனையில் 23 வயதுடைய யுவதி ஒருவர் நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்தைப் பயன்படுத்தியதால் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நோயாளி கடந்த ஜூன் 27ஆம் நாளன்று சந்தேகத்துக்கு இடமான தொற்றுக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

சிகிச்சையின் போது, நோயாளிக்கு வாய்வழியாக மருந்து கொடுக்கப்பட்டது, ஆனால், அது அவருக்கு பலனளிக்கவில்லை என்று மருத்துவர்கள் தெரிவித்தனர். இதையடுத்து அவருக்கு தடுப்பூசியாக மருந்து வழங்கப்பட்டது. இதன்போது ஒவ்வாமை ஏற்பட்டது.

“குறித்த யுவதிக்கு கடுமையான ஒவ்வாமை எதிர்வினை ஏற்பட்ட நிலையில், உடனடியாக அதிதீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டார். உயிரிழப்பதற்கு முன்னர் கிட்டத்தட்ட எட்டு மணி நேரம் அதிதீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்றார்”, என்று மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் எஸ். லியனகே ரணவீர தெரிவித்துள்ளார்.

இந்த யுவதியின் மரணத்தைத் தொடர்ந்து, குறிப்பிட்ட மருந்தின் முழுத் தொகுதியும் சுகாதார அமைச்சால் திரும்பப் பெறப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

இலங்கையில் பயன்படுத்தப்படும் மருந்துகளின் தரம் குறித்து பல மருத்துவ நிபுணர்கள் கேள்வி எழுப்பிய நிலையில், அண்மைக்காலமாக இதே போன்று நோயாளிகளுக்கு மருந்துகளை செலுத்தி உயிரிழந்த சம்பவங்கள் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளன.

(ஐ)

# ரூ. 3 கோடி பெறுமதியான கஞ்சா கைப்பற்றப்பட்டது



மன்னார், ஜூலை 02

மன்னார் - இலுப்பைக்கடவையில் கடற்படையினர் நடத்திய தேடுதலில் 92 கிலோகிராம் கேரள கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

கடற்படையினர் நேற்று முன்தினம் நடத்திய விசேட தேடுதல் நடவடிக்கையின் போது பற்றைக்குள் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் மூன்று சாக்குகள் கைப்பற்றப்பட்டன.

அவற்றில், 92 கிலோ 250 கிராம் எடையுள்ள கஞ்சா கைப்பற்றப்பட்டது. இதன் சந்தை மதிப்பு 3 கோடி ரூபாய் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)



# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நல்லூரில் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 02

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நேற்று சனிக் கிழமை யாழ்ப்பாணத்தில் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை இந்த முறையாவது தமது பிரச்னைக்கு நீதி வழங்க வேண்டும் என்று கோரியே இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டம் நேற்று முற்பகல் 9 மணியளவில் யாழ்ப்பாணம் நல்லை ஆதீனம் முன்பாக நடைபெற்றது.

இந்தப் போராட்டத்தின் போது காணாமல் ஆக்கப்பட்ட உறவுக ளின் புகைப்படங்களையும் போராட்டகாரர்கள் ஏந்தியிருந்தனர்.

போராட்டக்காரர்களை கண்காணிப்பதற்காக அந்தப் பகுதியில் இராணுவ புலனாய்வாளர்கள் மற்றும் பொலிஸ் புலனாய்வாளர்கள் ஈடுப்படுத்தப்பட்டிருந்தனர்.

(ஐ)

# பாராளுமன்ற குழு கூட்டத்தில் பலவந்தமாக நாம் பங்கேற்போம்

## தயாசிறி ஜயசேகர எம். பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 02

பாராளுமன்ற அலுவல்கள் தொடர்பான குழுக் கூட்டத்தில் சிறீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு அங்கத்துவம் வழங்கப்படாவிட்டால், அந்தக் கூட்டங்களில் பலவந்தமாக கலந்து கொள்வோம் என பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

“எங்கள் குழுக்களின் சில உறுப்பினர்களை ஆளும் கட்சியில் உள்ளனர். ஏனையவர்கள் மைத்திரிபால தலைமையில் எதிர்க்கட்சியில் இருக்கிறோம். பாராளுமன்ற அலுவல்கள் தொடர்பான கூட்டத்தில் எமது கட்சியையும் இணைக்கும்படி சபாநாயகர் உள்ளிட்டவர்களிடம் கேட்டுள்ளோம். ஆனால், அது நிராகரிக்கப்பட்டுள்ளது. இனி கட்டாயம் குழு கூட்டங்களில் கலந்து கொள்வோம்,” என்றார்.

இதற்குப் பதிலளித்த சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன, எதிர்க்கட்சித் தலைவர் சம்மதித்தால் அனைத்து எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்களை அலுவல் அல்லது வேறு குழுக்களுக்கு நியமிப்பதில் எந்தப் பிரச்னையும் இல்லை - என்று கூறினார்.

எவ்வாறாயினும், இந்த விவகாரத்தை ஆளும் கட்சியே தீர்க்க வேண்டும் என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இதன்போது தெரிவித்தார்.

சுதந்திரக்கட்சிக்கு மட்டுமல்ல, டலஸ், வாசுதேவ தரப்புக்கும் அங்கத்துவம் கொடுக்க வேண்டுமென சஜித் குறிப்பிட்டார்.

பிரிந்து வந்து அரசாங்கத்துடன் இணைந்துள்ள தரப்புகளுக்கு அரசு அங்கீகாரமளித்துள்ளது. எதிர்க்கட்சியில் உள்ளவர்களுக்கு பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டியது ஐக்கிய மக்கள் சக்தியின் பொறுப்பு என ஆளும் தரப்பு பிரதம கொறடா பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

எனினும், சிறீலங்கா சுதந்திரக் கட்சி தேர்தலில் பெரமுனவுடன் போட்டியிட்ட தால், பாராளுமன்ற மரபின்படி அரச தரப்பே அந்த அங்கீகா ரத்தை வழங்க வேண்டுமென லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

# வங்குரோத்து நிலையிலிருந்து செப்ரெம்பரில் நாடு மீளும்!

## ஜனாதிபதி ரணில் நம்பிக்கை

கொழும்பு, ஜூலை 02

இலங்கை எதிர்வரும் செப்ரெம்பர் மாதமளவில் வங்குரோத்து நிலையிலிருந்து மீளும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இலங்கை பணிப்பாளர் நிறுவகத்தின் வருடாந்த மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய போது அவர் இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டார்.

அத்துடன், உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு உள்ளிட்ட அரசாங்கத்தின் முயற்சிகளுக்கான கூட்டு ஒத்துழைப்புக்கும் ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார் என்று ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

(ஐ)



ஈழநாடு
Eelanadu
02.07.2023 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், வைகாசி ஆனி 17

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# விரைவாக செயல்பட வேண்டும்

இந்த மாதம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புதுடில்லிக்கு செல்லவுள்ளார். இதன்போது, நிச்சயம் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு விடயங்கள் - முக்கியமாக அரசமைப்பிலுள்ள 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் பிரதமர் மோடி பேசுவார். அதற்கு பதிலளிக்கும் வகையிலேயே ரணில் அங்கு செல்கின்றார். இதற்கு முன்பதாகவே தமிழ் கட்சிகள் தங்களின் ஒன்றுபட்ட நிலைப்பாட்டை தெளிவுபடுத்த வேண்டும். கடிதத்தை ரணிலின் பயணத்துக்கு இரு வாரங்களுக்கு முன்பதாகவே அனுப்ப வேண்டும். கடந்த முறை போன்று இறுதிவரையில் விவாதித்துக் கொண்டிருக்காமல் - விடயங்களை விரைந்து முடிக்க வேண்டும். முதலாவது கடிதம் எழுதப்பட்டபோது, கூட்டமைப்புடன் இருந்த இலங்கை தமிழரசு கட்சி தற்போது வெளியில் இருக்கின்றது. சம்பந்தன் எங்கு நிற்கின்றார் என்பதில் அவருக்கே தெளிவில்லை - எனினும், ரணில் விக்கிரமசிங்கவோடு பேசுகின்ற போது, ஓரணியாகவே செயல்படுகின்றனர். இந்த நிலையில், முன்னரைப் போன்று ஒன்றாக இந்தியாவை அணுகப் போகின்றனரா - அல்லது விடயங்களில் முட்டி மோதப் போகின்றனரா?

சம்பந்தன் இயலாத நிலையிலிருந்தாலும்கூட, ஒரு மூத்த அரசியல்வாதி என்னும் நோக்கில் அவருக்கு முக்கியத்துவம் உண்டு. இந்த நிலையில் சம்பந்தனின் கையெழுத்துடன் கடிதத்தை அனுப்ப வேண்டுமாயின், சம்பந்தனை திருப்திப்படுத்த வேண்டும். கடந்த முறை சம்பந்தனின் கையெழுத்தை வாங்கும் விடயத்திலேயே இழுபறிகள் ஏற்பட்டன.

சம்பந்தனைப் பொறுத்தவரையில் 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் 'மதில் மேல் பூனை' நிலைப்பாட்டையே முன்னெடுத்து வந்திருக்கின்றார். அவரைப் பொறுத்தவரையில் சமஷ்டி, புதிய அரசியல் யாப்பு போன்ற சொற்களுடன்தான் மல்லுக்கட்ட முற்படுவார்.

ஒரு புதிய அரசியல் யாப்பின் மூலம் சமஷ்டி தீர்வை ஏற்படுத்தும் விடயம் நல்லதுதான். ஆனால் - அதனை அடைவதற்கு இந்தியாவிடம் செல்ல வேண்டியதில்லை. அதனை இலங்கையின் சிங்கள ஆளும் தரப்போடு மட்டும்தான் பேசவேண்டும். அவர்கள் இணங்கினால் அதனை முன்னெடுப்பதில் ஒரு பிரச்னையும் ஏற்படாது - ஆனால், அதுதானே கடந்த 74 வருடங்களாக முடியவில்லை. அதனைத்தானே அவர்கள் தரமுடியாது என்கிறார்கள். இதற்காகத்தானே வெளியாரின் தலையீடுகளை நாங்கள் கோருகின்றோம். எனவே, 13இற்கு அப்பாலான விடயங்களை இந்தியாவிடம் வலியுறுத்துவதால் எவ்வித பயனுமில்லை என்பது நமக்கு நன்றாகவே தெரியும்.

எனவே, நிலைமை இவ்வாறிருக்க தமிழ் கட்சிகள் இந்தியாவை நோக்கி முன்வைக்கும் கோரிக்கைகளில் தடுமாற - விவாதிக்க - தங்களுக்குள் முரண்பட - முட்டுப்பட ஏதுமில்லை. எனவே, இந்தியாவிடம் செல்கின்ற போது இந்தியா எதனை வலியுறுத்துகின்றதோ, எதன்மீது ஆர்வம் காண்பிக்கின்றதோ - அதனை தமிழ் கட்சிகள் பற்றிப்பிடித்துக்கொள்ள வேண்டும். அதனையே ஓர் அழுத்தக் கருவியாக கைக்கொள்ள வேண்டும். இந்தியா வலியுறுத்தும் விடயத்தை கொழும்பு செய்யவில்லை என்பதாகவே தமிழ் கட்சிகளின் அரசியல் பிரசாரம் இருக்க வேண்டும். இதன் மூலம் இந்தியாவின் வேண்டுகோளை கொழும்பின்மீதான அழுத்தமாக மாற்ற வேண்டும். எனவே, தமிழ் கட்சிகள் இந்தியாவை நோக்கி கோரிக்கைகளை விரைவாகவும் - தெளிவாகவும் முன்வைக்க வேண்டும்.

# பெண்ணுடன் தகாத வார்த்தை பேசிய பழக்கடை வியாபாரிமீது தாக்குதல்!

*யாழ்ப்பாணம், ஜுலை 02*

*யாழ்ப்பாணம் நகரில் உள்ள பழக்கடை வியாபாரி ஒருவரை கடத்திச் சென்று தாக்குதல் நடத்தினர் என்ற சந்தேகத்தில் இளைஞர்கள் நால்வர் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.*

*பழம் வாங்கச் சென்ற பெண்ணுடன் அந்த வியாபாரி தகாத வார்த்தை பேசினார் என்றும் அதனை தட்டிக்கேட்டவரின் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டியதாலேயே அவரை கடத்திச் சென்று தாக்கினர் என்று கைது செய்யப்பட்டவர்கள் வாக்கு மூலம் வழங்கியுள்ளனர்.*

*நல்லூர் அரசடியைச் சேர்ந்த 18, 20, 23 மற்றும் 24 வயதுடைய நால்வரே யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவினரால் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*"நேற்று பகல் யாழ்ப்பாணம் நகர பழக்கடையில் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த வியாபாரி மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் பழ வியாபாரி கடத்திச் செல்லப்பட்டார்.*

*அவரை கடத்திச் சென்றவர்கள் உள்ளாடையுடன் வைத்து கடுமையாகத் தாக்கி காணொலி பதிவு செய்துள்ளனர். அவரைக் காயப்படுத்திய பின்னர் அங்கேயே விட்டுச் சென்றனர்.*

*சம்பவம் தொடர்பில் தாக்குதலுக்கு உள்ளான பழக்கடை வியாபாரியினால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.*

*யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் நிஷாந்தவின் கீழ்பதில் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் பிரதீப் தலைமையில் இயங்கும் யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.*

*சம்பவம் இடம்பெற்று சில மணி நேரங்களிலேயே பழக்கடை வியாபாரியை கடத்திச் சென்று தாக்குதல் நடத்திய நால்வரும் கைது செய்யப்பட்டனர்.*

*சந்தேக நபர்களிடமிருந்து கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள், கத்தி மற்றும் காணொலி பதிவு செய்த அதிதிறன் கைபேசி என்பன கைப்பற்றப்பட்டன.*

*பழக்கடை வியாபாரியிடம் பழம் வாங்கச் சென்ற பெண் ஒருவருடன் தகாத வார்த்தையால் பேசியுள்ளார். அதுதொடர்பில் கேட்கச் சென்றவரின் கழுத்தில் கத்தியை வைத்து பழக்கடை வியாபாரி மிரட்டியுள்ளார். அதனால்தான் அவரை அழைத்துச் சென்று தாக்குதல் நடத்தினோம் என்று சந்தேக நபர்கள் வாக்குமூலம் வழங்கியுள்ளனர்" என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)*

# தொலைத்தொடர்பு கோபுரம் அமைப்பதை எதிர்த்து ஏழாலையில் மக்கள் போராட்டம்!

*யாழ்ப்பாணம், ஜுலை 02*

*ஏழாலை தெற்கு, புளியங் கிணற்றடி வீதியில் மக்கள் நெருக்கமாக வாழும் பகுதியில் தொலைத்தொடர்பு கோபுரம் அமைக்கப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று போராட்டம் ஒன்று நடைபெற்றது.*



*அந்தப் பகுதியில் வசிப்பவர்களே இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர். நேற்று சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் தொலைத்தொடர்பு கோபுரம் அமைக்கப்பட்டு வரும் காணியின் வாயிலில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.*

*போராட்டம் குறித்துத் தகவலறிந்த பொலிஸார் அந்தப் பகுதியில் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.*

*போராட்டக்காரர்கள், "மக்களுக்கு மனநோய் வேண்டாம்", "மின்காந்த அலை, காற்றுக்கு நஞ்சு", "மக்களை உடல், உள ரீதியாக பாதிப்புக்கு உள்ளாக் காதீர்கள்", "எங்கோ போகும் இடி மின்னலை எம்மை நோக்கி இழுக்க வேண்டாம்", "நகர்த்து நகர்த்து தொடர்பாடல் கோபுரத்தை நகர்த்து" போன்ற சுலோகங்கள் அடங்கிய பாதாதைகளைத் ஏந்தியிருந்ததுடன், அவற்றை கோஷங்களாகவும் எழுப்பினர். (ஐ)*

# தொழிலுக்காக 397 தாதியர்கள் இஸ்ரேல் பயணம்


*கொழும்பு, ஜுலை 02*

*தாதிய தொழில் வாய்ப்புக்காக 397 பேர் இந்த ஆண்டில் இஸ்ரேல் சென்றுள்ளனர் என்று வேலை ரய்ப்பு அமைச்சு அறி வித்துள்ளது.*

*தாதியர் தொழில்வாய்ப்புக்கு தகுதிபெற்ற 64 ஆவது குழுவினர் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை இஸ்ரேல் பயணமாகவுள்ளனர்.*

*7 பேர் கொண்ட குழுவே இவ்வாறு இஸ்ரேல் செல்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)*

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



பகிர்வு -84

# ஒரு முகநூல் பக்கம் பற்றியது

**கணபதி சர்வானந்தா**

முகநூல் பல புரட்சிகளைச் செய்கின்ற ஒரு சமூக வலைத் தளம். பல இலட்சக் கணக்கான கணக்குகளைக் கொண்டு இயங்கும் அதன் பக்கங்கள் விசித்திரமான பல விடயங்களை மக்களிடம் கொண்டு சென்று சேர்க்கின்றன. அதனூடாகப் பகிரப் படும் விடயங்கள் பொதுவாக நன்மையளிப்பதோடு சில சமயங் களில் பலருக்குத் தீங்கினையும் ஏற்படுத்தி விடுகின்றன. அதனால் பாதிப்படைந்தவர்களில் சிலர் தற்கொலை செய்து கொண்டதுமுண்டு.

முகநூல் பற்றிப் பேசும்போது சில ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியச் சஞ்சிகையான ஆனந்தவிகடனில் நான் பார்த்த ஒரு விடயத்தை குறிப்பிடலாம் என்று எண்ணுகிறேன். "ஃபேஸ்புக்கால் பாதிக்கப்பட்டோர் சங்கம்..! களம் இறங்கிய காங்கிரஸ் தலைவி" என்ற தலைப்பினிலே அச் செய்தி வெளியிடப்பட்டிருந்தது.அச் செய்தி வருமாறு....

முகம் கூடத் தெரியாத பலருக்கு முகநூல் மூலம் பல உதவி கள் கிடைத்துள்ளதை யாரும் மறுக்க இயலாது. பலருக்கு அதனூ டாகத் திருமணமும் நடைபெற்றிருக்கிறது. அதே முகநூல் இளைய சமுதாயத்தின் முகவரியை மறைமுகமாக அழித்து வருகிறது என்றால் அதுவும் உண்மையே.

இந்தியாவில் முகநூல் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை அதிகம். அதிலும் தமிழகத்தில் முகநூலிலேயே பலர் இரவு, பகல் என பாராமல் அதனுள் மூழ்கியிருக்கின்றனர். முகநூலில் அறிமுகம் இல்லாதவர்களின் நட்பு அழைப்புகள் தினமும் நமக்கு வந்து குவியும். அவர்கள் யார்? என்ற விவரம் கூட தெரியாமல் நண்பர்கள் வட்டாரத்தில் நாமும் இணைத்து வருகிறோம். என்னு டைய முகநூலில் இத்தனை பேர் நண்பர்களாக இருக்கிறார்கள் என்ற பெருமைக்காக அதனைப் பலர் வாடிக்கையாக வைத்துள்ள னர். முகநூலால் அறிமுகமாகியவர்கள் பலர் தமது வாழ்க்கை யைத் தொலைத்து வருகிறார்கள் என்ற அதிர்ச்சித் தகவலை நம்மிடம் பகிர்ந்தார் அகில இந்திய மகளிர் காங்கிரஸ் கட்சியின் தேசிய செயலாளர் ஹசீனா சையத்.

"முகநூல் அறிமுகத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்காக "நாம் பப்ளிக் வெல்பெயர் அமைப்பு" என்ற பெயரில் ஒரு குரூப்பை நடத்தி வருகிறோம். இந்த அமைப்புக்கு சமூக வலைத்தளங்க ளால் பாதிக்கப்பட்டவர்கள் புகார்களைத் தெரிவித்து வருகின்றனர் என்று அச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

மேற் சொல்லப்பட்ட விடயம் இந்தியாவில் வாழும் ஒருவரின் பகிர்வாக இருந்தாலும் அது இலங்கைக்கும் பொருந்தும் என்ற வகையில் அதனை இப் பக்கத்தில் பகிர்ந்து கொண்டுள்ளேன். முகநூலில் பாதிப்புகள் பல விதத்தில் ஏற்படுகின்றன. இருந்தும் அதனின்று தம்மைப் பாதுகாத்துக்கொள்ள அல்லது அதனின்று வெளியேற உதவுவதாகச் சட்டங்கள் இன்னும் அமல்படுத்தப்பட வில்லை. பாதிக்கப்பட்டவர்கள் அது பற்றி பொலிஸ் நிலையத்தில் முறையிடலாம். ஆனால் அதற்குத் தகுந்தாற்போல் நீதி கிடைக்கும் என்று சொல்வதற்கில்லை.

அதுதான் தற்போதைய நிலை. எனவே முகநூல் விடயத்தில் மிகவும் அவதானமாக இருக்க வேண்டியவர்கள் நாம். முகநூல் கணக்கினை ஆரம் பிப்பது தொட்டு அதற்கு வழங்கும் சுய விபரங்கள் பற்றிய தகவல் கள் யாரேல்லாம் பார்க்கலாம், யார் பார்க்கக் கூடாது போன்ற விடயங்களைத் தீர்மானிக்கும் வசதி "செற்றிங்" இல் உண்டு. எனவே அதில் சென்று உங்கள் சுய விருப்பத்துக்கு ஏற்றாற்போல் கணக்கை ஆரம்பிக்கலாம். பெரும்பாலும் அது பற்றிப் பூரண அறிவற்றவர்களே தமது விபரங் களை பொதுவாகப் பகிர்ந்து பிரச்சினைகளில் மாட்டிக் கொள்ளு கிறார்கள்.

குறிப்பாக முகநூல் என்ற விடயத்தில் போலியாக ஆரம்பிக் கப்பட்டுச் செயற்பட்டுவரும் கணக்குகள் பற்றி நாம் அவதானமாக இருக்க வேண்டும். அவைதான் கடும்போக்குடைய செய்திகளைப் பரப்புவதையும், தனி நபர் பற்றிய கேவலமான செய்திகளைப் பரப்பி அவர்களுக்கு அப கீர்த்தி ஏற்படுத்துவதை நோக்கமாகவும் கொண்டு இயங்குகின்றன.பொதுவாக அரசியல்வாதிகளுக்கு இப்படிப்பட்ட போலிக்கணக்கினூடாகவே அபகீர்த்தி ஏற்படுத்தப் படுகின்றதை அவதானிக்கலாம்.

சில யோக்கியர்களும் இது விடயத்தில் அயோக்கியர்களாக மாறிவிடுகின்றனர். தமது கருத்தை நேரடியாகச் சொல்லத் திராணியற்றவர்களாகப் போலி முகநூல் வழியாகவே தமது கருத்தை வெளியிடுகின்றனர்.

முகநூலில் ஒருவரை இணைக்க விருப்பத்தைத் தெரிவிக்கும் போது அது அவரை எத்தனை காலம் தெரியும்? அவர் உங்கள் நட்பு வட்டத்தில் உள்ளவரா? போன்ற விடயங்களைக் கேட்டு அது பற்றிய விடயங்களை ஞாபகப்படுத்தினாலும் பலர் அதற்குப் பிழையான பதிலைச் சொல்லி அதனைக் கடந்து போவதையும் அவதானித்தோம்.

இருந்தும் முகநூல் பற்றிப் பூரண அறிவைப் பெற்று அதனை இயக்குபவர்கள் அதில் இருந்து உச்சகட்டப் பயனை அனுபவிக் கின்றனர். அதனூடாக நடைபெறும் நல்ல விடயங்கள் பல. அதில் நன்மைபெறுவதும் தீய பலன்களை அனுபவிப்பதும் உங்கள் கைகளில் தானிருக்கிறது.

முகநூலில் "MICRO" என்று ஒரு கணக்கிருக்கிறது. அதிலே நுண் உயிர்களைப் பற்றிய விடயங்களைப் பகிர்கிறார்கள். பொதுவாக அவற்றின் படங்கள். நுண் கமெராக்களால் பல மடங்கு பெருப்பிக்கப்பட்டவை. பார்ப்பதற்கு ஆச்சிரியமாக இருக் கும். உச்ச பட்ச தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி அவற்றைப் படம் பிடித்துக் காட்சிப் படுத்துகிறார்கள். அவற்றைப் பார்க்க வியப்பாக இருக்கிறது. அத்தனை துல்லியமதாக அவற்றின் உடல் பாகங்களை அதில் பார்க்கலாம். அவற்றுள் பல வற்றை நாம் கடந்த காலங்களில் பார்த்ததில்லை என்றுதான் சொல்ல லாம்.

இன்னொரு தளத்தில், அதுவும் உயிரினங்கள் பற்றியது. அவை தம் இனப்பெருக்கத்துக்காகக் கையாளும் வழிமுறைகள் வியப்புக்குரியனவாகத் தென்பட்டன. அவை ஐந்து அறிவுகள் உடையன என அவற்றைச் சிறுமைப்படுத்தி விடுகிறோம். ஆனால் அவை உணர்ந்து அறிகின்றதொரு ஆற்றலை மட்டும் கொண்டு தமக்குரிய எல்லாவற்றையும் பெற்றுக் கொள்ளுகின் றன. உணவில் தொடங்கி இனச் சேர்க்கை வரைக்கும் அவைகள் மிகவும் துல்லியமாகச் செயற்படுகின்றன.

சுருங்கச் சொன்னால் முகநூல் அதனை உபயோகிப்பவர் கொண்டுள்ள நோக்கம் மற்றும் அபிலாஷைகளை அடிப்படை யாகக் கொண்டே பயனளிக்கிறது. நோக்கம் பிழையானால் அதுவும் பிழையான வழிக்கே உங்களை அழைத்துச் செல்லும் என்பதுதான் உண்மை. ●

# இந்தவார ராசிபலன் 02.07.2023 - 08.07.2023

ஞாயிற்றுக்கிழமை
சோபகிருது வருடம் - ஆனி 17
நல்ல நேரம்: 7.30 - 9.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : சதுர்த்தசி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். மற்றவர்களுக்காகச் சில பொறுப்புகளை ஏற்பீர்கள். திட்டமிட்ட பயணங்களைத் தள்ளி வைக்கும் சூழல் உருவாகும். உத்தியோகஸ்தர்கள் நினைத்தது நடைபெறும். பண உதவிக்கான முயற்சிகளில் நல்ல பலன் கிடைக் கும். சொந்தத் தொழில் செய்பவர்கள் நல்ல திருப்பங்களைச் சந்திக்கலாம். வாடிக்கையாளர்களி டம் நிலுவையை வசூலிப்பீர்கள். கூட்டுத்தொழிலில் இருந்த மந்தமான நிலை மாறும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

பண வசதி பெருகும் வாரம் இது. குடும்பத்துக்கு தேவையான பொருட்களை வாங்குவீர்கள். பிரிந்து சென்ற சிலர் மீண்டும் வந்து சேர்ந்துகொள்வர். எதிர்பாராத திருப்பங்களைச் சந்திப்பீர்கள். தேக ஆரோக்கியத்தில் அதிக அக்கறை தேவை. உத்தியோகஸ்தர்களில் சிலருக்கு சம்பள உயர்வும், விரும்பிய இடமாற்றமும் கிடைக்கும். புதியவர்களிடம் அலுவலகம் சம்பந்தமான விஷயங்களைப் பேசாதிருப்பது நல்லது. சொந்தத் தொழிலில் நல்ல திருப்பங்கள் வந்துசேரும். வாடிக்கையாளர்களின் நிலுவைகள் வசூலாகும்

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

புதுமைகள் படைக்கும் வாரம் இது. நன்றி மறவாமல் நடக்கும் சிலரை நினைத்து மகிழ்வீர்கள். தந்தை, தாய் உடல்நலனில் கவனம் தேவை. எதிர்பாராத திருப்பங்களால் உற்சாகம் கூடும். வெளியூர் பயணத்தால் அலைச்சல் அதிகரிக்கலாம். வீண் பேச்சு களைத் தவிர்த்து காரியங்களில் கவனம் செலுத்துங்கள். உத்தியோ கத்தில் புதிய திருப்பம் காண்பீர்கள். அவசரம் காரணமாக கூடுதல் வேலைப்பளு வந்து சேரும். சொந்தத் தொழில் செய்பவர்கள் அதிக லாபம் பெற்று மகிழ்வர்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

புத்திசாலித்தனமாக செயல்பட்டு, காரியங்களை சாதித்துக் கொள் வீர்கள். வீடு, நிலம் வாங்கும் முயற்சிகளில் முன்னேற்றம் காணப் படும். கோபத்தைக் குறைத்து, பொறுமை, நிதானத்துடன் செயல்பட் டால் வெற்றி நிச்சயம். கொடுக்கல் வாங்கலில் சுமுக நிலை ஏற்படும். தள்ளிவைத்த பணி ஒன்றை உடனடியாக செய்ய வேண்டியதிருக்கும். அலுவலகத்தில் பணியாற்றுவோர் சிலருக்கு, பதவி உயர்வோடு வெளியூர் மாற்றம் கிடைக்கக்கூடும்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

வார பலன்கள் பிறரை பாராட்டும் மனம் கொண்ட சிம்ம ராசி அன்பர்களே! நினைத்த காரியங்கள் இனிதே நிறைவேறும். தந்தை வழியில் உதவிகள் கிடைக்கலாம். நிதானமாகச் செயல்பட்டு காரியங்களில் வெற்றி தேடுவீர்கள். புதிய முயற்சிகளில் முன்னேற்றம் காணலாம். கனிவான பேச்சுகளால் காரியங்களை சாதிப்பீர்கள். அதேநேரம் ஆரோக்கியத்திற்கு குறிப்பிட்ட அளவு பணத்தை செலவு செய்ய நேரிடலாம்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

உறவினர்கள் வழியில் மனக்கசப்பு ஏற்படும். எதிர்பார்த்த உதவி கள் தள்ளிப்போகலாம். மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்க வேண்டாம். கடன் பிரச்சினை தொல்லையளித்தாலும் பாதிப்பு ஏற்படாது. தந்தை வழி உறவுகளால் பலன்கள் கிடைக்கலாம். உத்தியோகஸ்தர்கள் தங்கள் பணிகளில் கவனமாக செயல்பட வேண்டும். பண சம்பந்த மான தொழிலில் உள்ளவர்கள் கவனமாக நடந்து கொள்வது அவசியம். அலுவலகப் பதிவேடு களை சரிபார்க்க வேண்டிவரும். தொழில் செய்பவர்களுக்கு எதிர்பார்க்கும் லாபம் இருக்காது.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

அரசு சம்பந்தமான காரியத்தில் முயற்சியின் பேரில் வெற்றி பெறலாம். கேட்ட இடத்தில் உதவி கிடைக்காமல் அதிருப்திக்கு ஆளாவீர்கள். எதிலும் அகலக் கால் வைக்காமல் நிதானமாக நடந்து கொள்ளுங்கள். உத்தியோகஸ்தர்களுக்கு உயரதிகாரிகளின் ஆதரவு இருந்தாலும் பொறுப்புகளில் கவனம் தேவை. அனைவரிடமும் சுமுகமாக நடந்துகொள்வது அவசியம். சொந்தத் தொழில் செய்பவர்களுக்கு எதிர்பார்க்கும் லாபம் கிடைத்தாலும், அலைச் சலும் அதிகரிக்கும். தொழில் சம்பந்தமான போட்டிகளைச் சமாளிக்க வேண்டியதிருக்கும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். நண்பர்கள் மூலம் எண்ணக் கனவுகளை நனவாக்கிக் கொள்வீர்கள். தொழில் ரீதியான அலைச்சல் இருந்தாலும், ஆதாயம் இருக்கும். தொழிலில் போட்டிகள் விலகி புத்துணர்ச்சி பெறுவீர்கள். நண்பர்கள், உறவினர்களிடம் தடிப்பான வார்த்தைகளைப் பேசி சிக்கலில் மாட்டிக்கொள்ள வேண்டாம். உத்தியோகஸ்தர்கள், உயரதிகாரிகளின் ஆதரவோடு சில முக்கிய காரியங்களை முடிப்பீர்கள்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

எடுத்த காரியங்கள் எதிர்பாராத வெற்றிகளை அடையும். சிலர் உங்களை நம்பி புதிய பொறுப்புகளை ஒப்படைக்கலாம். சோம்பல், சோர்வு அகன்று சுறுசுறுப்பாகச் செயலாற்றுவீர்கள். தொழில் போட்டிகளை வெற்றிகரமாகச் சமாளிப்பீர்கள். மற்றவர்களால் செய்ய முடியாத காரியம் ஒன்றை சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். உத்தியோகஸ்தர்கள் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறலாம்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

பணப் பரிவர்த்தனையில் கவனம் தேவை. வீண் விவாதங்க ளைத் தவிர்த்து அனைவரிடமும் சுமுகமாக நடந்து வந்தால், பிரச்சி னைகளைத் தவிர்க்கலாம். நிதி நிலைகள் மேம்பட புதிய வரவுகள் வந்து சேரலாம். உத்தியோகஸ்தர்கள் பொறுப்புகளில் கவனமாக இருந்தாலும் சிறுசிறு பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடும். சந்திப்பீர்கள். கூட்டுத் தொழிலில் வியாபாரம் நன்றாக இருந்தாலும், அலைச்சலும் இருக்கும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவதை தவிர்க்கவும். வழக்கு விவகாரங்களில் அனுகூலமான திருப்பங்களைக் காணமுடியும். உத்தியோகஸ்தர்கள் பொறுப்புகளில் கவனமாக இல்லாவிட்டால் பிரச்சினைகளை சந்திப்பீர்கள். கொடுக்கல் வாங்கலில் நிதானம் தேவை. சொந்தமாகத் தொழில் செய்பவர்கள் வியாபாரத்தில் ஏற்றம் காண்பர். தள்ளிப் போட்ட காரியம் ஒன்றை உடனே செய்து முடிக்கும் சந்தர்ப்பம் உருவாகும். கூட்டுத்தொழிலில் கூட்டாளிகளின் ஆலோசனையைக் கேட்டு செயல்பட வேண்டிய நிலைவரும்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

பணப்பரிவர்த்தனையில் நிதானம் தேவை. சொந்த பந்தங்களின் விவகாரங்களில் தலையிடாமல் ஒதுங்கி இருப்பது நன்மை தரும். உத்தியோகஸ்தர்கள் நிதானமாகவும், பொறுமையாகவும் தங்கள் பணிகளில் ஈடுபடவேண்டும். சொந்தமாகத் தொழில் செய்பவர்கள், வாடிக்கையாளர்களிடம் இருந்து நிலுவையை வசூலிப்பதில் தாமதம் ஏற்படலாம். பணியாளர்களின் வேலையை கண்காணித்து வருவது நல்லது. கூட்டுத்தொழிலில் உள்ளவர்கள், வியாபாரத்தில் அதிக அக்கறை காட்டுவது அவசியம். குடும்பத்தில் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்பட்டாலும், பெண்களே சாமர்த்தியமாகச் சமாளித்து விடுவார்கள்.

# காவு கொள்ளப்படும் காடும் கடலும் அழிவின் விளிம்பில் யாழ்ப்பாணம்?



எஸ். ஆர். கரன்

இலங்கையின் வடக்கு மாகாணத்திலுள்ள வன்னி காடுகள் திட்டமிட்டு அழிக்கப்பட்டு வருகின்றன. கிரவல் அகழ்வு - மண், மணல் அகழ்வுகளின் நீட்சியாகவும் காடுகள் அழிக்கப்படுகின்றன - அழிவடைகின்றன.

வடக்கு மாகாணத்திலுள்ள காடுகள் மட்டுமின்றி நிலம், கடல், கனிய வளங்கள் என்பன திட்டமிட்ட வகையில் சுரண்டப்பட்டு வருகின்றன. வன்னிக் காடுகளுக்கு மட்டுமின்றி இயற்கை வளங்கள் அனைத்திற்கும் இருந்த பாதுகாப்பு அரண்கள் முற்றாக அகற்றப்பட்ட சூழ்நிலையே தற்போது நிலவுகின்றது.

இயற்கை வளங்கள் வகை தொகை இன்றி சுரண்டப்படுவதற்கும் அழிக்கப்படுவதற்கும் பாதுகாப்பு அரண்கள் இல்லாமல் செய்யப்பட்டதே பிரதான காரணமாகும். விடுதலைப் புலிகள் வன்னிக் காடுகளைப் பாதுகாத்தார்கள் - காடுகளை உருவாக்கி தம்மை பலப்படுத்திக் கொண்டார்கள் என்று கூறுபவர்களும் உண்டு.

இதேவேளை, தமது வாழ்விடங்களை அழிப்பதற்கு யாரும் முயற்சிக்க மாட்டார்கள். அவ்வாறுதான் விடுதலைப் புலிகளும் வன்னிக் காடுகளை தமது வாழ்விடமாக மாற்றிக் கொண்டதால் காடுகளை பாதுகாத்து - தம்மையும் பாதுகாத்துக் கொண்டனர்.

புலிகளை அழித்து விட்டோம் என்றவர்கள் இன்று காடுகளையும் அழித்தொழிக்கும் கைங்கரியங்களில் இறங்கியுள்ளனர்.

இயற்கை வளங்களை அழிப்பது மனிதன் தற்கொலை செய்து கொள்வதற்கு சமம். யாரோ ஒருவர் வருமானம் ஈட்டிக் கொள்வதற்காக எம்மைச் சூழ்ந்துள்ள இயற்கை வளங்களை நாம் தாரை வார்த்துக் கொடுத்து விட முடியாது.

வன்னிக் காடுகள் தமிழர்களின் மிகப்பெரிய பலம். அதனைச் சிதைத்து சிதலமடைய செய்வதன் மூலம் தமிழர்களின் இருப்பை இல்லாமல் செய்ய முடியும் என்பதை இன அழிப்பு குழுக்கள் நன்கு அறிந்து வைத்திருக்கின்றன. அதற்கு எம்மவர்களும் துணைபோகின்றனர் என்பதே மிகப்பெரிய வேதனை.

வன்னிக் காடுகள் இலங்கையின் வட பகுதியில் அமைந்துள்ளன வன்னிக் காடுகள். முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களின் பிரதான அடையாளமாகக் காணப்பட்ட இந்தக் காடுகளை முகப்பு தோற்றத்தில் மட்டுமே காணக்கூடியதாக இருக்கின்றது.

அதாவது, ஏ -9 வீதியின் இரண்டு பக்கங்களிலும் கண்ணுக்கு எட்டிய தூரத்தில் மட்டுமே காடுகளை காணலாம். உள்ளே சென்று பார்த்தால் வெறும் தரையை மட்டுமே விட்டு வைத்துள்ளனர்.

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒரு காலகட்டத்தில் மிகவும் அடர்த்தியாகவும் மழை வீழ்ச்சிக்கான தோற்றுவாயாகவும் காணப்பட்ட காடுகள் பல்வேறு தரப்பினராலும் அழிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பான உண்மைகளை உரிய ஆதாரங்களுடன் வெளி உலகுக்கு கொண்டு வந்த இரண்டு செய்தியாளர்கள் மரக் கடத்தல் காரர்களால் அச்சுறுத்தப்பட்டு தாக்கப்பட்டனர்.

இது ஒருபுறம் இருக்க வவுனியா மாவட்டத்தில் அபிவிருத்தியின் பெயராலும் மக்கள் பெருக்கம் - திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களாலும் காடுகள் அழிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, தற்போது கரும்புச் செய்கை - சீனித் தொழிற்சாலை என்ற போர்வையில் 70 ஏக்கர் வனம் சார்ந்த காணிகளை கையகப்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அடர்ந்த வனங்கள் அழிக்கப்பட்டு ஹோட்டல்களும் அடுக்கு மாடி கட்டடங்களும் உருவாக்கப்பட்டு வரும் சூழ்நிலையில் இயற்கை சமநிலை இழந்து தத்தளித்து வருகிறது.

சேற்று கடலாகும் யாழ். குடாக்கடல்

வடக்கின் பெரும் வளமாக வன்னிக் காடுகள் எவ்வாறு நோக்கப்படுகின்றனவோ அதேபோன்று கடல் வளமும் பிரதான பங்கு வகிக்கிறது.

ஒருபுறம் வன்னிக் காடுகள் அழிப்பு மறுபுறம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி கடல் வளங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு - அழிக்கப்பட்டு வருகின்றன. இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறிய தொழில் நடவடிக்கைகளால் வடக்கு கடல் வளம் சூறையாடப்படும் அதே வேளை கடலட்டை பண்ணைகள் அமைக்கப்படுவதால் கடல் மாசடைதல் அதிகரித்து வருகின்றது. யாழ்ப்பாணம் பாசையூர் கடற்றொழிலாளர் சங்கத்தில் 25.06.2023 அன்று நடைபெற்ற கலந்துரையாடலில் சமூக செயல்பாட்டாளர் ம. செல்வின் அதிர்ச்சியூட்டும் பல தகவல்களை வெளியிட்டிருந்தார்.

அவற்றில் மிகவும் முக்கியமான விடயமாக இன்னும் 10 வருடங்களில் யாழ். குடாக்கடல் சேற்றுக்கடலாக மாறும் ஆபத்து உருவாகியுள்ளது என்பதை சாதாரணமானதாக எடுத்துக் கொள்ள முடியாது.

வடக்கில் குறிப்பாக யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள ஆழம் குறைந்த கடற்கரைகளில் எந்த விதமான ஆய்வுகளும் திட்ட மிடல்களும் - முறைப்படுத்தல்களும் இன்றி அமைக்கப்பட்டுள்ள கடலட்டை பண்ணைகளால் கடல்வாழ் உணவுச் சங்கிலியில் பெரும் தாக்கம் ஏற்பட்டுள்ளது.

இது கடல்வாழ் உயிரினங்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு மட்டுமல்ல ஒட்டுமொத்த உயிர்ப் பல்வகைமையிலும் ஏற்பட்டுள்ள பாதிப்பு என்பதை மனித குலம் புரிந்து கொள்ள வேண்டும்.



கடலிலே இயற்கையாகத் தோன்றி இயற்கையாக வளர்ந்து கடல் மாசடைவதைத் தடுத்து வந்த அட்டைகளை பண்ணைகள் அமைத்து - அடைத்து வைத்து தீனி போட்டு அவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணியை - டொலரை ஈட்டுகின்றனர்.

எமது கடல் வளத்தை அழித்து யாரோ ஒருவர் இருவர் டொலர் பெற்றுக் கொள்வதற்காக உணவிற்கும் பண்பாட்டிற்கும் பொருத்தமில்லாத அட்டைகளை வளர்ப்பது முட்டாள்தனமானது.

யாழ். குடாக்கடல் ஏற்கனவே பல காரணங்களால் மாசடைந்து கிடக்கிறது. இந்நிலையில் சேத்துக் கடலாக மாறினால் மக்கள் வாழ முடியாத சூழல் ஏற்படும்.

காப்பெற் வீதிகள் அமைக்கப்பட்ட போதும் ரயில் பாதைகள் (தண்ட வாளங்கள்) போடப்பட்ட போதும் நீரோட்டங்கள் தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்படவில்லை. இதுவும் கடல் மாசடைய காரணம் என்று குறித்த கலந்துரையாடலில் சுட்டிக்காட்டப்பட்டது.

கடலட்டை பண்ணைகள் அமைக்கப்படுவதற்கு எதிராக குரல்கள் எழுந்த வண்ணமே உள்ளன. இருப்பினும் அதிகார வர்க்கத்தின் துணையுடன் கடலட்டை பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளதாலும் - அமைக்கப்பட்டு வருவதாலும் எதிர்ப்பாளர்களின் குரல்கள் நசுக்கப்பட்டு வருகின்றன.

கடலட்டை பண்ணைகள் வேண்டாம் என்று எதிர்த்துப் போராடியதால் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் சம்மேளனத் தலைவர், உப தலைவர் உட்பட அனைத்து உறுப்பினர்களும் சட்ட விரோதமான முறையில் அகற்றப்பட்டு கூட்டுறவு உதவி ஆணையாளரால் புதிய தலைவர், உப தலைவர், உறுப்பினர்கள் நியமிக்கப்பட்ட சம்பவம் நடந்தேறியது.

இப்போது கடலட்டை பண்ணைகள் வேண்டாம் என்று எதிர்ப்பு தெரிவிக்கும் கடற்றொழிலாளர்களின் தொழில் உரிமை - கடல் மீது அவர்களுக்கு இருக்கும் உரிமை என்பனவும் பறிக்கப்படும் ஆபத்தும் உருவாகியுள்ளது.

இத்தகைய நடவடிக்கைகள் கடற்றொழிலாளர்களை கடலிலிருந்து அந்நியப்படுத்தும் அநீதியான செயல்பாடாகும்.

இது தொடர்பில் கடற்றொழிலாளர்கள் சார்ந்த சங்கங்கள் மட்டும் அக்கறை காட்ட வேண்டும் என்று ஏனைய தரப்பினர் ஒதுங்கியிருக்க முடியாது.

சங்கங்களின் பங்களிப்பு காடுகள் தானே அழிக்கப்படுகின்றன அது தொடர்பில் நாங்கள் ஏன் கவலைப்பட வேண்டும் என்று கடற்றொழிலாளர்கள் சார்ந்த சங்கங்கள், சமாசங்கள், சம்மேளனங்கள் அசண்டையீனமாக - அமைதியாக இருந்து விட முடியாது.

கடல் வளம், வன வளம் அழிக்கப்படும்போது அல்லது சூறையாடப்படும் போது விவசாய சங்கங்கள் - சம்மேளனங்கள், ஆசிரியர் சங்கங்கள், மாணவர் சங்கங்கள், தொழிலாளர் சங்கங்கள் அமைதியாக நடப்பதை வேடிக்கை பார்த்தால் இயற்கை பேரிடர் காலங்களில் அதிக விலை கொடுக்க வேண்டி ஏற்படும்.

எனவே, சுற்றுச்சூழல் சார்ந்து நாம் அனைவரும் சிந்திக்க வேண்டும். ஊரிலே ஒரு குளம் தூர்வாரப்பட்டு மழைநீர் சேகரிக்கப்பட்டால் வீட்டு கிணற்று நீர் மட்டம் எவ்வாறு உயர்கின்றதோ - நிலத்தடி நீரின் உவர்த்தன்மை குறைந்து நீர்வளம் பெருகுகின்றதோ அதேபோன்று காடுகள் அழிக்கப்படுவதைத் தடுத்து மழை வீழ்ச்சியையும் கடல் மாசடைவதைத் தடுத்து உயிர்ப் பல்வகைமையைப் பாதுகாப்பதோடு எமக்குத் தேவையான புரதச்சத்துள்ள கடல் உணவுகளை நியாயமான விலையில் பெற்றுக் கொள்வதற்கான விழிப்புணர்வையும் ஏற்படுத்த வேண்டும்.



# இலங்கை ஆணைக்குழுக்கள் மீது அவநம்பிக்கை



வீரகத்தி தனபாலசிங்கம்

தற்போது ஜெனீவாவில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 53 வது கூட்டத்தொடரில் இலங்கை நிலைவரம் தொடர்பில் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வொல்கர் ரேக்கின் வாய்மூல அறிக்கையை தவிர வேறு எந்த வகையிலும் முக்கியத்துவம் கொடுக்கப்படுவதற்கு வாய்ப்பில்லை என்றே பொதுவில் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், இலங்கை விவகாரத்தில் பெரும்பாலும் சகல பிரச்சினைகள் குறித்தும் அங்கு கரிசனை காட்டப்பட்டிருக்கிறது.

உயர்ஸ்தானிகரின் வருடாந்த அறிக்கை, மனித உரிமைகள் பேரவையில் இலங்கை விவகாரம் தொடர்பான மைய நாடுகளின் (Core Group of countries on Srilanka) அறிக்கை மற்றும் உயர்ஸ்தானிகரின் வாய்மூல அறிக்கை மூன்றிலும் பொறுப்புக்கூறல் தொடர்பில் இலங்கையின் அக்கறையின்மை குறித்து விசனம் வெளியிடப்பட்டிருக்கிறது.

வொல்கர் ரேக் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகராக 2022 அக்டோபரில் பதவியேற்ற பிறகு வருடாந்த அறிக்கையை மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் வெளியிட்டது இதுவே முதற்தடவையாகும்.

அந்த அறிக்கையில் இலங்கை தொடர்பாக குறிப்பிடுகையில், "பொறுப்புக்கூறலுடன் தொடர்புடைய மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களில் உள்ள அம்சங்களை இலங்கை நிராகரித்திருப்பது கவலைக்குரியதாக இருக்கின்ற போதிலும், களத்தில் செயற்படுகின்ற எமது அமைப்புக்களுடன் அது தொடர்ந்து பணியாற்றி வந்திருக்கிறது. கடந்த தசாப்தத்தில் மனித உரிமைகளுடன் தொடர்புடைய பல்வேறு விவகாரங்களில் ஆணை கொண்ட ஐக்கிய நாடுகள் அதிகாரிகள் 12 தடவைகள் இலங்கைக்கு விஜயங்களை மேற்கொண்டிருந்தனர். அவர்களின் விதப்புரைகளை நடைமுறைப்படுத்துமாறு அரசாங்கத்தை நான் ஊக்கப்படுத்துகிறேன்" என்று கூறியிருக்கிறார்.

கனடா, ஐக்கிய இராச்சியம், அமெரிக்கா, மாலவி, மொன்டிநீக்ரோ, வடக்கு மெசடோனியா ஆகிய ஆறு நாடுகளைக் கொண்ட மைய நாடுகளின் அறிக்கையை ஜெனீவாவில் உள்ள மனித உரிமைகளுக்கான ஐக்கிய இராச்சியத்தின் தூதுவர் றீட்டா பிரெஞ்ச் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் தொடங்கிய மறுநாள் ஜூன் 20 வெளியிட்டார். அதன் விபரம் வருமாறு:

"காணிகளை திருப்பிக் கையளித்தல், நீண்டகால தடுப்புக்காவல் மற்றும் ஊழல் தொடர்பான அக்கறைகள் தொடர்பில் இலங்கையின் ஆரம்ப நடவடிக்கைகளை நாம் வரவேற்கிறோம். இந்த நடவடிக்கைகள் சகல இலங்கையர்களினதும் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான செயன்முறையொன்றின் தொடக்கத்துக்கு ஒரு அடிப்படையாக அமைய முடியும்.

"பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டுவருவது குறித்து நாம் விசனம் கொண்டுள்ளோம். அந்த சட்டத்தை பதிலீடு செய்வதற்கான இலங்கை அரசாங்கத்தின் தற்போதைய முயற்சிகளை நாம் ஏற்றுக்கொள்கின்ற அதேவேளை, பயங்கரவாதத்துக்கு எதிரான சட்டம் இலங்கையின் சர்வதேச கடப்பாடுகளுடன் ஒத்திசைவானதாக அமைவதை அரசாங்கம் உறுதிசெய்ய வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

"கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்தையும் ஒன்றுகூடுவதற்கான சுதந்திரத்தையும் பாதுகாக்குமாறு அரசாங்கத்தை நாம் கேட்டுக்கொள்கிறோம்.

"நல்லிணக்கத்துக்கான அதன் கடப்பாட்டை இலங்கை முன்னெடுக்கும் போது வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், சகல தரப்புகளையும் அரவணைக்கும் அணுகுமுறை ஆகியவற்றின் முக்கியத்துவத்தை நாம் வலியுறுத்துகிறோம். கடந்தகால பணிகளை அடிப்படையாகக் கொண்டு பயனுறுதியுடைய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். முரண்நிலைகளுக்கான அடிப்படைக் காரணிகளையும் தண்டனையின்மையையும் (Impunity) கையாளுவதற்கு முன்வைக்கப்பட்ட விதப்புரைகளை நடைமுறைப்படுத்தவேண்டும்.

"நாட்டின் தேர்தல் முறைகளின் மீதான மக்களின் நம்பிக்கையை பேணுவதன் மூலம் இலங்கை அதன் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தை பாதுகாக்கவேண்டியதும் நிறுவனங்களினதும் ஆணைக்குழுக்களினதும் சுயாதீனத்தை உறுதிப்படுத்தவேண்டியதும் முக்கியமானதாகும்.

"ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகருடனும் அவரது அலுவலகத்துடனும் ஒத்துழைத்துப் பணியாற்றுமாறு இலங்கைக்கு அழைப்பு விடுக்கும் நாம் மனித உரிமைகள் பேரவையின்



வொல்கர் ரேக்

51-1 தீர்மானத்தை கையாளுவதில் இலங்கைக்கு தொடர்ந்து ஆதரவளிக்க தயாராக இருக்கிறோம்."

**உயர்ஸ்தானிகரின் வாய்மூல அறிக்கை**

மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வொல்கர் ரேக்கின் சார்பில் வாய்மூல அறிக்கையை பிரதி உயர்ஸ்தானாகர் நடா அல் - நஷீவ் ஜூன் 21 மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் வெளியிட்டார்.

வொல்ர் ரேக்கின் வருடாந்த அறிக்கையையும் மைய நாடுகளின் அறிக்கையையும் போன்று ஒப்பீட்டளவில் மென்மையானதாக வாய்மூல அறிக்கை இருக்கவில்லை. இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் கடுமையான கருத்துக்களை கொண்டதாக அமைந்த அந்த அறிக்கை பொருளாதார நெருக்கடி, இனப்பிரச்சினைக்கு அரசியல் இணக்கத் தீர்வைக் காண்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுக்கும் முயற்சிகள் மற்றும் கடந்த வருடத்தைய அறகலய மக்கள் கிளர்ச்சி என்று பல்வேறு பிரச்சினைகளை பற்றிய உயர்ஸ்தானிகரின் விமர்சன அடிப்படையிலான கருத்துக்களைக் கொண்டதாக இருந்தது.

உள்நாட்டுப் போரின் இறுதிக்கட்டங்களில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்கள் (போர்க் குற்றங்கள்) குற்றச்சாட்டுக்களை விசாரணைசெய்து குற்றச்செயல்களுக்கு பொறுப்பானவர்களை நீதியின் முன்னால் நிறுத்துவதற்கு நம்பகமான பொறிமுறை இல்லாத நிலையில் பல்வேறு நாடுகளின் நியாயாதிக்கத்தின் கீழ் முன்னெடுக்கப்படும் விசாரணைகளில் விசேட குழு ஈடுபாடு காட்டிவருவதாக பிரதி உயர்ஸ்தானிகர் தெரிவித்தார்.

2021 மார்ச் 23 மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட 46-1 தீர்மானத்தின் பிரகாரம் இலங்கையில் மனித உரிமை மீறல்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய குற்றச்செயல்கள் தொடர்பில் சான்றுகளையும் சாட்சியங்களையும் சேகரித்து பல்வேறு நாடுகளின் நியாயாதிக்கங்களின் கீழ் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படக்கூடிய விசாரணைகளுக்கு உதவும் நோக்கில் அமைக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலலகத்தின் இலங்கை பொறுப்புக்கூறல் செயற் திட்டத்தையே (OHCHR Sri Lanka accountability project 2021) விசேட குழு என்று அவர் குறிப்பிட்டார். ஜெனீவாவில் இருந்து இயங்கும் அந்த குழுவின் செயற்பாடுகளில் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

முன்னைய மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் அறிக்கையில் குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்கள் என்று நம்பத் தகுந்தவர்களுக்கு எதிராக, உலகளாவிய நியாயாதிக்கச் சட்டங்களுக்கு அமைய, வெளிநாடுகள் இலங்கையின் போர்க் குற்றவாளிகளைக் கைதுசெய்வது, அவர்களின் சொத்துக்களை முடக்குவது போன்ற நடடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று கோரப்பட்டிருந்தது கவனிக்கத்தக்கது.

கடந்தகால உரிமை மீறல்களை நேரடியாக ஏற்றுக்கொண்டு நம்பகமான விசாரணைகளை முன்னெடுத்து சம்பந்தப்பட்டவர்களை நீதியின் முன்னால் நிறுத்துவது அடிப்படையில் இலங்கை அரசாங்கத்தின் பொறுப்பு என்கிற அதே வேளை " பொறுப்புக்கூறல் பற்றாக்குறை " (Accountability Deficit) நீடிக்கும் வரை செயன்முறைகளில் சர்வதேச சமூகம் ஆதரவை வழங்கும் பங்கை வகிக்கலாம், வகிக்கவேண்டும் என்று கூறிய நடா அல் - நஷீவ் தண்டனையின்மை நீடிக்கும்வரை இலங்கை மெய்யான நல்லிணக்கத்தையோ அல்லது நிலைபேறான அமைதியையோ அடையப்போவதில்லை என்று சுட்டிக்காட்டினார்.



நடா அல் - நஷீவ்

தமிழ்க் கட்சிகளுடனான ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் பேச்சுவார்த்தைகளை உற்சாகப்படுத்துகின்ற அதேவேளை தொல்லியல் ஆய்வு, வனப்பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு நோக்கங்களுக்காக நிலம் சுவீகரிக்கப்படுவதை நிறுத்துவதாக அவர் வழங்கிய உறுதிமொழியை பிரதி உயர்ஸ்தானிகர் வரவேற்றிருக்கிறார்.

பொருளாதார நெருக்கடி இலங்கையர்களின் உரிமைகள் மற்றும் நல்வாழ்வு மீது தொடர்ந்தும் கடுமையான பாதிப்பை ஏற்படுத்துவதாக கூறிய அவர் சர்வதேச நாணய நிதியத்தின் 290 கோடி டொலர்கள் கடனுதவியை "முக்கியமான முதற்படி" என்று வர்ணித்ததுடன் பொருளாதாரச் சீர்திருத்தங்களின் சுமை சமத்துவமின்மைகளை மேலும் தீவிரப்படுத்தாமல் இருப்பதை உறுதிசெய்யுமுகமாக வலுவான சமூகப்பாதுகாப்பு திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கடந்த வருடத்தைய மக்கள் கிளர்ச்சி பற்றி குறிப்பிட்ட அவர் நீண்டகால சவால்களைக் கையாளக்கூடிய வரலாற்று மாறுதலை ஏற்படுத்தக்கூடியதாக கிளர்ச்சியின் முழுமையான உள்ளார்ந்த ஆற்றல் இன்னமும் முறையாக புரிந்துகொள்ளப்பட்டு செயல்வடிவம் கொடுக்கப்படவில்லை என்று குறிப்பிட்டார்.

வாய்மூல அறிக்கையில் மிகவும் முக்கியமாக கவனிக்கவேண்டியது உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு வொன்றை அமைப்பதற்கு அரசாங்கம் முன்னெடுக்கும் முயற்சி பற்றிய கருத்தாகும்.

கடந்த காலத்தில் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்த தவறிய பல ஆணைக் குழுக்களை இலங்கை கண்டிருக்கிறது. இன்று தேவைப்படுவது உண்மை, பரிகாரம், நினைவுகூரல், பொறுப்புக் கூறலின் பல்வேறு அம்சங்களை இணைக்கக்கூடியதும் வெற்றிகரமானதும் நிலைபேறானதுமான நிலைமாறுகால நீதிச்செயன்முறை ஒன்றை சாத்தியமாக்கக்கூடிய சரியான சூழ்நிலையை தோற்றுவிக்கவல்லதுமான தெளிவான முறையில் அமைந்த ஒரு திட்டமேயாகும் என்று அவர் குறிப்பிட்டார்.

மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களை நிறைவேற்றத் தவறியமைக்காக மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகம் அதன் முன்னைய அறிக்கைகளில் இலங்கையை பல தடவைகள் குறைகூறியிருந்தாலும் அதன் ஆணைக்குழுக்கள் மீது வெளிப்படையாக அவநம்பிக்கையை வெளியிட்டது இதுவே முதற்தடவையாக இருக்கவேண்டும்.

அதுவும் குறிப்பாக தென்னாபிரிக்க பாணியிலான உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஒன்றை அமைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கைளை முன்னெடுத்துவரும் வேளையில் பிரதி உயர்ஸ்தானிகரிடம் இருந்து இத்தகைய கருத்து வந்திருப்பது கவனிக்கத்தக்கது.

போர்க்கால உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்துவதற்கு நியமிக்கப்பட்ட பரணகம ஆணைக்குழு, உடலாகம ஆணைக்குழு, மகாநாம திலகரத்ன ஆணைக்குழு , கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு போன்றவற்றின் அறிக்கைகளை அரசாங்கங்கள்


றீட்டா பிரெஞ்ச்

நடைமுறைப்படுத்த தவறிய அனுபவங்களே வாய்மூல அறிக்கையில் அவ்வாறு கருத்தை அவர் வெளியிட்டதற்கான காரணமாக இருந்திருக்கவேண்டும்.

உள்நாட்டுப்போரின் முடிவுக்கு பின்னரான உடனடிக் காலப்பகுதியில் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒன்று கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விதப்புரைகளை இலங்கை நடைமுறைப்படுத்தவேண்டும் என்று கேட்டிருந்தது. ஆனால், அன்றைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தானே நியமித்த அந்த ஆணைக்குழுவை அலட்சியம் செய்ததையே நாம் கண்டோம்.

அதேவேளை, உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை அமைப்பதற்கு இலங்கையில் முயற்சிகள் முன்னெடுக்கப்படுவது இது முதற்தடவையல்ல. மனித உரிமைகள் பேரவையிடமிருந்து வந்த நெருக்குதல்கள் காரணமாக 2015, 2018, 2022 ஆம் ஆண்டுகளில் அத்தகைய ஆணைக்குழுவை அமைக்கும் யோசனைகள் முன்வைக்கப்பட்ட போதிலும், அதை சாத்தியமாக்குவதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படவில்லை.

(18ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்க் கட்சிகளை ஒன்றிணைப்பதில் டட்லி பாணியில் ரணிலின் பயணம்!

பனங்காட்டான்

தமிழர் பிரச்சனை தீர்வு தொடர்பாக வெளிநாடுகளில் தெரிவிக்கப்படும் கருத்துகளே அண்மைய நாட்களில் பலர தும் கவனத்தை ஈர்த்து வருகின்றன. இந்தக் கருத்துகளை வெளியிடுபவர்கள் சாதாரண அரசியல்வாதிகள் அல்ல. பிரச் சனைகளுக்குத் தீர்வு காணும் வல்லமை கொண்ட சர்வ அதிகார ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், இந்திய பார திய ஜனதா கட்சியின் தமிழக பிரமுக ரான கு. அண்ணாமலையும் இவர்களுள் முக்கியமானவர்கள்.

தமிழர் பிரச்சனையில் அரைவாசிக் குத் தீர்வு கண்டாகி விட்டது என்று இங்கிலாந்தில் வைத்து ரணில் விக்கிரம சிங்க, கனடிய முன்னாள் பிரதமரும் சர்வதேச ஜனநாயக ஒன்றியத்தின் நிகழ் காலத் தலைவருமான ஸ்ரீபன் ஹாப்பரி டம் கூறியுள்ளார்.

இந்தக் கருத்து தெரிவிக்கப்பட்ட காலத்தில் இந்திய பாரதிய ஜனதா கட்சி யின் கு. அண்ணாமலை இங்கிலாந்தி லுள்ள இலங்கை - இந்திய புலம்பெயர் தமிழர் மத்தியில் உரையாற்றுகையில் காணி மற்றும் காவற்துறை அதிகாரங் களுடன் 13ம் திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த தமிழருக்கு இந்தியா துணை புரியும் என்று தெரிவித்துள்ளார்.

மேற்கூறிய இரண்டு முக்கிய அறிவிப் புகளும் இலங்கைக்கு வெளியே தாயக அரசியலில் ஈழத்தமிழர் தீவிரமாக செயற் பட்டு வரும் நாட்டில் வைத்து தெரிவிக் கப்பட்டன என்பது கவனத்துக்குரியது.

இலங்கையின் இனப்பிரச்சனையை யும், தமிழர் மீது சிங்கள அரசு கட்ட விழ்த்துவிட்டு நிகழ்த்திய பேரழிவையும் நன்கறிந்தவர் ஸ்ரீபன் ஹாப்பர். இலங் கையின் மனித உரிமை மீறல்களையும், சிறுபான்மையினர் மீதான இம்சைகளை யும் இலங்கை அரசின் சட்டத்துக்கு புறம்பான செயற்பாடுகளையும் கண் டித்து 2011ம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை புறக்கணித்தவர் ஸ்ரீபன் ஹாப்பர்.

இலங்கையைப் பற்றி சகலதும் அறிந்தவரான இவர், இலங்கையில் முன்னையவர்களின் (ராஜபக்சக்கள்) ஆட்சி எவ்வாறு முடிந்தது என்பது அனைவரும் அறிந்தது என்ற முன்னுரை யுடன், இன்று தமிழ்ச் சமூகத்துக்கும் முழுமையான நாட்டுக்கும் இடையே நல்லிணக்கத்தை எவ்வாறு மேம்படுத்து கிறீர்கள் என்று வெகு சிம்பிளாக ஒரு கேள்வியை ரணிலின் முன்னால் தூக்கிப் போட்டார்.

இந்தக் கேள்வியை ரணில் நிச்சயம் எதிர்பார்த்திருக்க மாட்டார். ஆனாலும் தமது கெட்டித்தனத்தால் சமாளிக்க முனைந்தார். நல்லாட்சிக் காலத்தில் தாம் பிரதமராக இருந்தபோது தொடங் கிய நல்லிணக்க முயற்சியை, அன்று விட்ட இடத்திலிருந்து தொடர்கிறேன் என்ற பீடிகையுடன் ஆரம்பித்து, உண்மை மற்றும் நல்லிணக்கம் தொடர் பான சட்ட வரைபு, பயங்கரவாத எதிர்ப் புச் சட்ட வரைபு என்பவைகளை நிறை வேற்றி விட்டதாக அப்பட்டமான பொய்யை அவிழ்த்துவிட்டு ஸ்ரீபன் ஹாப்பரின் காதில் பூ வைக்க எத்தனித் தார்.

முன்னர் விட்ட இடத்திலிருந்து தமிழர் பிரச்சனையை தீர்ப்பதற்கு தமிழர் பிரதேச நாடாளுமன்ற உறுப்பினர்களு டன், பல முக்கிய விடயங்களில் இணக் கப்பாட்டுக்கு வந்துள்ளதாகவும் தெரி வித்ததோடு, அரைவாசிப் பிரச்சனைக்கு தீர்வு கண்டு விட்டதாக அடுக்கடுக்காக பொய்களை தெரிவித்தார்.

முக்கியமாக அதிகாரப் பகிர்வுக்கான தீர்வை தமிழரிடம் முன்வைத்துள்ளதாக வும் தெரிவித்துள்ளார். அதிகாரப் பகிர்வு என்பது இலங்கை - இந்திய ஒப்பந்தத் தின் 13ம் திருத்த அடிப்படையிலான மாகாண சபைகளின் முறைமை. 1987 யூலையில் ஜே.ஆரும் ராஜிவ் காந்தியும் செய்து கொண்ட இரு நாட்டு ஒப்பந் தமே இலங்கையின் அரசியல் அமைப் பில் 13ம் திருத்தத்தை ஏற்படுத்தியது. இதில், அதிகாரப் பகிர்வு என்பது காணி மற்றும் காவற்துறை அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்குவது.

வடக்கும் கிழக்கும் இணைந்த மாகாண சபை 1980களின் பிற்பகுதியில் இயங்கிய வேளையிலும் சரி, பின்னர் வடக்கு கிழக்கு மாகாண சபைகள் பிரிக் கப்பட்டு தனித்தனியாக இயங்கிய காலங்களிலும் சரி காணி, காவற்துறை அதிகாரங்கள் இவைகளுக்கு வழங்கப் படவில்லை. ஒருபோதும் இவை வழங்கப்படமாட்டாது என்றே கடந்த 35 ஆண்டுகளுக்கும் மேலாக இலங் கையை ஆட்சி புரியும் சிங்கள அரசுகள் கூறிவந்துள்ளன. இன்றும் அதே நிலைப் பாடுதான்.

இந்த அதிகாரங்களை வடக்கு, கிழக்கு மாகாண சபைகளுக்கு வழங்கி னால் தமிழீழம் என்ற தனிநாடு ஒரு காலத்தில் இலகுவாக உருவாக வாய்ப் பளிக்கும் என்ற வாய்ப்பாடே சிங்கள அரசியல்வாதிகளினதும் அவர்களின் அரசியல் கட்சிகளினதும் நித்திய வாலாயமாகவுள்ளது.

நிலைமை இப்படியிருக்கையில், பாரதிய ஜனதா கட்சியின் அண்ணா மலை காணியையும் காவற்துறையையும் உள்ளடக்கியதான 13ஐ நடைமுறைப் படுத்த இந்தியா துணை நிற்கும் என்று இங்கிலாந்தில் வைத்து கூறியுள்ளார். அடுத்தாண்டு நடைபெறவிருக்கும் இந்திய பொதுத்தேர்தலில் தமிழ் மக்க ளின் வாக்குகளை தமது கட்சிக்குப் பெற் றுக் கொடுக்கும் முயற்சியாகவே இவரது உறுதிமொழியை பார்க்க முடிகிறது.

யாழ்ப்பாணத்துக்கு பயணம் மேற்கொள்ளும் வேளைகளில் ஆட்சித் தரப்பினரையும் சிங்கள கட்சிகளின் தலைவர்களையும் சந்தித்து இந்தக் கருத்தை கூறமுடியாத அண்ணாமலை இங்கிலாந்தில் நின்று தெரிவித்ததானது அவரது சுய அரசியல் லாபத்துக்கானது என்பது வெளிப்படை.

இது ஒருபுறமிருக்க, தமிழர் பிரச்ச னைக்கு அரைவாசி தீர்வு கண்டாகிவிட் டது என்று ரணில் தெரிவித்ததை முக்கி யமாக நோக்க வேண்டியுள்ளது. அவரு டன் பேச்சு நடத்திய தமிழ் அரசியல் தலை வர்கள் என்ன சொல்கிறார்கள். இவர்க ளின் மௌனப் போக்கு ரணிலின் கருத் துக்கு வலுவூட்டுவதாகவே மாறுகிறது.

அடிக்கடி அழைத்துப் பேசிவிட்டு அதில் பின்னடைவு காண்பதே கடந்த ஒரு வருடமாக நிகழ்ந்தவை. 2022 இறுதிக்குள் தமிழர் பிரச்சனைக்குத் தீர்வு காணப்படுமென்று முன்னர் அறிவித்த ரணில், பின்னர் பெப்ரவரி 4 சுதந்திர தினத்தில் இறுதித் தீர்வு அறிவிக்கப்படு மென்றார். எதுவுமே இடம்பெற வில்லை.

பின்னர் மீண்டும் தமிழர் தரப்புடன் பேச்சுகளை ஆரம்பித்தார். நம்பகத் தன்மை இன்மையால் பேச்சுவார்த்தை தேக்கநிலைக்குச் சென்றது. இறுதியாக நடைபெற்ற சந்திப்பு தமிழரசின் மூத்த தலைவர் சம்பந்தனின் வேண்டுகோளுக் கிணங்கவே நடைபெற்றது என்பது பின்னரே தெரியவந்தது. இச்சந்திப்பின் இறுதியில் அடுத்த கூட்டம் யூலை மாத இறுதியில் இடம்பெறுமென தெரிவிக் கப்பட்டது.

அரசியல் தீர்வுக்கான ஒரு பேச்சு வார்த்தையாக அதிகாரபூர்வமாக இரு தரப்புக்குமிடையில் இடம்பெற்றிருந் தால் சந்திப்புகளின் இறுதியில் இரு தரப்பும் இணைந்த கூட்டறிக்கை யொன்று வெளியிடப்பட வேண்டும். ஆனால் இதுவரை எந்தச் சந்திப்பின் பின்னரும் அவ்வாறான கூட்டறிக்கை எதுவும் வெளிவந்ததாக தெரியவில்லை. மாறாக சந்திப்பில் கலந்து கொண்ட வர்கள் தங்கள் தங்கள் அபிப்பிராயத் துக்கு உட்பட்டவகையில் சில கருத்து களை ஊடகங்களில் வெளியிட்டு வருகின்றனர்.

ஆனால், இங்கிலாந்தில் வைத்து தமிழர் பிரச்சனைக்கு அரைவாசி தீர்வு கண்டுவிட்டதாக ரணில் தெரிவித்தது உண்மையா என்பதை பகிரங்கப்படுத்த வேண்டிய கடப்பாடு உடையவர்கள் அவரைச் சந்தித்த தமிழர் தரப்பு பிரதி நிதிகள். எதற்காகவோ அவர்கள் தரப்பி லிருந்து அதிகாரபூர்வமான அறிக்கை எதுவும் வெளிவரவில்லை.

ரணிலின் நல்லாட்சிக் காலத்தில் புதிய அரசியலமைப்பொன்று உருவாக் கப்பட்டதாக தமிழரசுக் கட்சியின் சுமந்திரன் அவ்வப்போது தெரிவித்து வந்தார். இதற்காக எத்தனையோ டசின் கூட்டங்கள் நடத்தப்பட்டு தமிழர் பிரச்சனைத் தீர்வுக்கு சாதகமான வரைபு தயாரிக்கப்பட்டதாகவும், அதன் பிதா மகர் தாமே என்பது போலவும் சுமந்திரன் தம்மை அடையாளப்படுத்தி வந்தார். இதனால்தானோ என்னவோ சுமந்திரனை "எங்களின் சட்டமா அதிபர்" என்று ரணில் பொதுநிகழ்வு களில் அழைத்து வந்தார். நல்லாட்சி முடிந்து ரணில் ஆட்சி ஒரு வருடமாகி யும் சுமந்திரன் கூறிய நல்லாட்சிக் கால புதிய அரசியலமைப்பு வரவுக்கு என்னா னது என்று தெரியவில்லை. யாரிடம் கேட்பது என்பதும் புரியவில்லை.

அன்று விட்ட இடத்திலிருந்துதான் இப்போது காரியங்களை தாம் முன்னெ டுத்திருப்பதாக கனடிய முன்னாள் பிரதமர் ஸ்ரீபன் ஹாப்பரிடம் கூறும் ரணில், சுமந்திரன் வழிநடத்தலில் தயாரிக்கப்பட்ட புதிய அரசியலமைப்பு வரைபு பற்றி எதனையும் தெரிவிக்காது சாதுரியமாக மறைத்துவிட்டார்.

தமிழர் பிரச்சனைக்குத் தீர்வுகாண ரணில் இப்போது வேண்டுவது தமிழர் தரப்பினர் அனைவரும் ஒன்றுபட்டு வர வேண்டும் என்பது. நாட்டை அபிவி ருத்தி செய்யவும், தமிழர் பிரச்சனைக்குத் தீர்வுகாணவும் சகல தமிழ் கட்சிகளும் ஒன்றிணைந்து வரவேண்டுமென்று கேட்டுள்ளார் ரணில். இது வேண்டு கோளா அல்லது நிபந்தனையா என்பது தெரியவில்லை.

எதுவாயிருந்தாலும், தமிழர் தரப்பு இணைந்து வந்தால் மட்டுமே தீர்வு காண முடியுமென்ற தமது எண்ணப் பாட்டை ரணில் பகிரங்கப்படுத்தியுள் ளார். இவ்விடத்தில் ரணில் முன்னால் தமிழர் தரப்பு வைக்க வேண்டிய நிபந் தனை ஒன்றுண்டு. தமிழர் பிரச்ச னைக்குத் தீர்வு காண சகல சிங்கள கட்சி களையும் அதன் தலைவர்களையும் ஒன்றி ணைத்துக் கொண்டுவர ரணில் தயாரா? இது அவரால் முடியுமா? இதற்கான முடிவு பகிரங்கப்படுத்தப்பட வேண்டும்.

1965ல் இலங்கையில் முதலாவது தேசிய அரசாங்கம் அமைத்து ஐந்து ஆண்டுகள் முழுமையாக ஆட்சி புரிந்த வர் டட்லி சேனநாயக்க. அவரது அரசாங்கத்தில் தமிழரசுக் கட்சியும், தமிழ்க் காங்கிரசும் இணைந்திருந்தன. தமிழரசு சார்பில் எம்.திருச்செல்வம் அமைச்சராகவிருந்தார். தமிழ் காங்கிரஸ் சார்பில் மு.சிவசிதம்பரம் உபசபாநாய கராக இருந்தார். இரு தரப்பினரும் தமிழ ருக்கு ஒரு பல்கலைக்கழகம் வேண்டு மென பிரதமர் டட்லியிடம் வலியுறுத்தி வந்தனர்.

தமிழரசுக் கட்சி தமிழ்ப் பல்கலைக் கழகம் கேட்டது. தமிழ்க் காங்கிரஸ் கட்சி இந்து பல்கலைக்கழகம் கேட்டது. இதுதான் சரியான வாய்ப்பு என எண் ணிய டட்லி தனது கபட நாடகத்தை அரங்கேற்றினார். தமிழரசும் காங்கிரசும் இணைந்து ஒரு பல்கலைக்கழகம் கேட் டால் தர முடியுமென்று கூறிய டட்லி ஐந்து வருடங்களும் வரவு செலவுத் திட் டத்தில் அதற்கென நிதியை ஒதுக்கி வந்தார்.

தமிழ்க் கட்சிகள் இரண்டும் ஒன்றி ணையமாட்டா என்ற டட்லியின் எதிர் பார்ப்பு பொய்க்கவில்லை. தமிழர்களின் பல்கலைக்கழக கனவு காற்றோடு கலைந்தது.

தமிழர் பிரச்சனைக்கு தீர்வு காண விரும்புவது போன்று போக்குக்காட்டி அதனை இழுத்தடித்து தட்டிக்கழிப்பதற் காகவே சகல தமிழ் கட்சிகளையும் ஒன்றிணைந்து வருமாறு ரணில் விடுத்தி ருக்கும் அழைப்பு புரிய வைக்கிறது.

டட்லி சேனநாயக்கவின் ஐக்கிய தேசிய கட்சி வழிவந்த ரணிலின் சிந்தனையோட்டமும் டட்லியின் தடத்திலேயே பயணிக்கிறது. ஏமாறு பவர்கள் இருந்தால் ஏமாற்றுபவர் எப்போதும் வெற்றியாளரே!





1965ல் டட்லி சேனநாயக்கவின் தேசிய அரசாங்கத்தில் தமிழரசுக் கட்சியும் தமிழ்க் காங்கிரசும் அங்கம் வகித்தன. தமிழர் சார்பில் எம்.திருச்செல்வம் அமைச்சராகவும், தமிழ் காங்கிரஸ் சார்பில் மு. சிவசிதம்பரம் உபசபாநாயகராகவும் இருந்தனர். தமிழரசுக் கட்சி தமிழ் பல்கலைக்கழகம் கேட்க, தமிழ் காங்கிரஸ் இந்து பல்கலைக்கழகம் கேட்டது. இரு கட்சிகளும் இணைந்து ஒரு பல்கலைக்கழகம் கேட்டால் தம்மால் அதனைத் தர முடியும் என்ற டட்லியின் நிபந்தனை அவரது எதிர்பார்ப்பை நிறைவேற்றியது. தமிழருக்கான பல்கலைக்கழக கனவு அன்று சிதறுண்டது. டட்லியின் அதே தடத்தில்தான் தமிழர் பிரச்சனைக்குத் தீர்வு காண தமிழரின் ஒற்றுமையை ரணில் கேட்பது தெரிகிறது.

# தமிழர்களால் ஒரு பலமாக திரட்சிபெற முடியுமா?

யதீந்திரா

தமிழ் தேசிய அரசியல் தொடர்ந்தும் தோல்வியின் பாதையிலேயே செல்கின்றது. இது தொடர்பில் பல்வேறு சந்தர்பங்களில் விவாதித்திருக்கின்றேன். தமிழர்களின் அரசில் பயணத்தை எடுத்து நோக்கினால், அதனை மூன்று கட்டங்களாக பிரிக்கலாம். ஒன்று, செல்வநாயகம் காலகட்டம். இரண்டாவது, பிரபாகரன் காலகட்டம், மூன்றாவது, 2009இற்கு பின்னரான சம்பந்தன் காலகட்டம். இந்த மூன்று கட்டங்களும் தோல்வியில் முடிந்தமை தொடர்பில் நான் முன்னைய கட்டுரை ஒன்றில் விரிவாக எழுதியிருக்கின்றேன். நாம் கடந்த காலத்திலிருந்து கற்றுக்கொள்ள வேண்டியதன் அவசியம் தொடர்பிலும் பல்வேறு சந்தர்பங்களில் எழுதியிருக்கின்றேன். ஆனால் முன்னேற்றங்களைத்தான் காணவில்லை. எனினும் சலிக்காமல் வேதாளத்திற்கு கதை சொல்லும் விக்கிரமாதித்தியன் போன்று, என்னைப் போன்றவர்கள் எழுதியும் பேசியும் வருகின்றனர். எப்போதாவது மாற்றங்களை காண மாட்டோமா என்னும் ஏக்கமே, என்னை போன்றவர்களை வழிநடத்துகின்றது.

நாம் தோல்வியடைந்திருந்தாலும் கூட, இலங்கைத் தீவில் ஒரு முக்கியமான அரசியல் சக்தியாக கவனத்தில் கொள்ளப்படுவதற்கான தகுதிநிலைகளை இழந்துவிடவில்லை. இப்போதும் அதற்கான வாய்ப்பு முற்றிலும் இல்லாமல் போய்விடவில்லை. ஆனால் ஒரு சமூகம் தன்னை ஒரு அதிகார மையமாக கட்டியெழுப்ப வேண்டுமாயின், அதற்கு அந்த சமூகம் தன்னை சதா தயார் செய்து கொண்டிருக்க வேண்டும். வீழும் ஒவ்வொரு சந்தர்பங்களையும், பலமாக எழுவதற்கான ஊன்றுகோலாகக் கொள்வது எவ்வாறென்று சிந்திக்க வேண்டும். அதனடிப்படையில் விடாது செயலாற்ற வேண்டும். இதன் மூலம் மற்றவர்களால் இலகுவில் புறம்தள்ள முடியாத நிலைமையை ஏற்படுத்த வேண்டும். எப்போது நாம் மற்றவர்களால் இலகுவில் புறம்தள்ள முடியாதவர்களாக இருக்கின்றோமோ, அப்போது அனைவரும் நம்மை திருப்பிப்பார்க்க வேண்டிய நிர்பந்தம் உருவாகும். இந்த நிர்பந்தத்தை உருவாக்கும் வல்லமையை ஒரு சமூகம்தான் நிரூபிக்க முடியும்.

ஒரு சமூகம் தன்னை ஒரு அதிகார மையமாக கட்டியெழுப்ப வேண்டுமாயின், முதலில் அதன் தற்போதைய நிலைமையை தெளிவாக புரிந்துகொள்ள வேண்டும். வாய்ப்புக்களை அறிய வேண்டும். முன்னோக்கி பயணிப்பதிலுள்ள சவால்களை அறிய வேண்டும். இலங்கைத்தீவு யுத்தத்திலிருந்து வெளியில் வந்துவிட்டது. ஆனால் யுத்தத்தின் விளைவுகளிலிருந்து வெளியில் வரவில்லை. இலங்கையின் மீது தொடரும் மென்மையான அழுத்தங்களே இதற்கான எடுத்துக்காட்டாகும். அது நமது எதிர்பார்ப்பை ஈடுசெய்யவில்லையாயினும் கூட, இந்த அழுத்தங்கள், பிரச்சினையை தொடர்ந்தும் நூர்ந்து போகாமல் பாதுகாத்து வருகின்றது.

இந்த பின்புலத்தில் நோக்கினால் அது தமிழர்களுக்கு சாதகமான ஒன்றுதான். இரண்டாவது வாய்ப்பு நல்லிணக்க முயற்சியில் இதுவரையில் அரசாங்கத்தினால் முன்நோக்கி பயணிக்க முடியவில்லை. இந்த நிலையில் மீளவும் தென்னாபிரிக்காவை முன்மாதிரியாகக் கொண்டு, விடயங்களை மேற்கொள்ளப் போவதாக, அரசாங்கம் கூறுகின்றது. இந்த இடத்தில் ஒரு விடயம் தமிழ் மக்களுக்கு சாதமானது. அதாவது, இலங்கைத் தீவில் நல்லிணக்க முயற்சியில் வெற்றி பெற்றுவிட்டதான தோற்றமொன்றை ஏற்படுத்த வேண்டிய இக்கட்டு நிலையில் அரசாங்கம் இருக்கின்றது ஆனால் இந்த முயற்சியில் அரசாங்கம் வெற்றி பெற வேண்டுமாயின், தமிழர்களின் ஆதரவு இன்றியமையாதது.

தமிழர்களின் எதிர்ப்புக்கு மத்தியில் மேற்கொள்ளப்படும் விடயங்களை நல்லிணக்கத்தின் வெற்றியாக காண்பிக்க முடியாது. இதிலுள்ள அரசியல் யதார்தத்தை நாம் தெளிவாக புரிந்துகொள்ள வேண்டும். அதாவது, தமிழர்களுக்கு எதிராக யுத்த வெற்றிவாதத்தை முன்வைத்தவர்கள் நல்லிணக்கத்தை வெற்றிகொள்ள வேண்டுமாயின் இப்போது, தோற்கடிக்கப்பட்ட தமிழர்களின் ஆதரவு கட்டாயம் தேவை. இதுதான் இந்த அரசியலுள்ள எதிர்மறையான விடயம். ஏனெனில் யுத்த வெற்றிவாதத்தை முன்வைத்து, சிங்களவர்களிடமிருந்து வாக்குகளை வேண்டுமானால் பெறலாம் ஆனால், நல்லிணக்கத்தை வெற்றிகொள்ள முடியாது. நல்லிணக்கத்தை வெற்றிகொள்ள



> **வெறும் வீரவசனங்களால் இன்றைய அரசியல் சூழலை கையாள முடியாது. அதற்கான அரசியல் சூழல் எப்போதோ காலமாகிவிட்டது. இன்று, தமிழ் மக்கள் மத்தியில் எவரெல்லாம் மற்றவர்களை துரோகிகளென்றும், இந்திய முகவர்களென்றும், கைக் கூலிகளென்றும் கூறுகின்றனரோ, அவர்கள் அனைவருமே, தமிழ் மக்கள் ஒரு ஜனநாயக பலமாக எழுச்சியுறுவதை தடுப்பவர்களாவர்**

வேண்டுமாயின் பாதிக்கப்பட்ட மக்கள் அதனை வெற்றிபெற்றச் செய்ய வேண்டிஇடத்திலிருக்கின்றனர். இந்த விடயம் தமிழர்களுக்கு சாதகமானது.

ஏனெனில் இந்த இடத்தில் தமிழர்களை புறக்கணிக்கவும் முடியாது அதே வேளை நல்லிணக்கத்தை வெற்றிகொள்ள வேண்டுமென்றும் அரசாங்கம் முயற்சிக்கின்றது. உதாரணமாக ஒரு புதிய அரசியல் யாப்பை கொண்டுவர வேண்டுமாயின், தமிழ் மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில், முன்னரைப் போன்று, சிங்களவர்களின் ஆதரவுடன் கொண்டுவர முடியும் ஆனால் தமிழ் மக்களின் ஆதரவில்லாத புதிய அரசியல் யாப்பின் மூலம் பிரச்சினைக்கு முற்றுப் புள்ளியிட முடியாது. அவ்வாறானதொரு அரசியல் யாப்பு வருவதற்கான எந்தவொரு வாய்ப்பும் நாட்டிலில்லை. ஒரு உதாரணத்திற்காகவே இதனை குறிப்பிட்டேன். நல்லிணக்கத்திற்கு தமிழர்களின் ஆதரவு இன்றியமையாதது என்னும் நிலைமை, தமிழர்களுக்கான ஒரு சிறந்த வாய்ப்பாகும்.

மேற்குலக நாடுகளில், தமிழர்களின் பிரச்சினை பேசிக்கொண்டிருக்கும் வல்லமையுடன் புலம்பெயர் சமூகமொன்று இருப்பது இன்னொரு வாய்ப்பு. மேற்குலகின் அரசியல் சூழல் ஆசிய அரசியல் சூழலிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. மேற்குலகில், அரசியலை, அரசியல் சமூகம் மட்டும் தீர்மானிப்பதில்லை. அங்கு அரசியலானது, அரசியல் சமூகமாகவும் சிவில் சமூகமாகவும் பிரிந்திருக்கின்றது. இந்த இரண்டு தளங்களையும் கையாளக் கூடிய வாய்ப்பு புலம்பெயர் சமூகத்திற்குண்டு. இலங்கை அரசாங்கம் எவ்வாறான ராஜதந்திர நகர்வுகளை மேற்கொண்டாலும் கூட, மேற்குலகில் புலம்பெயர் சமூகத்தின் இயங்குநிலையை தடுத்துவிட முடியாது. இது தமிழர்களுக்குள்ள ஒரு சாதகமான வாய்ப்பாகும்.

அடுத்த வாய்ப்பு சர்வதேசளவில், தமிழர் பிரச்சினை, ஒரு மனித உரிமை விவகாரமாகவே நோக்கப்படுகின்றது. அரசியல் விடயமாக நோக்கப்படவில்லை. இது மேற்குலகின் அரசியல் அணுகுமுறையோடு தொடர்பானது. அதே வேளை அமெரிக்காவின் உளகளாவிய அணுமுறையில், மனித உரிமை விவகாரம் பிரதான இடத்தை பெறுகின்றது. நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடும் அமெரிக்க அணுகு முறையில், மனித உரிமை மற்றும் ஜனநாய ஆட்சியே பிரதான கருவிகளாக இருக்கின்றன. மேற்குலகம் தமிழரின் பிரச்சினையை ஒரு அரசியல் விவகாரமாக நோக்காமல் இருப்பதானது, ஒரு வகையில் நமக்கு பின்னடைவென்றாலும் கூட, இன்னொரு வகையில் இலங்கைத் தீவின் பிரச்சினை, தொடர்ந்தும் மேற்குலக மயப்படுத்துவதற்கான வாய்ப்பையும் இது தருகின்றது. புலம்பெயர் சமூகம் செயற்படுவதற்கான வாய்ப்பு இந்த இடத்திலிருந்துதான் உருவாகின்றது. ஏனெனில், மனித உரிமையின் மீதான மேற்குலகின் கரிசனையின் மீது புலம்பெயர் சமூகம் தொடர்ந்தும் கேள்வியெழுப்பலாம்.

தமிழர்கள், இவ்வாறான சாதகமான விடயங்களைக் கொண்டு, எவ்வாறு ஒரு பலமாக திட்சிபெறலாம்? ஒரு சமூகம் தனக்குள்ள சாதகமான வாய்ப்புக்களை கொண்டு, முன்னோக்கி அடியெடுத்து வைக்க வேண்டுமாயின், முதலில் தனக்குள் சிதறாமல் இருக்க வேண்டும். ஒரு ஐக்கிய முன்னணியாக தன்னை கட்டியெழுப்ப வேண்டும். ஆனால் போருக்கு பின்னரான கடந்த 14 ஆண்டுகளில் அவ்வாறானதொரு ஐக்கிய முன்னணியாக திரட்சிபெறுவதில், தமிழ் தேசிய தரப்புக்களால் சிறிய முன்னேற்றத்தைக் கூட காண்பிக்க முடியவில்லை. இப்போதும் நான்கு அணிகளாகவே நிற்கின்றனர். எத்தனை கட்சிகளும் இருக்கலாம் ஆனால் அந்தக் கட்சிகளை, அரசியல்ரீதியாக பிரித்தாள முடியாதளவிற்கு, கட்டுறுதியாக இருப்பதே ஐக்கிய முன்னணி தந்திரோபாயமாகும். இவ்வாறானதொரு தந்திரோபாயம் தொடர்பில் கடந்த பத்து வருடங்களாக இந்தக் கட்டுரையாளர் மட்டுமல்ல இன்னும் பலரும் தொடர்சியாக பேசிவந்திருக்கின்றோம். ஆனால் இதுவரையில் முன்னேற்றமில்லை.

2009இற்கு பின்னர் தமிழ் தேசிய தரப்புக்கள் செய்திருக்க வேண்டிய முதலாவது நகர்வாக இதுவே இருந்திருக்க வேண்டும். ஆனால் முதலாவது நகர்விலேயே தமிழர்கள் 14 வருடங்களாக சறுக்கி வீழ்ந்து கொண்டேயிருக்கின்றனர். இந்த நிலையில் எவ்வாறு வாய்புக்களை கையாள முடியும்? இன்று இந்தியாவாக இருக்கலாம் அல்லது அமெரிக்கா தலைமையிலான மேற்குலகாக இருக்கலாம், தமிழ் மக்களின் பிரச்சினையை, இலங்கைத் தீவின் சிறுபான்மையின பிரச்சினையாகவே பார்க்கின்றனர். இந்த அடிப்படையிலேயே தமிழ் கட்சிகளை அவர்கள் கையாளுகின்றனர். ரணில் விக்கிரமசிங்கவோடு பேசுங்கள், அவர் அனுபவமுள்ளவர் என்றவாறு மேற்குலக ராஜதந்திரிகள் கூறுகின்றனர். இந்திய - இலங்கை ஒப்பந்த அடிப்படையில், இந்தியா பேசுகின்றது ஆனால் இந்திய - இலங்கை ஒப்பந்தம் இடம்பெற்ற காலத்தில், தமிழ் மக்களை இந்தியா ஒரு தனியான அரசியல் சக்தியாகவே கையாண்டது. அந்த அடிப்படையில்தான் இலங்கைத் தீவின் அரசியலில் நேரடியாகவும் தலையீடு செய்தது.

தமிழ் மக்களை சிறுபான்மையாக அணுகுவதற்காக அவர்களுடன் முரண்பாடுவதாலோ அல்லது, அவர்களை விமர்சிப்பதாலோ எவ்வித பயனுமில்லை. ஏனெனில் இது அவர்களின் பிரச்சினையில்லை. இலங்கைத் தீவில் இரண்டு அசியல் சக்திகள் இருக்கின்றன ஒன்று, சிங்கள அரசியல் சமூகம் மற்றையது ஈழத் தமிழ் அரசியல் சமூகமென்னும் வகையில், விடயங்களை கையாளும் நிலைமையை தமிழர்களே ஏற்படுத்த வேண்டும். அவ்வாறானதொரு சூழலை, தமிழர்கள் நிரூபிக்காத வரையில், அவர்களது அணுகுமுறையும் மாறப்போவதில்லை.

இன்றைய உலக அரசியல் ஒழுங்கில் ஜனநாகயம்தான் அரசியலை முன்கொண்டு செல்வதற்கான ஒரேயொரு கருவியாகும். ஆனால் அதே ஜனநாயக தளம்தான் மறுபுறம் அரசுகளுக்கும் சாதகமாக இருக்கின்றது. இதனை புரிந்துகொண்டுதான் நாம் செயற்பட வேண்டும். ஜனநாயக தளத்தில், அரசுகளின் தந்திரங்களை எதிர்கொள்வதற்கிருக்கும் ஒரேயொரு வழி, பாதிக்கப்பட்ட தரப்புக்கள் தங்களுக்குள் சிதறிச் செல்லாமல், தங்களுக்குள் ஒன்றுசேரும் வழிமுறைகளை பின்பற்ற வேண்டும்.

ஐக்கிய முன்னணி உபாயத்தின் மூலம் அரசின் அணுகுமுறைகளை எதிர்கொள்ள வேண்டும். பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் ஐக்கிய முன்னணிச் செயற்பாடுகளுக்கு குந்தகம் விளைவிப்பவர்கள் நிச்சயம் மக்களுக்கு எதிரானவர்களாவர். அவ்வாறானவர்களை மக்கள் தங்கள் வாக்குகளின் மூலம் தோற்கடிக்க வேண்டும். வெறும் வீரவசனங்களால் இன்றைய அரசியல் சூழலை கையாள முடியாது. அதற்கான அரசியல் சூழல் எப்போதோ காலமாகிவிட்டது. இன்று, தமிழ் மக்கள் மத்தியில் எவரெல்லாம் மற்றவர்களை துரோகிகளென்றும், இந்திய முகவர்களென்றும், கைக் கூலிகளென்றும் கூறுகின்றனரோ, அவர்கள் அனைவருமே, தமிழ் மக்கள் ஒரு ஜனநாயக பலமாக எழுச்சியுறுவதை தடுப்பவர்களாவர். இவர்கள் அடிப்படையிலேயே மக்களுக்கு எதிரான தீய சக்திகளாவர். தீய சக்திகள் எப்போதுமே மற்றவர்களை குற்றம்சாட்டுவதன் ஊடாக, தங்களை நல்லவர்களாக காட்டிக்கொள்ள

(18ஆம் பக்கம் பார்க்க)

# போர்க்களமான பிரான்ஸ்: சிறுவனை பொலிஸ் சுட்டுக் கொன்றதால் கொதித்தெழுந்த மக்கள்?



நஹெல் எனும் 17 வயது சிறுவன் கொல்லப்பட்ட சம்பவம் பிரான்ஸ் மக்கள் மத்தியில் கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. இதையடுத்து அங்கு நாடு முழுவதும் போராட்டங்கள் வெடித்துள்ளன.

கடந்த வாரம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இந்தச் சம்பவத்தை அடுத்து தொடங்கிய போராட்டங்கள் அங்கு இன்னும் தொடர்ந்து வருகின்றன.

நிலைமையைக் கட்டுப்படுத்த தலைநகர் பாரிஸ் புறநகர் பகுதிகளில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அத்துடன் தலைநகரில் இரவு நேரங்களில் டிராம் மற்றும் பேருந்து போக்குவரத்து சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

பாரிஸ் நகர வீதிகள் போர்க்களத்தைப் போன்று காட்சியளிப்பதாக அங்குள்ள பிபிசி செய்தியாளர் சோபியா பெட்ஸ் தெரிவித்துள்ளார்.

**சிறுவன் சுட்டுக் கொல்லப்பட்டது எப்படி?**

கடந்த செவ்வாய்க்கிழமை அன்று 17 வயது மதிக்கத்தக்க நஹெல் எம் என்ற சிறுவன், பிரான்சின் ஒரு முக்கியப் பகுதியில் கார் ஓட்டிச் சென்றுள்ளார். அப்போது அங்கு போக்குவரத்துப் பணியில் ஈடுபட்டிருந்த காவல் துறை அதிகாரி ஒருவர், ஆவணங்களைச் சரிபார்ப்பதற்காக காரை நிறுத்தச் சொல்லியதாகத் தெரிகிறது.

ஆனால், சிறுவன் காரை நிறுத்தாமல் சென்றதுடன், தன்னிடம் ஆவணங்களைக் கேட்ட போலீஸ் மீது மோதும் நோக்கில் காரை செலுத்தியதாகவும் கூறப்படுகிறது.

சிறுவனின் தாக்குதலில் இருந்து தப்பிக்க, தற்காப்புக்காக அவரை நோக்கிச் சுட்டதாக போலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

ஆனால், சம்பந்தப்பட்ட போக்குவரத்து காவல்துறை அதிகாரி, சிறுவனின் கார் கண்ணாடி அருகே சென்று துப்பாக்கி முனையில் அவரை மிரட்டுவதும், அதன் பின்னர் அதே தொலைவில் இருந்து சிறுவனைச் சுடும் காட்சிகளும் சம்பவம் நடைபெற்ற இடத்தில் வைக்கப்பட்டிருந்த கண்காணிப்பு கேமராக்களில் பதிவாகியுள்ளன.

இந்த வீடியோ காட்சிகளின் உண்மைத்தன்மையை ஏ.எஃப்.பி. செய்தி முகமை உறுதி செய்துள்ளது.

அதிபர் சொல்வது என்ன?

"சிறுவன் சுட்டுக் கொல்லப்பட்ட நிகழ்வு மன்னிக்க முடியாதது என்று கூறியுள்ள பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மக்ரோன், துப்பாக்கி சூட்டை எந்தவிதத்திலும் நியாயப்படுத்த முடியாது," என்றும் கூறியுள்ளார். அதிபர் இவ்வாறு கூறியுள்ளதற்கு போலீஸ் சங்கங்கள் அதிருப்தி தெரிவித்துள்ளன.

இதனிடையே, "இந்தச் சம்பவத்தை வைத்து, நாடு முழுவதும் பல்வேறு நகரங்களில் உள்ள பள்ளிக் கூடங்கள், காவல் நிலையங்கள் மற்றும் சமுதாயக் கூடங்களைக் குறிவைத்து போராட்டக்காரர்கள் ஒரே இரவில் தாக்குதல் நடத்தியுள்ளனர்," என்று பிரான்ஸ் உள்துறை அமைச்சர் ஜெரால்ட் டார்மானின் வெளியிட்டுள்ள ட்விட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

மேலும், கடந்த இரண்டு நாட்களில், இரவு நேரங்களில் தீவைப்பு, வெடி வைத்தல் போன்ற செயல்களில் போராட்டக்காரர்கள் ஈடுபட்டு வருகின்றனர் என்றும், இதன் விளைவாக அரசு கட்டடங்கள், கார்கள் உள்ளிட்டவை சேதமடைந்துள்ளன என்றும் அவர் தனது ட்விட்டர் பதிவில் கூறியுள்ளார்.

**ஆறாயிரம் பேர் பங்கேற்ற பிரமாண்ட பேரணி**

இந்த நிலையில், நஹெலின் மரணத்திற்கு நீதி கேட்டுப் போராட்டம் நடத்த உள்ளதாகவும், அதில் பொதுமக்கள் பங்கேற்க வேண்டும் என்றும் இறந்த சிறுவனின் தாயார் அழைப்பு விடுத்திருந்தார்.

அவரது அழைப்பை ஏற்று, நான்டெர்ரே நகரில் வியாழக்கிழமை நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் 6000க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

இதையடுத்து, சிறுவன் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய காவல்துறை அதிகாரி மீது கொலைக் குற்றச்சாட்டு வழக்குப் பதிவு செய்யப்பட்டு, அவர் கைதும் செய்யப்பட்டுள்ளார். மேலும் வன்முறையில் ஈடுபட்டதாக நாடு முழுவதும் 150 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பிரான்ஸ் போலீசார் தெரிவித்துள்ளனர்.



**நாடு முழுவதும் பரவிய போராட்டம்**

சிறுவனின் மரணத்தைக் கண்டித்து பிரான்சின் பல்வேறு நகரங்களில் தொடர் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. துலூஸ் நகரில் போராட்டக்காரர்கள் பொது சொத்துகளைத் தீயிட்டு எரிக்க முயன்றதாகவும், தீயை அணைக்க முயன்ற தீயணைப்பு வீரர்களை கல்வீசித் தாக்கியதாகவும் உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேபோன்று, பிரான்சின் வட பகுதியில் அமைந்துள்ள லீல் நகரில் போராட்டக்காரர்கள் போலீசாருடன் மோதலில் ஈடுபட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே, கொல்லப்பட்ட சிறுவனுக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக பிரான்சின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள ரென்சில் நகரில் சுமார் 300 பேர் கூடியதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இவர்களில் பலர் ஆத்திரத்தில் அங்கு தீ வைப்பு சம்பவங்களில் ஈடுபட முயன்றதாகவும், அவர்களை போலீசார் தடுத்து நிறுத்தியதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இருப்பினும் நிலைமையைத் தற்போது கட்டுக்குள் கொண்டு வந்துவிட்டதாக பாரிஸ் மாநகர போலீசார் தெரிவித்துள்ளனர்.

**அதிபரின் கருத்தும், போலீஸ் சங்கங்களின் எதிர்ப்பும்**

"சிறுவன் மீது துப்பாக்கி சூடு நடத்தப்பட்டது மன்னிக்க முடியாதது என்றும், இதை எந்தக் காரணம் கொண்டும் நியாயப்படுத்த இயலாது" என்றும் பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மக்ரோன் கருத்து தெரிவித்திருந்தார். அதிபரின் இந்தக் கருத்துக்கு பிரான்சில் உள்ள பல்வேறு போலீஸ் சங்கங்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

"ஒரு வழக்கில் தீர்ப்பு வரும் வரை, அதில் குற்றம் சாட்டப்பட்ட நபரை குற்றவாளியாகக் கருத முடியாது.



ஆனால், சிறுவன் கொல்லப்பட்ட சம்பவத்தில் சம்பந்தப்பட்ட காவல்துறை அதிகாரிக்கு எதிராக அதிபர் அவசரப்பட்டு கருத்து தெரிவித்துள்ளார்," என்று அலையன்ஸ் போலீஸ் சங்கம் அதிருப்தி தெரிவித்துள்ளது.

சிறுவன் கொல்லப்பட்ட சம்பவத்தில் தொடர்புடைய காவல்துறை அதிகாரியை 'துணிவு மிக்கவர்' என்று குறிப்பிட்டு, மற்றொரு போலீஸ் சங்கம் ட்விட்டர் பதிவு ஒன்றை வெளியிட்டிருந்தது. அந்தப் பதிவு நீக்கப்பட்டுவிட்டாலும், 'அந்தச் சிறுவனை அவரது குடும்பம் நல்ல விதத்தில் வளர்க்கவில்லை' என்று அந்தச் சங்கம் பகிரங்கமாகக் குற்றம்சாட்டியுள்ளது.

ஆனால், "அதிபரை விமர்சிப்பது போன்ற அரசியல் தலையீடு, காவல்துறையின் மீதான வெறுப்பை அதிகரிக்கும்" என்று 'யுனைட் எஸ்ஜிபி போலீஸ்' எனும் சங்கம் அறிவுறுத்தியுள்ளது.

"சிறுவன் கொல்லப்பட்ட சம்பவத்தை நியாயப் படுத்த முயன்றால், காவல் துறைக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்க வேண்டி வரும்" என்று பிரான்ஸ் உள்துறை அமைச்சர் ஜெரால்ட் டார்மானின் எச்சரித்துள்ளார்.

பிரான்ஸ் போலீசுக்கு துப்பாக்கியால் சுடும் அதிகாரத்தில் இருந்த கட்டுப்பாடுகளைத் தளர்த்த வகை செய்யும் சட்டம் 2017இல் அமல்படுத்தப்பட்டது. இதற்கு மனித உரிமை அமைப்புகள் அப்போது கடும் எதிர்ப்பு தெரிவித்திருந்தன.

இந்தச் சட்டம் அமல்படுத்தப்பட்ட பிறகு, ஓடும் கார்கள் மீது போலீசார் துப்பாக்கிச் சூடு நடத்தும் சம்பவங்கள் அதிகரித்துவிட்டன என்று 'Le Monde' நாளிதழ் செய்தி வெளியிட்டிருந்தது.

போலீசாருக்கு வழங்கப்பட்டுள்ள இந்த அதிகாரத்தால், கறுப்பின மக்கள் அவர்களின் துப்பாக்கிகளுக்கு இலக்காகும் அபாயம் அதிகரித்துள்ளது என்று மனித உரிமை ஆர்வலரான ரோகயா டயல்லோ அச்சம் தெரிவித்துள்ளார்.

நஹெல் கொலை நினைவூட்டும் 2005 சம்பவம்

தற்போது சிறுவன் கொல்லப்பட்டது போன்றதொரு சம்பவம், 2005இல் ஃபிரான்சில் நிகழ்ந்துள்ளது. அப்போது போலீசார் துரத்திப் பிடிக்க முயன்ற இரண்டு இளைஞர்கள், ஒரு துணை மின் நிலையத்திற்குள் சென்று ஒளிந்தனர்.

அப்போது பிரான்சின் அதிபராக இருந்த நிக்கோலஸ் சார்க்கோசி, அவ்விரு இளைஞர்களையும் குற்றவாளிகள் என்று அறிவித்ததோடு, அவர்கள் உரிய முறையில் தண்டிக்கப்படுவார்கள் எனவும் கூறியிருந்தார்.



அத்துடன் அவர்களைக் கெட்டவர்கள் என்றும் அதிபர் குறிப்பிட்டிருந்தார்.

அவர் கூறியபடியே, போலீசார் அவர்களைச் சுட்டுக் கொன்றனர். இளைஞர்கள் கொல்லப்பட்டதை அடுத்து பிரான்ஸ் முழுவதும் போராட்டங்கள் வெடித்தன. இதில் பங்கேற்றவர்கள் அரசு கட்டடங்கள் உள்ளிட்ட பொது சொத்துகளைத் தீயிட்டு எரித்தனர். சில வாரங்கள் தொடர்ந்த அந்தப் போராட்டங்களில் பங்கேற்றவர்கள், தங்களின் உணர்வுகளை அரசாங்கம் மதிக்கவில்லை என்று குற்றம்சாட்டினர்.

சுமார் 20 ஆண்டுகளுக்கு முன் நடைபெற்ற அந்த நிகழ்வு தற்போதைய அரசாங்கத்திற்கு நிச்சயம் நினைவில் இருக்கும் என்று கருதப்படுகிறது. எனவே, 2005இல் நிகழ்ந்ததைப் போன்று மீண்டுமொரு முறை விரும்பத்தகாத சம்பவங்கள் தொடர்வதைத் தற்போதைய அரசு நிச்சயம் விரும்பாது.


இதனிடையே, கொல்லப்பட்ட சிறுவனின் குடும்பத்துக்கு ஃபிரான்ஸ் அதிபர் ஆறுதல் செய்தி அனுப்பி உள்ளார்.

கடந்த 2017இல் இருந்து, பிரான்ஸ் போலீசாரின் துப்பாக்கி குண்டுகளுக்கு இரையானவர்களில் பெரும்பாலோர் கறுப்பினத்தவர்கள் அல்லது அரேபியா வம்சாவளியைச் சேர்ந்தவர்கள் என்று ராய்ட்டர்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

சாலை போக்குவரத்து விதிமுறைகளைப் பின்பற்றவில்லை எனக் கூறி, கடந்த ஆண்டு மட்டும் மொத்தம் 13 பேர் பிரான்ஸ் போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

தற்போது கொல்லப்பட்டுள்ள சிறுவன் நஹெலும், பிரெஞ்சு -அல்ஜீரியன் வம்சாவளியைச் சேர்ந்தவர் என்று சிறுவனின் அண்டை வீட்டுக்காரர்களை மேற்கோள்காட்டி ராய்ட்டர்ஸ் நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.






# ஈர்க்கும் முதல் பார்வை

தனுஷ் நடிக்கும் ‘கேப்டன் மில்லர்’ படத்தின் முதல் பார்வையை படக்குழு வெளியிட்டுள்ளது.

சத்யஜோதி பிலிம்ஸ் தயாரிக்கும் இந்தப் படத்தில் பிரியங்கா அருள் மோகன் நாயகியாக நடிக்கிறார். நிவேதிதா சதிஷ், ஜான் கொக்கன் உட்பட பலர் நடிக்கின்றனர். இந்தப் படம் 3 பாகங்களாக உருவாகவுள்ளதாகக் கூறப்படுகின்றது. இப்படத்தில் கன்னட நடிகர் சிவராஜ் குமார் ஒரு முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்.

படத்தின் முதல் பார்வையில் போர்ச் சூழலில் சடலங்கள் விரவிக் கிடக்க, கையில் பெரிய துப்பாக்கியுடன் வித்தியாசமான தோற்றத்தில் தனுஷ் நிற்கும் நிற்கும் காட்சி வெகுவாக ஈர்த்துள்ளது.



# குவியும் வாய்ப்புகள்

தனுஷுடன் நடித்த ‘வாத்தி’யைத் தொடர்ந்து, அமானுஷ்ய படமான ‘விருப்பாக்‌ஷா’வும் தெலுங்கில் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து சம்யுக்தா மேனன் பல படங்களில் ஒப்பந்தமாகியுள்ளார்.

தெலுங்கில், ‘ப்ரோ’, ‘டெவில்’ எனக் கைவசம் படங்கள் வைத்துள்ளவர், இப்போது மகேஷ்பாபுவின் ‘குண்டூர் காரம்’ படத்திலும் ஒப்பந்தமாகியுள்ளார்.

**திரைப்படம் - மாமன்னன்**
**இயக்கம் - மாரி செல்வராஜ்**
**இசை - ஏ. ஆர். ரஹ்மான்**
**நடிப்பு - வடிவேலு, பகத் பாசில், கீர்த்தி சுரேஷ், உதயநிதி ஸ்டாலின்**

‘பரியேறும் பெருமாள்’ படத்தில் சாதி கடந்த காதலை மையப்படுத்தியும், ‘கர்ணன்’ படத்தில் சாதி வேறுபாட்டை மையப்படுத்தியும் படமெடுத்த மாரி செல்வராஜ் இந்தப் படத்தில் சாதி அரசியலை மையப்படுத்தி இருக்கிறார். காலம் மாற மாற எல்லாமும் மாறிக் கொண்டுதான் இருக்கிறது. அப்பா கை கட்டி நின்றால், மகன் அம்மாதிரி நிற்க மாட்டான் என்பதை அரசியல் கலந்து அழுத்தமாகப் பதிய வைத்திருக்கிறார்.

சேலம் மாவட்டம் காசிபுரம் தனி தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக இருப்பவர் சமத்துவ சமூக நீதி மக்கள் கழகத்தைச் சேர்ந்த வடிவேலு. அவருடைய மகன் உதயநிதி ஸ்டாலின், அடிமுறை சண்டையைக் கற்றுக் கொடுப்பவர். 15 வருடங்களுக்கு முன்பு ஊரில் நடந்த ஒரு சாதி மோதலில் அப்பா வடிவேலு செய்தது பிடிக்காமல் அவருடன் பேசாமல் இருக்கிறார். அதே சமத்துவ சமூகநீதி மக்கள் கழகத்தின் சேலம் மாவட்ட செயலாளராக இருக்கும் வேறு சாதி




யைச் சேர்ந்தவர் பகத் பாசில். அப்பா வடிவேலுவை அவர் நடத்திய விதம் கண்டு பொறுக்காமல் உதயநிதி எதிர்த்து பேச பகத் பாசிலுக்கும், உதயநிதிக்கும் கைகலப்பாகிறது. இந்த விவகாரத்தை தனிப்பட்ட விவகாரமாக எடுத்துக் கொள்ளும் பகத் கட்சியை விட்டு விலகி தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்தத் துடிக்கிறார். அடுத்து நடக்கவுள்ள தேர்தலில் எதிரெதிர் மோதுகிறார்கள். இதில் யாருக்கு வெற்றி என்பதுதான் மீதிக் கதை.

அடுத்தவரை அடக்கி ஆளத் துடிக்கும் ஆதிக்க குணம் கொண்ட ஓர் அரசியல் வாரிசுக்கும் அடங்கிப் போக மாட்டேன் - எதிர்த்து நிற்பேன் எனத் துடிக்கும் மற்றோர் அரசியல் வாரிசுக்கும் இடையில் நடக்கும் போட்டிதான் இந்த ‘மாமன்னன்’. உணர்ச்சிகரமான படமாக, காதல் படமாக இல்லாமல் அரசியல் படமாக மட்டுமே இந்தப் படத்தை முன்னிலைப்படுத்த வேண்டும் என மாரி செல்வராஜ் நினைத்திருக்கிறார்.

படத்தின் ‘மாமன்னன்’ வடிவேலுதான். அவர்தான் இந்தப் படத்தின் கதாநாயகன் என்றால் அது மிகையில்லை. முழு படத்தையும் அவருடைய தோளில், பேச்சில், நடவடிக்கையில் தாங்கி நிற்கிறார். அவருடைய பணிவு, அமைதி, கோபம், பாசம், அரசியல் என ஒவ்வொன்றுமே முந்தைய படங்களின் நகைச்சுவை நடிகர் வடிவேலுவை எந்த இடத்திலும் ஞாபகப்படுத்தவில்லை. மாமன்னன் என்ற கதாபாத்திரத்தின் மூலம் வேறு ஒரு தளத்தில் தனது நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார் வடிவேலு.

அதிவீரன் என்ற கதாபாத்திரத்தில் உதயநிதி ஸ்டாலின். ஆரம்பம் முதல் இடைவேளை வரை ஓர் இறுக்கமான முகத்துடனேயே நடித்திருக்கிறார். அந்த இறுக்கத்துக்கான காரணம் பின்னணியில் வந்தாலும் அதை நம் மனதில் இன்னும் உருக்கமாய் தைக்கும்படி இயக்குநர் சொல்லியிருக்கலாம். ஒரு பாடலின் மூலம் அந்த உருக்கத்தைக் கடந்து பதில் காட்சிகள் மூலம் நமக்குள் கடத்தியிருக்கலாம். அப்பாவுக்கான மரியாதையைப் பெற்




றுத் தரத் துடிக்கும் கதாபாத்திரத்தில் உதயநிதியின் கோபம் ஆங்காங்கே வந்து ஒரு கட்டத்தில் ஆவேசமாய் மாறுகிறது. தன்னுடைய படங்களில் இது ஒரு முக்கியமான படம் என உதயநிதி உறுதியாக சொல்லிக் கொள்ளலாம்.

கல்லூரி படிப்பை முடித்துவிட்டு ஏழை மாணவர்களுக்காக மேற்படிப்புக்காக பயிற்சி நிலையம் நடத்தும் லீலா கதாபாத்திரத்தில் கீர்த்தி சுரேஷ். விதவித ஆடைகள், காதல் காட்சிகள் என இன்றைய கதாநாயகிகள் நடிக்க ஆசைப்படும் காலத்தில் இந்த மாதிரியான கதாபாத்திரத்தில் நடிக்க ஒரு துணிச்சல் வேண்டும். அது கீர்த்தி சுரேஷிடம் இருப்பது எதிர்பாராத ஆச்சரியம்தான். உரிமைக்குக் குரல் கொடுப்பவராக தன் குரலையும் பதிய வைத்துள்ளார் கீர்த்தி.

பந்தயத்தில் தோற்றால் தான் வளர்த்த நாயையே கொடூரமாகக் கொலை செய்யும் ஆரம்பக் காட்சியிலேயே பகத் பாசிலின் ரத்தினவேல் கதாபாத்திரம் எப்படிப்பட்டது என்பதைப் புரிய வைக்கிறார் இயக்குநர். மாவட்ட அரசியலில் தன்னுடைய சாதியின் ஆதிக்கம், தனது ஆதிக்கம்தான் பெரிதாக இருக்க வேண்டும் என்ற குணம். அண்ணனாக இருந்தாலும் சரி, சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும் சரி அனைவரையும் அடக்கி ஆளத் துடிக்கிறார். முதல்வரை சந்தித்தாலும் தனது பின்னணி என்பதைச் சொல்லிவிட்டு வேறு கட்சியில் சேருகிறார். அந்த ஒரு இடைவேளை காட்சியும் அதற்குப் பிறகான காட்சிகளும் பகத் பாசிலின் வில்லத்தனத்தை வரும் காலங்களிலும் பேச வைக்கும்.

காட்சிகள் ஏற்படுத்தும் தாக்கத்தை தனது பின்னணி இசையாலும், பாடல்களாலும் பலம் சேர்த்துள்ளார் ஏ. ஆர். ரஹ்மான்.

வடிவேலு, பகத் பாசில், கீர்த்தி சுரேஷ், உதயநிதி இவர்களை சுற்றி மட்டுமே மொத்த படமும் நகர்கிறது. வசனங்கள் மூலமும் சில காட்சிகள் மூலமும் சில பல அரசியலைக் குறியீடாக வைத்துள்ளார் இயக்குநர். இடைவேளைக்குப் பின்னர் தேர்தல் களம் மட்டும்தான் என்பதும் பகத், உதயநிதி இருவரிடையேயான போட்டி என்பதும் தொய்வை ஏற்படுத்தி விடுகிறது. இது போன்ற காட்சிகளை முன்னரே பல படங்களில் பார்த்துவிட்டதால் சுவாரசியம் குறைகிறது. உச்சக்காட்சியும் இப்படித்தான் முடியும் என்பதையும் ஊகிக்க முடிகிறது. சாதி அரசியல், மோதல்தான் படமென்பதால் அரசியல் ஆர்வமுள்ளவர்களை இப்படம் அதிகம் ஈர்க்கலாம். திரைப்படமாகப் பார்த்தால், சராசரி, குடும்பத்து ரசிகர்களை ஈர்க்கும்படியான கதை படத்தில் இல்லை என்பதும் மறுக்க முடியாத உண்மை.



# சிந்திய கண்ணீர்துளி

அனுராக் காஷ்யப்பின் ‘கென்னடி’ படத்தில் நடிக்கிறார் சன்னி லியோன். இதற்காக கேன்ஸ் திரைப்பட விழா சென்று சிவப்பு கம்பளத்தில் நின்று போஸ் கொடுத்தபோது அவர் கண்களில் எட்டிப் பார்த்தது ஒற்றைக் கண்ணீர்த் துளி. அங்கிருந்தவர்கள் இதைப் பாரத்து எழுந்து நின்று கைதட்டினார்களாம்.

“பொலிவூட் வருவேன், படங்களில் நடிப்பேன் என்று நான் நினைத்துக்கூடப் பார்த்ததில்லை. ‘வயது வந்தோருக்கான பட நடிகை’ என்ற என் கடந்த கால கசப்பான அடையாளங்களை ஒட்டு மொத்தமாகத் துடைத்துவிட விரும்புகி றேன். அதற்கு இந்தப் படம் உதவும்” என்று நெகிழ்கிறார்.



# சிவாவின் புதிய நாயகி

நடிகர் சிவகார்த்திகேயன் நடித்து முடித்துள்ள மாவீரன் படம் வருகின்ற ஜூலை 14 அன்று திரைக்கு வருகிறது.

இயக்குநர் ஏ. ஆர். முருகதாஸ் இயக்கத்தில் சிவகார்த்திகேயன் ஒரு படத்தில் நடிக்கவுள்ளார். இந்த படத்தில் சிவகார்த்திகேயனுக்கு ஜோடியாக நடிக்க மிருணாள் தாகூர் உடன் பேச்சு நடத்தி வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இவர் துல்கர் சல்மான் நடித்த சீதா ராமம் படத்தின் மூலம் பிரபலமானார்.



# சத்தமின்றி சாதித்தல்

சத்தமே இல்லாமல் பல படங்களில் நடித்து வருகிறார் ஆண்ட்ரியா. மிஷ்கினின் ‘பிசாசு 2’ தவிர, ‘கா’, ‘மாளிகை’, ‘நோ என்ட்ரி’ என வரிசையாக மூன்று நாயகியை மையமாக வைத்த படங்களையும் முடித்துக் கொடுத்துவிட்டார். இதுதவிர, நடன இயக்குநர் பாபி இயக்குநராக அறிமுகமாகும் படம் ஒன்றிலும், ‘துப்பாக்கி முனை’ படத்தின் இயக்குநர் தினேஷ் செல்வராஜின் படத்திலும் நடித்துவருகிறார். இடையே தெலுங்கிலும் ஒரு படத்தில் நடித்து வருகிறார்.

# உலகக் கிண்ணம் தகவல்கள்




இந்தியாவில் நடைபெற உள்ள ஒரு நாள் கிரிக்கெட் உலகக் கிண்ணப் போட்டிக்கான அட்டவணையை சர்வதேச கிரிக்கெட் வெளியிட்டுள்ளது.

இதன்படி ஒக்ரோபர் 5 முதல் நவம்பர் 19ஆம் திகதி வரை ஒருநாள் கிரிக்கெட் உலகக் கிண்ணத் தொடர் நடைபெறவுள்ளது. இந்தத்தொடரில் 10 அணிகள் கலந்து கொள்கின்றன. இந்தியா, ஆப்கானிஸ்தான் அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, பங்களாதேஷ், நியூசிலாந்து, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா ஆகிய 8 அணிகள் நேரடியாக கலந்து கொள்ள தகுதி பெற்றிருந்தன.

மீதம் உள்ள இரு அணிகள் தகுதி சுற்றின் வாயிலாக தேர்வு செய்யப்படவுள்ளன. ஹைதராபாத், அகமதாபாத், தர்மசாலா, டில்லி, சென்னை, லக்னோ, புனே, பெங்களூர், மும்பை, கொல்கத்தா ஆகிய 10 மைதானங்களில் போட்டிகள் நடைபெறவுள்ளன. 46 நாட்கள் நடைபெறும் இந்த கிரிக்கெட் திருவிழாவில் மொத்தம் 48 போட்டிகள் நடைபெறுகின்றன.  றொபின் சுற்று முறையில் லீக் சுற்று நடைபெறுகிறது.

இதன்படி ஒவ்வோர் அணியும் தலா 9 போட்டிகளில் விளையாடும். புள்ளிகள் அடிப்படையில் முதல் 4 இடங்களை பிடிக்கும் அணிகள் அரை இறுதி சுற்றுக்கு முன்னேறும். முதல் அரையிறுதிப் போட்டி நவம்பர் 15ஆம் திகதி மும்பையிலும், 2ஆவது அரையிறுதிப் போட்டி நவம்பர் 16இல் கொல்கத்தாவிலும் நடைபெறவுள்ளன. நவம்பர் 19ஆம் திகதி அகமதாபாத்தில் இறுதிப் போட்டி நடைபெறுகிறது.

தொடரின் முதல் போட்டியில் நடப்பு சம்பியனான இங்கிலாந்து அணி, நியூசிலாந்துடன் ஒக்ரோபர் 5ஆம் திகதி மோதுகிறது. இந்த ஆட்டம் 1.30 இலட்சம் பேர் அமர்ந்து போட்டியை கண்டு களிக்கும் வசதி கொண்ட அகமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி மைதானத்தில் பிற்பகல் 2 மணிக்கு நடைபெறுகிறது. மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள இந்தியா - பாகிஸ்தான் அணிகள் இடையிலான போட்டி ஒக்ரோபர் 15ஆம் திகதி அகமதாபாத்தில் நடைபெறுகிறது.

குவாஹாட்டி, திருவனந்தபுரம், ஹைதராபாத் ஆகிய மைதானங்களில் பயிற்சிப் போட்டிகள் செப்ரெம்பர் 29 முதல் ஒக்ரோபர் 3ஆம் திகதி வரை நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

**8,400 கி.மீ. பயணிக்கும் இந்திய அணி**

உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரில் ரோஹித் சர்மா தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி தனது 9 லீக் ஆட்டங்களை 9 நகரங்களில் விளையாடுகிறது. இதற்காக இந்திய அணி வீரர்கள் 34 நாட்களில் 8,400 கிலோ மீற்றர் தூரம் பயணிக்கவுள்ளனர். ஒரு வேளை இந்திய அணி அரை இறுதி மற்றும் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றால் 9,700 கிலோ மீற்றர் தூரம் பயணம் மேற்கொள்ளும்.

விமான பயணத்தில் 34 நாட்களில் 8,400 கிலோ மீற்றர் என்பது என்பது பெரிதாகத் தெரியவில்லை என்றாலும், இந்திய வீரர்கள் இரவு 11 மணிக்குள் தங்கள் ஆட்டத்தை முடித்துவிட்டு அதன் பின்னர் அடுத்த போட்டிக்காக விமானத்தை பிடிக்க வேண்டும். இதை கருத்தில் கொண்டால் 100 ஓவர்கள் களத்தில் விளையாடி விட்டு பயணம் மேற்கொள்வது சோர்வை அளிக்கக்கூடும்.

ஒரு போட்டிக்கும் அடுத்த போட்டிக்கும் 3 நாட்கள் இடைவெளி என்ற நிலையில் வலை பயிற்சிக்குக்கூட போதுமான நேரம் இருக்குமா? என்பதும் சந்தேகமாகி உள்ளது. தொடரில் பங்கேற்கும் மற்ற அணிகளைவிட இந்தியா மட்டுமே அதிக தொலைவு பயணிக்கிறது.

‘போட்டி கடுமையாக இருக்கும்’ - ரோஹித் சர்மா

இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர்  ரோஹித் சர்மா கூறும்போது, “இந்த உலகக் கோப்பை மிகவும் போட்டித் தன்மை வாய்ந்ததாக இருக்கும், ஏனெனில் ஆட்டம் விரைவுத் தன்மை கொண்டதாகி உள்ளது மற்றும் அணிகள் முன்பை விட நேர்மறையாக விளையாடுகின்றன. உலகம் முழுவதும் உள்ள ரசிகர்களுக்கு இவை அனைத்தும் நல்ல விஷயமாக இருக்கும். அவர்களுக்கு பல சிலிர்ப்பான தருணங்களை வழங்குவதை இந்தத் தொடர் உறுதி செய்யும். நாங்கள் சிறப்பாக தயாராக காத்திருக்கிறோம். அக்டோபர்-நவம்பரில் சிறப்பாக செயல்படுவோம்” என்றார்.

**5 இடங்களில் ஆடும் பாகிஸ்தான் அணி**

உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரில் பாகிஸ்தான் அணியின் லீக் போட்டிகள் ஹைதராபாத், அகமதா பாத், பெங்களூர், சென்னை, கொல் கத்தா ஆகிய 5 நகரங்களில் நடைபெறுகிறது.

**பாகிஸ்தானின் பிடிவாதம்**

உலகக் கோப்பை கிரிக்கெட் தொடருக்கான அட்டவணை வெளியான நிலையில், இந்தத் தொடரில் நாங்கள் பங்கேற்பது மற்றும் ஒக்ரோபர் 15ஆம் திகதி அகமதாபாத்தில் அல்லது நாங்கள் அரையிறுதிக்குத் தகுதி பெற்றால் மும்பையில் விளையாடுவது என அனைத்தும் அரசாங்கத்தின் அனுமதியைப் பொறுத்ததுதான் என பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. ஆனால், ஐ. சி.சி. தொடர்பாளர் கூறும்போது, “அனைத்து கிரிக்கெட் வாரியங்களும் தங்கள் நாட்டின் விதிகள் மற்றும் சட்டங்களுக்குக் கட்டுப்பட வேண்டும், நாங்கள் அதை மதிக்கிறோம். ஆனால் ஆடவர் கிரிக்கெட் உலகக் கோப்பைக்காக பாகிஸ்தான் அணி இந்தியாவுக்கு வருகை தரும் என்று நாங்கள் நம்புகிறோம்” என்றார்.

**தவறிய ஹைதராபாத்**

உலகக் கோப்பை கிரிக்கெட் தொடர் நடைபெறும் 10 மைதானங்களில் இந்திய அணி 9 மைதானங்களில் லீக் ஆட்டங்களை விளையாடுகிறது. இதில் ஹைதராபாத்தில் மட்டுமே இந்திய அணி விளையாடும் ஆட்டம் இடம் பெறவில்லை.

**பகலில் 6 போட்டிகள்**

உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரில் மொத்தம் 48 ஆட்டங்கள் நடைபெறுகின்றன. இதில் 6 போட்டிகள் பகலில் நடத்தப்பட உள்ளன. மீதம் உள்ள அனைத்து போட்டிகளும் பகலிரவு ஆட்டங்களாக நடைபெற உள்ளன. பகலில் நடைபெறும் போட்டி காலை 10.30 மணிக்கும், பகலிரவு ஆட்டங்கள் பிற்பகல் 2 மணிக்கும் தொடங்கும்.

**அரை இறுதி திருப்பம்**

உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரின் அரை இறுதி ஆட்டங்கள் கொல்கத்தா மற்றும் மும்பையில் நடைபெற உள்ளன. பாகிஸ்தான் அணி அரையிறுதிக்கு தகுதி பெற்றால் அந்த அணி கொல்கத்தாவில் விளையாடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளையில் இந்திய அணி அரை இறுதிக்கு முன்னேறினால் அந்த ஆட்டம் மும்பையில் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒருவேளை இந்தியா - பாகிஸ்தான் அணிகள் அரையிறுதி சுற்றில் நேருக்கு நேர் சந்திக்க நேரிட்டால் அந்தப் போட்டி கொல்கத்தாவில் நடத்தப்படும் எனவும் ஐ. சி. சி. தெரிவித்துள்ளது.

**மேலதிக நாள்**

உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரின் அரையிறுதி போட்டிகள் மற்றும் இறுதிப் போட்டிக்கு மேலதிக நாள் ஒதுக்கப்பட்டுள்ளது. மழை காரணமாக போட்டி நடைபெற முடியாத சூழ்நிலை ஏற்பட்டால் மேலதிக நாளில் போட்டி நடத்தப்படும்.

## ஐசிசி ஒருநாள் கிரிக்கெட் உலகக் கோப்பை அட்டவணை

| தேதி | மோதும் அணிகள் | இடம் | நேரம் |
|---|---|---|---|
| அக்.5 | இங்கிலாந்து - நியூஸிலாந்து | அகமதாபாத் | பிற்பகல் 2 மணி |
| அக்.6 | பாகிஸ்தான் - குவாலிபயர் 1 | ஹைதராபாத் | பிற்பகல் 2 மணி |
| அக்.7 | வங்கதேசம் - ஆப்கானிஸ்தான் | தரம்சாலா | பகல் 10.30 மணி |
| அக்.7 | தென் ஆப்பிரிக்கா - குவாலிபயர் 2 | டெல்லி | பிற்பகல் 2 மணி |
| அக்.8 | இந்தியா - ஆஸ்திரேலியா | சென்னை | பிற்பகல் 2 மணி |
| அக்.9 | நியூஸிலாந்து - குவாலிபயர் 1 | ஹைதராபாத் | பிற்பகல் 2 மணி |
| அக்.10 | இங்கிலாந்து - வங்கதேசம் | தரம்சாலா | பிற்பகல் 2 மணி |
| அக்.11 | இந்தியா - ஆப்கானிஸ்தான் | டெல்லி | பிற்பகல் 2 மணி |
| அக்.12 | பாகிஸ்தான் - குவாலிபயர் 2 | ஹைதராபாத் | பிற்பகல் 2 மணி |
| அக்.13 | ஆஸ்திரேலியா - தென் ஆப்பிரிக்கா | லக்னோ | பிற்பகல் 2 மணி |
| அக்.14 | நியூஸிலாந்து - வங்கதேசம் | சென்னை | காலை 10.30 மணி |
| அக்.14 | இங்கிலாந்து - ஆப்கானிஸ்தான் | டெல்லி | பிற்பகல் 2 மணி |
| அக்.15 | இந்தியா - பாகிஸ்தான் | அகமதாபாத் | பிற்பகல் 2 மணி |
| அக்.16 | ஆஸ்திரேலியா - குவாலிபயர் 2 | லக்னோ | பிற்பகல் 2 மணி |
| அக்.17 | தென் ஆப்பிரிக்கா - குவாலிபயர் 1 | தரம்சாலா | பிற்பகல் 2 மணி |
| அக்.18 | நியூஸிலாந்து - ஆப்கானிஸ்தான் | சென்னை | பிற்பகல் 2 மணி |
| அக்.19 | இந்தியா - வங்கதேசம் | புனே | பிற்பகல் 2 மணி |
| அக்.20 | ஆஸ்திரேலியா - பாகிஸ்தான் | பெங்களூரு | பிற்பகல் 2 மணி |
| அக்.21 | குவாலிபயர் 1 - குவாலிபயர் 2 | லக்னோ | காலை 10.30 மணி |
| அக்.21 | இங்கிலாந்து - தென் ஆப்பிரிக்கா | மும்பை | பிற்பகல் 2 மணி |
| அக்.22 | இந்தியா - நியூஸிலாந்து | தரம்சாலா | பிற்பகல் 2 மணி |
| அக்.23 | பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் | சென்னை | பிற்பகல் 2 மணி |
| அக்.24 | தென் ஆப்பிரிக்கா - வங்கதேசம் | மும்பை | பிற்பகல் 2 மணி |
| அக்.25 | ஆஸ்திரேலியா - குவாலிபயர் 1 | டெல்லி | பிற்பகல் 2 மணி |
| அக்.26 | இங்கிலாந்து - குவாலிபயர் 2 | பெங்களூரு | பிற்பகல் 2 மணி |
| அக்.27 | பாகிஸ்தான் - தென் ஆப்பிரிக்கா | சென்னை | பிற்பகல் 2 மணி |
| அக்.28 | ஆஸ்திரேலியா - நியூஸிலாந்து | தரம்சாலா | காலை 10.30 மணி |
| அக்.28 | குவாலிபயர் 1 - வங்கதேசம் | கொல்கத்தா | பிற்பகல் 2 மணி |
| அக்.29 | இந்தியா - இங்கிலாந்து | லக்னோ | பிற்பகல் 2 மணி |
| அக்.30 | ஆப்கானிஸ்தான் - குவாலிபயர் 2 | புனே | பிற்பகல் 2 மணி |
| அக்.31 | பாகிஸ்தான் - வங்கதேசம் | கொல்கத்தா | பிற்பகல் 2 மணி |
| நவ.1 | நியூஸிலாந்து - தென் ஆப்பிரிக்கா | புனே | பிற்பகல் 2 மணி |
| நவ.2 | இந்தியா - குவாலிபயர் 2 | மும்பை | பிற்பகல் 2 மணி |
| நவ.3 | குவாலிபயர் 1 - ஆப்கானிஸ்தான் | லக்னோ | பிற்பகல் 2 மணி |
| நவ.4 | நியூஸிலாந்து - பாகிஸ்தான் | பெங்களூரு | காலை 10.30 மணி |
| நவ.4 | இங்கிலாந்து - ஆஸ்திரேலியா | அகமதாபாத் | பிற்பகல் 2 மணி |
| நவ.5 | இந்தியா - தென் ஆப்பிரிக்கா | கொல்கத்தா | பிற்பகல் 2 மணி |
| நவ.6 | வங்கதேசம் - குவாலிபயர் 2 | டெல்லி | பிற்பகல் 2 மணி |
| நவ.7 | ஆஸ்திரேலியா - ஆப்கானிஸ்தான் | மும்பை | பிற்பகல் 2 மணி |
| நவ.8 | இங்கிலாந்து - குவாலிபயர் 1 | புனே | பிற்பகல் 2 மணி |
| நவ.9 | நியூஸிலாந்து - குவாலிபயர் 2 | பெங்களூரு | பிற்பகல் 2 மணி |
| நவ.10 | தென் ஆப்பிரிக்கா - ஆப்கானிஸ்தான் | அகமதாபாத் | பிற்பகல் 2 மணி |
| நவ.11 | இந்தியா - குவாலிபயர் 1 | பெங்களூரு | பிற்பகல் 2 மணி |
| நவ.12 | ஆஸ்திரேலியா - வங்கதேசம் | புனே | காலை 10.30 மணி |
| நவ.12 | இங்கிலாந்து - பாகிஸ்தான் | கொல்கத்தா | பிற்பகல் 2 மணி |
| நவ.15 | அரை இறுதி 1 | மும்பை | பிற்பகல் 2 மணி |
| நவ.16 | அரை இறுதி 2 | கொல்கத்தா | பிற்பகல் 2 மணி |
| நவ.19 | இறுதிப் போட்டி | அகமதாபாத் | பிற்பகல் 2 மணி |

# மகாஜனக் கல்லூரி கனடா பழைய மாணவர் சங்கத்தின் ஒன்றுகூடல்

## புலம்பெயர் மடல்

குரு அரவிந்தன்

மகாஜனக் கல்லூரி கனடா பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த ஒன்று கூடல் நிகழ்ச்சியும், நிறுவுனர் நினைவு தினமும் சென்ற சனிக்கிழமை 24-6-2023 கனடா, ஸ்காபரோ மக்கோவான் வீதியில் உள்ள மிலிக்கன் பூங்காவில் இடம் பெற்றது. கல்லூரியின் பழைய மாணவர்களான பெற்றோரும் பிள்ளைகளும், பேரப்பிள்ளைகளுமாகக் குடும்பமாக வந்து இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். கோவிட் - 19 காரணமாக ஒதுங்கி இருந்தவர்கள் பலரை மீண்டும் சந்திக்கச் சந்தர்ப்பம் கிடைத்தது.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட தம்பையா தர்மலிங்கம் அவர்களைச் சங்கத் தலைவர் திரு. விஜயகுமார் அறிமுகம் செய்து வைத்தார். இப்போது கனடாவில் இருக்கும் மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவர்களில் மிகவும் மூத்தவரான இவரது 100வது பிறந்த தினத்தையும் கேக் வெட்டி, பாராட்டுக் கவிதைபாடிப் பழைய மாணவர்கள் கொண்டாடினார்கள். 1923 ஆம் ஆண்டு யூன் மாதம் யாழ்ப்பாணத்தில் உள்ள அளவெட்டியில் பிறந்த இவர் ஆரம்ப கல்வியை அளவெட்டி ஞானோதயா பாடசாலையிலும், அதைத் தொடர்ந்து தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியிலும், உயர் கல்வியை பரமேஸ்வராக் கல்லூரியிலும் கற்றார்.

மிகவும் ஞாபக சக்தியோடு அவர் சொன்ன பழைய கதைகளைப் பழைய மாணவர்களும், இளைய தலைமுறையினரும் மிகவும் ஆர்வத்தோடு கேட்டார்கள். பாடசாலையில் தங்கள் காலத்தில் திரு. சின்னப்பா அவர்கள் அதிபராக இருந்ததாகவும், அங்கு அப்போது ஐந்து வகுப்பறைகளும், ஒரு நூலகமும் இருந்ததாகச் சொன்னார். அக்காலத்தில் தாங்கள் வேட்டியும் சால்வைத் துண்டும் அணிந்து மேற்சட்டை இல்லாமல் பாடசாலைக்குச் சென்றதாகவும், மலேசியாவில் இருந்து வந்த ஒரே ஒரு மாணவன் மட்டும் அரைக் காற்சட்டையும், கோட்டும் போட்டுக் கொண்டு வந்ததாகவும் குறிப்பிட்டார்.



1994 ஆம் ஆண்டு கனடா வந்ததாகவும், தனக்கு உதவிகள் செய்த ஆசிரியர்களான தம்பு மாஸ்டர், சின்னத்துரை மாஸ்டர், காசிப்பிள்ளை மாஸ்டர், சுந்தரம்பிள்ளை மாஸ்டர் ஆகியோரையும் நினைவு கூர்ந்தார்.

பாதுகாப்பு அமைச்சில் பணி புரிந்த போது புதுடில்லி ஜவர்கலால் நேரு பல்கலைக்கழகத்தில் பயிற்சி பெறுவதற்காகப் புலமைப்பரிசு பெற்று புதுடில்லி சென்றதாகவும், அப்போது பிரதமராக இருந்த இந்திராகாந்தியின் அழைப்பின் பெயரில் அவருடன் விருந்தில் கலந்து கொண்டதாகவும் தெரிவித்தார். மகாஜனக் கல்லூரியின் வெள்ளிவிழா, பொன்விழா, பவளவிழா, நூற்றாண்டு விழா எல்லாவற்றிலும் கலந்து கொண்ட பெருமை பிரதம விருந்தினரான இவருக்கு உண்டு.

பிரதம விருந்தினரின் உரையைத் தொடர்ந்து சங்கத்தின் முன்னாள் தலைவர் திரு. புவனச்சந்திரன் நிறுவுனர் பற்றி உரையாற்றினார். அதைத் தொடர்ந்து போசகர் திரு. கதிர் துரைசிங்கம், மற்றும் சிறப்புவிருந்தினர் குரு அரவிந்தன் ஆகியோரும் உரையாற்றினார்கள். மழை காரணமாக இளையோருக்கான விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவில்லை. நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்குக் காலை, மதிய உணவுகள் வழங்கப்பட்டன. செயலாளரின் நன்றியுரையுடன் நிகழ்வு இனிதே முடிவுற்றது.



# வியுக்தியார் பதில்கள்

உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி

வியுக்தியார் பதில்கள்
ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
viyukthiyar@gmail.com

**எஸ். சிவராமகிருஸ்ணன், வெள்ளவத்தை, கொழும்பு 6.**

**கேள்வி:** 'தமிழ் மக்களின் இனப்பிரச்னையை தீர்க்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் தமிழ் கட்சிகளுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பேச்சுகளை மேற்கொள்ள வில்லை. பேச்சு ஆரம்பிக்கப்பட்டபோதே ஒற்றையாட்சி என்ற வரையறைக்குள்தான் தீர்வு என்பதை ரணில் கூறினார். சர்வதேச மட்டத்தில் ரணில் விக்கிர மசிங்கவின் செல்வாக்கை உயர்த்தும் நோக்கில் இனப்பிரச்னைக்கு தீர்வு என்ற கண்துடைப்பு பேச்சுக்கு சென்ற தமிழரசு கட்சியினர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், விக்னேஸ்வரன் அணியினரை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்" என்று கஜேந்திரகுமார் கூறியிருக்கிறாரே?

**வியுக்தியார்:** இதுகாலவரை தங்களைத் தவிர மற்றக்கட்சிகள் எல்லாம் ஒற்றையாட்சிக்குள் தீர்வை ஏற்றுக்கொள்ளப்போகிறார்கள் என்று கூக்குரலிட்டுக்கொண்டிருந்தவர் கஜேந்திரகுமார். இப்போது ஒற்றையாட்சிக்குள்தான் தீர்வு என்று ரணில் ஆரம்பத்திலேயே சொன்ன பின்னரும் அவர்கள் பேச்சுவார்ததையில் கலந்துகொண்டது ரணிலின் செல்வாக்கை உயர்த்த என்கிறார். துப்பாக்கியக்காட்டி அவரை புலனாய்வாளர்கள் மிரட்டியபின்னர் ரெம்பவே குழம்பிப்போய் இருக்கிறார் என்பது தெரிகின்றது.

---

**தி. துஷியந்தன், இருபாலை, கோப்பாய்.**

**கேள்வி:** இந்தியாவை ஆளும் பாரதீய ஜனதாக் கட்சியின் தமிழக தலைவரான அண்ணாமலை பிரிட்டனில் தமிழர்மத்தியில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கடந்த வாரம் கலந்துகொண்டார். அங்கு அவர் பேசியபோது இந்தியப் பிரதமர் மோடியால்தான் இலங்கை பிரச்னைக்குத் தீர்வு காண முடியும் என்று தெரிவித்துள்ளாரே.

**வியுக்தியார்:** அவர் அப்படிச் சொல்லாமல் விட்டால்தான் நீங்கள் ஆச்சரியப்படவேண்டும். இந்தியப்பிரதமர் நினைத்தால் லங்கைப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும் என்பது உண்மைதான். ஆனால் கடந்த பத்து ஆண்டுகளாக ஆட்சியில் இருக்கும் அவர், யாழ்ப்பாணத்தில் கலாச்சார மத்திய நிலையத்தை கட்டிக்கொடுத்ததும், யாழ்ப்பாணத்திற்கு வந்துசென்றதும்தான் செய்தார். ஜேஆர் ஜெயவர்த்தனவையே பணியவைத்து (அவர் அதிலும் தனது திறமையை காட்டியது வேறு விடயம்) மாகாணசபைகளை கொண்டுவந்ததும், யுத்தம் முடிந்ததும் ஐம்பதாயிரம் வீடுகளை கட்டிக்கொடுத்ததும் காங்கிரஸ் ஆட்சியில்தான் நடந்தது என்பது அண்ணாமலைக்கு தெரிந்திருக்காதுதானே. அதானிக்கு இலங்கையில் முதலிடுவதற்கு காட்டும் அக்கறையில் ஒரு சிறிய அளவாவது தமிழ் மக்கள் பிரச்சினையில் மோடி அக்கறை செலுத்தியிருந்தால் பல பிரச்சிகைளுக்கு தீர்வு கண்டிருக்கலாம்தான்.

---

**கந்தசாமி நிதர்சன், தவசிகுளம், கொடிகாமம்.**

**கேள்வி:** ஐநா நிறுவனமான யுனெஸ்கோ, சிங்களவர்களின் வரலாற்று நூலான மகாவம்சம் நூலை உலக பாரம்பரிய ஆவணங்களில் ஒன்றாக ஏற்றுள்ளது என்று கூறியுள்ள மனோ கணேசன் எம். பி., ஈழத் தமிழ் அரசியல் இவை தொடர்பில் ஐ. நா. நிறுவனங்களின் மீது செல்வாக்கு செலுத்தவில்லை என்றும் கவலை தெரிவித்துள்ளாரே.

**வியுக்தியார்:** மகாவம்ச கதை மூலமாக, கி. மு. 543 இல் கலிங்கத்திலிருந்து விஜய இளவரசன் வந்து இலங்கை தீவில் கரை இறங்கினான் என்றும், வந்தவன் ஆதிராணி குவேனியை மணந்தான், பின் பாண்டிய தமிழ்நாட்டு இளவரசியையும் மணந்தான், அவனின் 700 தோழர்களும் பாண்டிய கன்னியரை மணந்தார்கள், சிங்கள இனம் உருவானது என்றெல்லாம் கூறப்படுவது குறித்தும் மனோ கணேசன் தெரிவித்திருந்தாரே கவனிக்கவில்லையா? விஜய வருவதற்கு முன்னரே தமிழர்கள் வாழ்ந்தார்கள் என்பதை மகாவம்சம் சொல்லுகின்றபோது அதைவிட வேறு சான்று தமிழர்களுக்கு எதற்கு என்று நம்மவர்கள் நினைத்திருக்கலாம். அதனால்தான் மகாவம்சத்தை யுனெஸ்கோ ஏற்றுக்கொள்வதை விரும்பியிருப்பார்களோ என்னவோ?. மகாவம்சத்திற்கு பதிலாக யுனொஸ்கோவிடம் கையளிக்க நம்மிடம்தான் என்ன நூல் இருக்கின்றது?.

---

**நடராஜா விஸ்வா, கோயில்குளம், வவுனியா.**

**கேள்வி:** அரசியல் பிரச்சினைக்கு தீர்வு காணவும் நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிக்கவும் அனைத்துக் கட்சிகளும் ஓரணியில் ஒன்றிணைய வேண்டும் என்றும் முக்கியமாக, தமிழ்க் கட்சிகள் தனித்தனியாக பிரிந்து நிற்காமல் தம்முடன் ஒன்றிணைந்து பயணிக்க முன்வர வேண்டும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கிறார். அப்படியெனில் ஒற்றுமையாக வராவிட்டால் பிரச்சினைக்கு தீர்வுகாணமாட்டேன் என்கிறாரோ?

**வியுக்தியார்:** அரசியல்கட்சிகள் என்றாலே ஒன்றையொன்று போட்டிபோடுவனதானே. அவர்கள் எதற்குமே ஒற்றுமைப்படப்போவதில்லை என்பதும் ரணிலுக்கு தெரியாததல்ல. அவர் அனைவரும் ஒற்றுமைப்பட்டு ஒரு தீர்வுக்கு ஆதரவு வழங்கவேண்டும் என்று கேட்பதிலும் நியாயம் இல்லாமல் இல்லைத்தானே?. இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் மூலம் தமிழர் பிரச்சினைக்கு தீர்வாக மாகாணசபைகள் கொண்டுவரப்பட்டது. ஆனால் அதனை ஒருபகுதி தமிழர்கள் ஏற்றுக்கொள்ள, புலிகள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. அதனால் மாகாணசபைகளும் ஒழுங்காக இயங்கவில்லை. தீர்வும் இழுபறியில் தெடர்கின்றது. தமிழ்க்கட்சிகள் எல்லாமே சமஷ்டிதான் தீர்வு என்று சொன்னாலும் இப்போது உடனடியாக செய்யக்கூடிய விடயங்களில் கூட ஒவ்வொருவரும் ஒவ்வொரு நிலைப்பாட்டில் அல்லவா இருக்கின்றனர். எதைக் கேட்பதென்றாலும் ஒன்றைக் கேட்டால்தானே தீர்வுகாணமுடியும்.?

---

**கே. ரமணன், மாமாங்கம், மட்டக்களப்பு.**

**கேள்வி:** ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்த மாதம் டில்லி செல்வதற்கு முன்னரே, மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் என்ற வாக்குறுதியை கொழும்பிடமிருந்து டில்லி எதிர்பார்கின்றது என இராஜதந்திர வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது என்று ஈழநாடுவில் செய்தி ஒன்று பார்த்தேன். அப்படியெனில் விரைவில் மாகாணசபைகளுக்கு தேர்தல் நடக்கும் என்று நம்பலாமா?.

**வியுக்தியார்:** மாகாணசபைகளுக்கு தேர்தல் நடாத்தப்போவதில்லை என்று ஜனாதிபதி எப்போதுமே சொல்லவில்லையே?. அப்போ எதற்கு தேர்தல் நடாத்தப்படும் என்ற உறுதிமாழி என்பதுதான் புரியவில்லை. நாட்டில் முதலில் ஜனாதிபதித் தேர்தல்தான் நடக்கும் என்று அவர் தெளிவாக சொல்லிவிட்டார். அப்படியெனில் அதற்கு பிறகு நடக்கும் தேர்தலுக்கு இவர் எப்படி வாக்குறுதி வழங்குவது. அவர் முதலில் வெற்றிபெறவேண்டுமே. வெற்றி பெற்றால்தானே அவர் வாக்குறுதி கொடுத்தாலும் அதனை நிறைவேற்றலாம். ஆனால் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளுக்காக அவர் தமிழ் கட்சிகளை அணுகுகின்றபோது, அவர்கள் ஆகக்குறைந்தது மாகாணசபைகளுக்கு தேர்தல் நடாத்தக்கூடிய வகையில் பாராளுமன்றத்தில் சட்டத்தையாவது மாற்றியமைக்கவேண்டும் என்றாவது நிபந்தனை விதிக்கவேண்டும்.

வ.ந.கிரிதரன்

# கை இல் ஊமன் கண்ணின் காக்கும் வெண்ணெய்!

“இடிக்கும் கேளிர்! நுங்குறை ஆக
நிறுக்கல் ஆற்றினோ நன்று,
மற்றில்ல,
ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கில்,
கை இல் ஊமன் கண்ணின் காக்கும்
வெண்ணெய் உணங்கல் போலப்
பரந்தன்று இந்நோய், நோன்று
கொளற்கு அரிதே”
- வெள்ளிவீதியார் ((குறுந்தொகை)

1.


இருண்டு விட்டிருந்த டொராண்டோ மாநகரத்து இரவொன்றில் தன் அபார்ட்மென்டின் பலகணியில் வந்து சாய்வு நாற்காலியில் சாய்ந்தபடியே விரிந்திருந்த விண்ணை நோக்கினான் கேசவன். நகரத்து இரவு வான் ஒரு சில நட்சத்திரங்களுடன் இருண்டிருந்தாலும், அன்று பெளர்ணமி நாளென்பதால் தண்ணொளியில் இரவு குளித்துக் கொண்டிருந்தது. அவனுக்குச் சிறு வயதிலிருந்தே நட்சத்திரங்கள் கொட்டிக் கிடக்கும் இரவு வானை இரசிப்பதென்றால் மிகவும் பிடித்தமான பொழுது போக்குகளிலொன்று. இரவு வானின் விரிவும், நட்சத்திரக் கன்னியர்களின் கெக்களிப்பும் எப்பொழுதும் அவனுக்குப் பிரமிப்புடன் இருப்பு பற்றிய சிந்தனைகளையும் ஏற்படுத்தின. எவ்வளவு நேரமென்றாலும் அவனால் இரவு வானை இரசித்துக்கொண்டேயிருக்க முடியும்.

வனங்களும், குளங்கும் நிறைந்த வன்னி மண்ணில் வளர்ந்தவன் அவன். எத்தனை புள்ளினங்கள்! எத்தனை மிருகங்கள்! எத்தனை வகை வகையான விருட்சங்கள்! வன்னியில் அவனை மிகவும் கவர்ந்தவை செந்தாமை, வெண்டாமரைகள் பூத்துக்குலுங்கும் குளங்களும், புள்ளினங்களும் , பல்வகை மரங்களுமே. வவுனியாவிலிருந்து மன்னார் நோக்கிச் செல்லும் வீதியில் அமைந்திருந்தது குருமண்காடு. அங்குதான் அவன் வளர்ந்தான். குருமண்காடு வனப்பிரதேசமாகவிருந்த காலகட்டத்தில் அவனது வாழ்க்கை அங்கு கழிந்திருந்தது. அதனால் அவனுக்கு எப்பொழுதும் குருமண்காடும், அக்காலகட்ட நினைவுகளும் அழியாத கோலங்கள்.

இரவு வானும், சுடர்களும் அவனுக்கு மீண்டும் வன்னியில் கழிந்த பால்ய பருவ நினைவுகளில் நனவிடை தோய வைத்து விட்டன.

கேசவன் பெரிய குடிகாரன் அல்லன். ஆனால் மருந்து போல் ஒரு பெக் ரெமி பிரண்டியை விழுங்கிவிட்டு, ஏற்படும் மெல்லிய கணகணப்பில் இவ்விதமாக விரிந்திருக்கும் இரவு வானை இரசிப்பதில் அவனுக்கு எப்பொழுதுமே பெரு விருப்புண்டு. தண்ணொளி பரப்பும் முழுநிலாவைக் கண்டதும் அவனுக்கு பானுமதியின் நினைவும் கூட நினைவிலெழுந்து அவனை ஆட்டி வைக்கும். பானுமதியின் நினைவும் முழுநிலவின் தண்ணொளி தரும் இதமான உணர்வினைத்தரும்.

பானுமதி !அவனது இளம் வயதுத் தோழி. அவன் தன் பதின்ம வயதுகளில் பழகிய ஒரேயொரு பெண் அவள் மட்டும்தான். அவன் தன் பல்கலைக்கழகப் புகுமுகு வகுப்பில் கல்வி பயின்று கொண்டிருந்தபோது அவன் கணிதப் பாடத்துக்கு மட்டும் அதன் மீட்டல் வகுப்புக்காக டியூசன் எடுத்தான். அந்த மீட்டல் வகுப்பில் அவனுடன் படிக்க வந்த ஒரேயொரு பெண் அவள் மட்டுமே. அவளது வட்ட முகமும், காந்தக் கண்களும், இரட்டைப் பின்னல்களும், நெஞ்சை மயக்கும் புன்னகையும் அவனது பதின்ம வயதுகளில் அவனை ஆட்டிப்படைத்தன.



இப்பொழுது நினைத்தாலும் அவனது நினைவுகளில் யாழ்ப்பாணத்தின் அதிகாலைகள் நினைவிலெழுந்தன. அதிகாலை ஐந்து மணிக்கு டியூசன் வகுப்பு ஆரம்பமாகிவிடும். சுந்தரம் வாத்தியார் உயர்தரக் கணித்தத்தில் மிகச் சிறந்த டியூசன் ஆசிரியர்களிலொருவர். அவன் வகுப்புக்குச் செல்லும்போது புலர்ந்தும் புலராத மெல்லிருளில் யாழ்ப்பாணம் விழிக்கத்தொடங்கியிருக்கும். பெருமாள் கோயிலிருந்து ஒலிக்கும் மணியோசை காற்றில் மெல்லக் கலந்து வந்து காதுகளில் நுழையும்.

அவன் வகுப்புக்குச் சைக்கிளில் சென்று கொண்டிருக்கையில் பல சமயங்களில் அவளும் மார்பில் இரட்டைப் பின்னல்கள் புரள, சாந்துப்பொட்டு நெற்றியில் துலங்க, மார்புறப் புத்தகங்களை அணைத்தபடி, நிலம் பார்த்து நடந்து வந்துகொண்டிருப்பாள். சில சமயங்களில் அவள் நேரத்துடன் வகுப்புக்கு வந்திருப்பாள். அச்சமயங்களெல்லாம் பூட்டப்பட்டிருக்கும் வெளிக்கதவை அவள் வந்து திறந்து விடுவாள். அவ்விதம் திறந்து விடுகையில் அவனைப்பார்த்து ஒருகணம் புன்னகையைத் தவழ விட்டுவிட்டுச் செல்வாள். அவன் அதில் தன்னையிழந்து அன்று முழுவதும் அந்நினைவிலேயே மூழ்கிக் கிடப்பான்.

வகுப்பில் அவன் ஏதாவது வேடிக்கையாக வாத்தியருடன் பகடி விட்டால், எல்லோருடனும் சேர்ந்து அவளும் அழகாகச் சிரிப்பாள். அந்தச் சிரிப்புக்காகவே அவன் பல தடவைகள் வாத்தியாருடன் பகடி விடுவான்.

பதின்ம வயதுகளில் முதன் முறையாக அவனது வாழ்க்கையில் பெண்ணொருத்தியின் மீதான காதல் உணர்வுகளை அவன் உணர்ந்தது அவள் மூலமாகத்தான். இரவும் பகலும் அவனை அவள் மீதான காதல் உணர்வுகள் வாட்டின் வதக்கின. அக்காலகட்டத்தில் வெறி பிடித்து புத்தகங்களை வாசிக்கும் அவனுக்குப் பிடித்த சங்கப்பாடலொன்றிருந்தது. வெள்ளி வீதியார் எழுதிய பாடல். காதல் நோயை அற்புதமாக அவரைப்போல் வேறு யாரும் விபரித்திருக்கவில்லை என்று அவனுக்குப் பட்டது. கனலும் பாறையின் மேலுள்ள வெண்ணெய்யை உருகாமல் பாதுகாக்க வேண்டிய கைகளற்ற ஊமையொருவன் தன் கண்களால் வெண்ணெய்யை உருகாமல் பாதுகாக்க முடிவது எவ்வளவு கடினமோ அவ்வளவு கடினமானது காதல் நோய். “கை இல் ஊமன் கண்ணின் காக்கும் வெண்ணெய் உணங்கல் போலக் கடினமானது காதல் நோய் என்று அக்கவிதையில் வெள்ளிவீதியார் விபரித்திருப்பார். அவ்விதமாகத்தான் அன்று அவனையும் அவள் மீதான காதல் உணர்வுகளும் ஆட்டிப்படைத்தன.

இரவுகளில் ஊர் உறங்கும் சமயங்களில் அவன் இந்திய வானொலியில் ஒலிக்கும் நெஞ்சில் நிறைந்தவற்றைக் கேட்கும் நேயர் விருப்பப் பாடல்களில் மூழ்கிக் கிடப்பான். சில சமயங்களில் அவனது உணர்வுகளை அறியாது ஆனந்தமாக உறங்கும் ஊர் மேல் அவனுக்குச் சிறிது ஆத்திரமாகவுமிருக்கும். சூழல் காற்றின் அசைவு அதிகமாகி நெஞ்சை வருத்தும் சமயங்களில் அவனது “உயவு நோய் அறியாது துஞ்சும் ஊர்“ பற்றி அவன் அச்சமயங்களில் சிறிது ஆத்திரமும் அடைந்ததுண்டு.

மீண்டுமொரு முறை ஒரு மிடறை உள்ளே தள்ளினான். நினைவுகள் அழியாத கோலங்களாகத் தொடர்ந்தன.

அவள் மீதான அவனது காதல் உணர்வுகள் அவனை ஆட்டிப்படைத்தன. ஒரு நாள் அவற்றைப்பொறுக்கமுடியாமல் அவளுக்கொரு கடிதம் எழுதிக் கொடுத்தான். காதல் கடிதம். ஆரம்பத்தில் அவள் அதற்குப் பதிலளிக்காமல் அவனை அலைக்கழித்தாள். பின்னர் ஒரு மாதிரி அவனுக்குச் சாதகமாகப் பதிலளித்தாள்.

இந்தச் சமயத்தில் அவனுக்குப் பேராதனை பல்கலைகழகத்துக்கு பொறியியல்பீடத்துக்கு அனுமதி கிடைத்தது. படிப்பை முடித்து வேலையில் சேர்ந்த பொழுதுதான் இலங்கைப் பிரச்சினையை உபகண்டப் பிரச்சினையாக, உலகப்பிரச்சினையாக மாற்றிய 83 கறுப்பு ஜூலைக் கலவரம் வெடித்தது. கலவரத்துக்குள் சிக்கி ஊர் திரும்பியவனை அம்மா தன் கனடா அக்காவின் துணையுடன் உடனடியாகவே கனடா அனுப்பி விட்டார். இளைஞர்களை இலங்கைப்படையினர் வேட்டையாடிக் கொண்டிருந்த காலகட்டம். அவனால் பானுமதியுடன் கூடத் தொடர்பு கொள்ளமுடியாத சூழல். வெளிநாடு சென்றதும் தொடர்பு கொள்ளலாம் என்று நினைத்தான். ஆனால் அதற்குள் எவ்வளவோ நடந்து முடிந்து போய்விட்டன. இடையில் கனடா வருவதற்குள் ஐரோப்பா, அமெரிக்கா என்று சட்டபூர்வமற்ற அகதியாக அலைந்து திரிந்து கனடா வந்தவனுக்குக் கனடாவிலும் உரிய சட்டபூர்வ அந்தஸ்து கிடைக்க நான்கு வருடங்களாகி விட்டன. இதற்கிடையில் பானுமதிக்குத் திருமணம் செய்து வெளிநாடு எங்கோ அனுப்பி விட்டதாகக் கேள்விப்பட்டிருந்தான்.

நாட்டுச்சூழல் அவனது கனவுகளையெல்லாம் சிதைத்து விட்டது. நாட்டில் படித்துப்பட்டம் பெற்று, விரும்பியவளைத் திருமணம் செய்து நல்லதொரு வாழ்க்கை வாழவேண்டுமென்று விரும்பியிருந்தான். இன்று அவனை வாழ்க்கைச் சுழல் எங்கெங்கோ தூக்கி எறிந்து விட்டிருக்கின்றது. புதிய இடத்திலும் பட்டத்துக்குரிய வேலை கிடைக்கவில்லை. கனடா அனுபவம் கேட்டார்கள். கிடைத்த வேலைகளைச் செய்துகொண்டு வாழ்க்கை ஓடிக்கொண்டிருக்கின்றது. தன் படிப்புக்குரிய அங்கீகாரத்தைப் பெறுவதற்கும் நேரம் கிடைக்காமல், உரிய வேலைகள் கிடைக்காமல் உணவகங்களில் வேலை, பாதுகாப்பு அதிகாரியென்று வாழ்க்கை ஓடிக் கொண்டிருந்தது. இடையில் நாளொன்றில் இரண்டு வேலைகளுக்குக் குறையாமல் செய்து வீட்டாரை ஸ்பான்சர் செய்து கூப்பிட மேலும் மூன்று வருடங்கள் கழிந்து விட்டன. எட்டு வருடங்கள் எவ்வளவு விரைவாகச் சென்று விட்டன. இருந்த வரையில் அம்மாவும் அவனுக்குத் திருமணம் செய்து பார்க்க ஆசைப்பட்டு முடியாமல் போய்ச் சேர்ந்து விட்டா.

இதற்கிடையில் தற்செயலாக அவன் மீண்டும் பானுமதியை டொராண்டோவில் சந்தித்தான். அவனைப்போல் அவளும் தீவிர வாசிப்பு மிக்க ஒருத்தி. டொரான்டோ நூலகக்கிளையொன்றில் சந்தித்தான். நடுத்தர வயதில் பூசி , மெழுகி அழகாகவிருந்தாள். அவன் இன்னும் திருமணம் ஏதும் செய்யாமல் இருந்தது அவளை சிறிது வருத்தியது. திருமணம் ஏன் செய்யக்கூடாது? விரைவில் செய்யும்படி வற்புறுத்திவிட்டுத் தான் சென்றாள். இருந்தாலும் அவன் மீது அவளுக்குச் சிறிது கோபமிருந்தது. எதற்காக அவன் அவளுடனான தொடர்புகளையெல்லாம் துண்டித்திருந்தான் என்று கேட்டாள். கலவரமும், அதைத்தொடர்ந்து அகதியாக அலைந்து திரிந்ததும் அவளுடன் தொடர்பு கொள்ள முடியாதவாறு நாட்டுச் சூழலிருந்ததும்தான் காரணங்கள் என்று விளக்கினான். அவளும் நாட்டின் போர்ச்சூழல் காரணமாக அடிக்கடி இடம்பெயர்ந்து சென்று கொண்டிருநதாள். அதுவுமொரு காரணமென்றான். அவன் எப்படியாவது தன்னுடன், தொடர்புகொள்வானெறு அவளும் காத்திருந்தாள்.. ஆனால் எத்தனை வருடங்கள் காத்திருப்பது? கடைசியில் வீட்டார் நிர்ப்பந்தத்தினை மீறமுடியவில்லை. இன்று அவள் குடும்பம், குழந்தைகளென்று திருப்தியாகத்தான் வாழ்கின்றாள்.

அவனுக்கு ஆச்சரியமாகவிருந்தது. அவளை மீண்டும் சந்தித்ததும் அவள் தனக்குக் கிடைக்காமல் வெகுதூரம் சென்று விட்டாளென்றபோதும் அவள் தனக்குக் கிடைக்கவில்லையே என்று ஏமாற்ற உணர்வேதும் அவனுக்கு ஏற்படவில்லை. அவள் நன்றாக வாழ்கின்றாள் என்பது உண்மையிலேயே அவனுக்கு ஒருவிதத் திருப்தியைத்தான் தந்தது. அவள் எப்பொழுதும் அவ்விதமே நன்றாக வாழவேண்டுமென்றுதான் அவனது மனம் விரும்பியது. அவள்தான்

(17ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.நாவால் மீண்டும் கைவிடப்பட்ட டாவூர் இனமக்கள்!

# மீண்டும் டாவூரில் தொடரும் இனப் படுகொலை!!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

சூடானின் டாவூர் (Darfur) மாகாணத்தில் கொடூரமான இனப் படுகொலைகள் 2003 இல் தொடங்கி பின்னர் சர்வதேச தலையீட்டால் சில காலம் அமைதி நிலவியது. ஆயினும் கடந்த வருடம் ஏப்ரல் 2022 முதல் மேற்கு டாவூரில் பொதுமக்கள் மீது ஆயுத மேந்திய அரேபிய குழுக்களின் தாக்குதல்களால் பல நூற்றுக்கணக் கானோர் இறந்துள்ளனர்.

அத்துடன் ஆயிரக்கணக்கானோர் இடம்பெயர்ந்துள்ளனர். நூற்றுக்கணக்கான பொதுமக்களின் வீடுகள் எரிக்கப்பட்டதுடன், சொத்துக்கள் சூறையாடப் பட்டுள்ளன என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக கெரெனிக் மற்றும் குல்பஸ் ஆகிய இடங்களில் பொதுமக்களுக்கு எதிராக பெரிய அளவிலான வன்முறைகள் நடத்தப்பட்டுள்ளன. குடிமக்களைப் பாதுகாப்பதற்கான தனது கடமையை சூடான் அரசாங்கம் நிறைவேற்றத் தவறியதையும், மனித உரிமைகள் கண்காணிப்பு, அதன் இருப்பு மூலம் பாதுகாப்பு மற்றும் டாவூரில் நிகழ்வுகள் பற்றிய பொது அறிக்கையின் அவசரத் தேவையை கோரியுள்ளது.

### தீராத் துயரத்துடன் டாவூர்

கடந்த இரண்டு மாதங்களில் அமைதி காக்கும் படையினரை திரும்பப் பெறுவது மற்றும் டாவூரில் பொதுமக்களைப் பாதுகாப்பதற்கான தற்போதைய அவசியத்தைப் பேணுவது என்று மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் சூடான் ஆராய்ச்சியாளர் மொஹமட் உஸ்மான் கூறினார்.

ஆனால் ஜூன் 6 மற்றும் 11 க்கு இடையில் மேற்கு டாவூரில் உள்ள குல்பஸ் நகரம் மற்றும் அண்டை கிராமங்களில் பொதுமக்கள் மீதான சமீபத்திய தாக்குதலில் ஐந்து குழந்தைகள் உட்பட குறைந்தது 125 பேர் கொல்லப்பட்டனர், 100 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர் மற்றும் 33,000 பேர் இடம்பெயர்ந்தனர் என்று ஐ.நா. அறிவித்துள்ளது.

பலியானவர்களில் பெரும்பாலானோர் அரபு அல்லாத கிமிர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தாக்குதல் நடத்தியவர்கள் வீடுகள் மற்றும் பண்ணைகளை எரித்ததாகவும், கால்நடைகளை சூறையாடியதாகவும் கூறப்படுகிறது.

ஐநா மனிதாபிமான விவகாரங்களுக்கான ஒருங்கிணைப்பு அலுவலக அறிக்கையின்படி, ஐந்து நாட்களில் இரண்டு டஜன் கிமிர் கிராமங்கள் எரிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது, ரிசிகாட் மற்றும் அப்பாலா அரபு சமூகங்களின் ஆயுத மேந்திய உறுப்பினர்கள், கிமிர் சமூகத்திற்கு எதிராக அணிதிரண்டனர். இந்த இரண்டு சமூகங்களுக்கு இடையே தகராறு நீண்டகாலமாக நிலவுகிறது.

பல ஆண்டுகளாக சர்வதேச சமூகம்,



இனச் சுத்திகரிப்புக்கு ஆளான டாவூர் மக்களை முற்றிலுமாக கைவிட்டதுபோல் இருப்பது குற்றஞ்சாட்டப்படுகிறது.

சூடானில் உள்ள ஐக்கிய நாடுகளின் ஒருங்கிணைந்த நிலைமாற்ற உதவிப் பணி மற்றும் ஐ.நா மனித உரிமைகளுக்கான உயர் ஆணையர் அலுவலகம் ஆகிய இரண்டும் சூடானில் உள்ள கூட்டு மனித உரிமைகள் அலுவலகம், துஷ்பிரயோகங்கள் பற்றி விசாரிக்கவும் பகிரங்கமாகப் புகாரளிக்கவும் டாவூருக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என கோரியுள்ளது.

**மனிதகுலத்திற்கு எதிரான இனப்படுகொலையை எதிர்கொண்ட டாவூர் இன மக்கள் இன்னமும் தீராத் துயரத்துடனேயே வாழ்கின்றனர். இன்னமும் டாவூர் இனமக்களின் வலிகள், வரலாற்றின் வரிகளில் குருதி கசியும் வண்ணமாய் உள்ளது**

### ஓர் தேசத்தின் சோக வரலாறு

வட சூடானின் ஒடுக்குமுறையின் உச்சக்கட்டமாக சூடானின் டாவூர் மாகாணத்தில் கொடூரமான இனப்படுகொலைகள் 2003 இல் தொடங்கியது. ஆனால் இது தொடர்பான தகவல்கள் மிகவும் காலம்கடந்தே உலகுக்குத் தெரிய வந்தது.

டாவூர் இனப்படுகொலை என்பது மேற்கு சூடானில் நடந்த மோதலின் போது நிகழ்ந்த டாவூர் இன மக்களை திட்டமிட்ட முறையில் கொலை செய்யப்பட்டதாகும்.

இது 21 ஆம் நூற்றாண்டின் கொடூர இனப்படுகொலை டாவூர் என்று அறியப்பட்டது. ஃபர், மசலித் மற்றும் ஜகாவா பழங்குடியினருக்கு எதிராக நடத்தப்படும் இந்த இனப்படுகொலை, மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள், கற்பழிப்பு, கட்டாய இடமாற்றம் மற்றும் சித்திரவதை போன்ற குற்றங்களுக்காக பலரை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (ஐசிசி) வழிநடத்தியது.

ஐநா கூற்றுப்படி, ஒரு மில்லியனுக்கும் அதிகமான குழந்தைகள் கொல்லப்பட்டுள்ளனர், கற்பழிக்கப்பட்டுள்ளனர், காயமடைந்துள்ளனர், இடம்பெயர்ந்துள்ளனர், அதிர்ச்சியடைந்துள்ளனர் அல்லது பெற்றோர்கள் மற்றும் குடும்பங்களின் இழப்பைச் சகித்துள்ளனர்.




### கறுப்பின வம்சாவளி மீதான வன்முறை

டாவூரில் இன மோதல் இன்னமும் தொடர்வதை அண்மைய செய்திகளும் உறுதிப்படுத்துகின்றன. டாவூரில் ஆறு மில்லியன் மக்கள் பழங்குடியினர் வசிக்கின்றனர். டாவூர் இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளதுடன், அவர்கள் கறுப்பின ஆப்பிரிக்க வம்சாவளியைச் சேர்ந்தவர்கள், அரபு வம்சாவளியைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

சூடானில் பல ஆயிரக்கணக்கான கருப்பினத்தவர் ஆயுதம் தாங்கிய அரபுக் கொலை வெறியர் கும்பல்களால் (ஜஞ்ஜாவீது என அழைக்கப்படும் கும்பல்கள் இவை) படுகொலை செய்யப்பட்டுள்ளதோடு, பெண்களின் மீது பாலியல் வன்முறையும் கட்டவிழ்த்து விடப்பட்டது.

கிராமம் கிராமமாகத் திட்டமிடப் பட்ட வகையில் கருப்பினத்தவரின் வீடுகளும், கால்நடைகளும், பிற உடைமைகளும் அழிக்கப்பட்டுள்ளன. பல லட்சம் மக்கள் இடம் பெயர்ந்து ஓடிப் போய் அகதி முகாம்களிலும், நாட்டை விட்டே வெளியேறி அண்டை நாடான சாடிலும் தஞ்சம் புகுந்து உள்ளனர்.

### சூடானின் அரபு ஆதிக்கம் :

சவுதி அரேபியாவிலிருந்து உலகையே பீடிக்கும் வஹாபி வழி இஸ்லாமியத் தீவிர வாதம்- அரபு இனவாதம் மேலும் அரபு ஏகாதிபத்திய சிந்தனைப் போக்கே இப் பிரச்சினையின் மூல காரணம் ஆகும். படை எடுத்து வந்த போர் வெறியர்கள் கண்ணில் படும் ஆப்பிரிக்க இனச் சூடானியரை உடனடியாகக் கொன்று குவித்தனர்.


2013 இல், ஐக்கிய நாடுகள் சபை டாவூர் இனப்படுகொலையின் போது 300,000 பேர் வரை கொல்லப்பட்டதாக மதிப்பிட்டுள்ளது. பதிலுக்கு, சூடான் அரசாங்கம் இறப்பு எண்ணிக்கை "அதி மொத்தமாக உயர்த்தப்பட்டது" என்று கூறியது. 2015 இல், இறப்பு எண்ணிக்கை 100,000 முதல் 400,000 வரை இருந்ததாக மதிப்பிடப்பட்டது.

2016 ஆம் ஆண்டு வரை வன்முறை தொடர்ந்தது, அங்கு டாவூரில் உள்ள உள்ளூர் மக்களுக்கு எதிராக அரசாங்கம் இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தியதாகக் கூறப்படுகிறது. இந்த விரோதமான சூழல் காரணமாக மில்லியன் கணக்கான மக்கள் இடம்பெயர்ந்தனர். மோதலால் 3 மில்லியனுக்கும் அதிகமான உயிர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன.

மனிதகுலத்திற்கு எதிரான இனப்படுகொலையை எதிர்கொண்ட டாவூர் இன மக்கள் இன்னமும் தீராத் துயரத்துடனேயே வாழ்கின்றனர். இன்னமும் டாவூர் இனமக்களின் வலிகள், வரலாற்றின் வரிகளில் குருதி கசியும் வண்ணமாய் உள்ளது.



# கை இல் ஊமன் கண்ணின்...



(15ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவனது நிலைகண்டு சிறிது வருந்தினாள். உண்மைக்காதல் எப்பொழுதுமே எங்கிருந்தாலும் வாழத்தான் வாழ்த்தும். அதே சமயம் அவளை மீண்டும் சந்தித்ததும் அவனுக்கு ஒரு வித நிம்மதியைத் தந்தது. அதுவரையில் அவள் பற்றிய தகவல்கள் எவையுமற்று அவள் எப்படியிருக்கிறாளோ? உயிருடன் இன்னும் இருக்கிறாளா? போர்ச்சூழலால் ஏதாவது பாதிப்புக்குள்ளாகினாளா? என்றெல்லாம் பல்வேறு கேள்விகளால் அடிபட்டுப்போயிருந்த மனத்துக்கு அவளது மீள்வருகையும், தற்போதைய நிலையும் ஆறுதலைத்தந்தன.

2.

இரவுகளில் இவ்விதமே பல்கணியில் சாய்வு நாற்காலியில் சாய்ந்தபடி இரவு வானைப் பார்த்து வியப்பதிலும் , சிந்திப்பதிலும்தான் எவ்வளவு இனிமை! இவ்விதமான சமயங்களில் அவ்வப்போது அவனது அபிமானக் கவி பாரதியின் கவிதை வரிகளை, வசன கவிதை வரிகளை நினைவு கூர்வான். சமயம் கிடைத்தால் அவற்றை வாசிப்பான். பாரதியின் சொற்களின் புலமையும், தெளிவும், தெளிந்த அறிவும் எப்பொழுதும் அவனை வியக்க வைப்பன. காதலை, இயற்கையைக் இருப்பை, அகிலத்தையென்று அவன் பாடாத விடயங்கள் எவையுமுண்டோ! பாரதியின் கவிதைப்புத்தகமொன்று போதும் வாழ்க்கையைக் கொண்டு செல்வதற்கு என்பது அவனது திடமான நம்பிக்கை. சோர்ந்திருக்குமுள்ளத்துக்குப் புத்துணர்ச்சியைத்தருவது அவனது எழுத்துகள். தேடல் மிக்க உள்ளங்களுக்கு மருநதாக இருப்பவை அவனது சிந்தனைகள்.

விரிந்திருக்கும் வானத்தையும் ஆங்காங்கே தென்படும் நட்சத்திரங்களையும் காண்கையில் ஏற்படும் மகிழ்ச்சியுடன் கூடவே அவனுக்குச் சிறுவயதிலிருந்தே மிகவும் பிடித்த குழந்தைப் பாடலான “ட்விங்கிள் ட்விங்கிள் லிட்டில் ஸ்டார்“ நினைவுக்கு வந்தது.. அதில் அவனுக்கு மிகவும் பிடித்த வரி “ῥ யடிழளந வாந றழசடன ளழ ாபை“- அங்கே மேலே உலகம் மிக உயரத்திலுள்ளது. கவித்துவம் மிக்க அற்புதமான வரிகள். வானத்தைப்பார்த்தான். அங்கே எவ்வளவு தொலைவில் , உயரத்தில் உலகம் விரிந்து கிடக்கின்றது! அந்த வார்த்தையை எண்ணுகையில், சொல்கையில் நெஞ்சில் இன்பம் கொப்பளிக்கிறதே. அங்கே மேலே அந்த உலகத்தில் யாரெல்லாம் இருக்கிறார்களோ?

அவனது சிந்தனையில் தோன்றிய அங்கே இருக்கக் கூடிய உயிரினம் பற்றிய எண்ணங்களே எவ்வளவு இன்பத்தைத்தருகின்றன. எப்பொழுதுமே இவ்வரி அவனுக்கு எங்கோ இப்பிரபஞ்சத்திலெங்கோ இருக்கக் கூடிய உயிரினம் பற்றிய எண்ணங்களை அவனுக்கு எழுப்புவது வழக்கம். இப்போதும் அவ்விதமே அவ்வுயிர் பற்றிய சிந்தனைகள் எழுகின்றன. கண்களை மூடிக்கொண்டு சிந்தனையில் ஆழ்கின்றான்.

நண்பா!
உன்னை நான் பார்த்ததில்லை.
பார்க்கப் போவதுமில்லை.
உனக்கும் எனக்குமிடையிலோ
ஒளியாண்டுச் தடைச்சுவர்கள்.
“காலத்தின் மாய“ வேடங்கள்.
ஆயின் நான் மனந்தளர்ந்திடவில்லை.
மனந்தளர்ந்திடவில்லை.
மனந்தளர்ந்திடவில்லை.
நிச்சயமாய் நானுனை நம்புகின்றேன்.
எங்கேனுமோரிடத்தில்
நீ நிச்சயம் வாழ்ந்துகொண்டு
தானிருக்கின்றாய்.
ஆம்!
வாழ்ந்துகொண்டு தானிருக்கின்றாய்.

3.

பானுமதி பற்றிய நினைவுகள் ஒன்றை அவனுக்குப் புரிய வைத்தன. வைக்கின்றன. வாழ்க்கை சமூக, அரசியல் சூழல்களால் சின்னாபின்னமாக்கப்படலாம். எங்கோ தூக்கியெறியப்படலாம் அவனைது வாழ்க்கையைப்போல. அது ஒரு நாள் அவனை இப்பூமிப்பந்தின் எங்கோ ஒரு மூலைக்கு அவனது வேரிலிருந்து அறுத்துத் தூக்கியெறிந்து விட்டது. அன்றிலிருந்து இன்றுவரை தான் எத்தனை எத்தனை மாற்றங்கள்! கனவுகள், திட்டங்கள் எவ்விதம் சிதைக்கப்பட்டன. ஆனால் மானுடன் அவன் தளர்ந்தானா? தளரவில்லையே. இருப்பை எவ்விதமென்றாலும் எதிர்கொள்ளும் பக்குவத்தையுமல்லவா காலம் அவனுக்குத் தந்திருக்கின்றது.

அவன் இப்பொழுதெல்லாம் நடந்துவிட்ட எவற்றுக்காகவும் மனம் வருந்துவதில்லை. அவ்வனுபவங்கள் தந்த இருப்பு பற்றிய தெளிவும், அறிவும் அவனுக்கு இன்பமளித்தன. அவற்றுக்காகவே அவனது மனம் நடந்தவற்றையெல்லாம் இன்பத்துடன் ஏற்றுக்கொண்டு இருப்பில் நடைபோடத் தொடங்கிவிட்டது.

இவ்வளவுக்கும் மத்தியில் ஒன்று மட்டும் அவனுக்குத் தெளிவாகப் புரிந்தது. அது அவன் பானுமதிமேல் கொண்ட காதல். பதின்ம் வயதுகளில் எவ்விதம் அவன் அவள் மேல் உள்ள மிழந்து வாடி வதங்கினானோ அவ்விதமே இந்நடுத்தவர வயதிலும் அவனுள்ளம் பானுமதியையெண்ணித் துடிக்கிறது. வாடுகிறது. வதங்குகின்றது. ஆனால் இப்போது அவ்விதமான தவிப்பு டன், துடிப்புடன் மனம் தெளிவாகவு மிருக்கிறது. அவளது வாழ்வு நன்றாக இருக்கவேண்டுமென்றும் கூடவே வாழ்த்துகின்றது. இருந்தும் அன்று எழுந்த காதல் உணர்வுகள் இன்னும் அதே வீரியத்துடன் பொங்கியெழுந்து கொண்டுதானுள்ளன. காதல் நோயால் பீடிக்கப்பட்ட நெஞ்சை அவனால் ஒருபோதுமே அந்நோயிலிருந்து மீட்டெடுக்கவே முடியவில்லை.

எங்கோ தொலைவில் இருக்கும் சாத்தியத்தியமுள்ள அந்த நண்பனை நோக்கி அவன் கூறினான்:

நண்பனே!
உன்னிடமொரு கேள்வி. உணர்வுகள்
உனக்குமுண்டா? காதலுணர்வுகள்
உனக்குமுண்டா?
கதிரவனின் வெம்மையினால் கனலும்
கற்பாறை வெண்ணெய்யைக்
காப்பதற்கு
கைகளற்ற ஊமையனொருவன் தன்
கண்களால் முயன்றால்
முடிவதுண்டா?
அதுபோல் நான் என் காதலை
அழிப்பதற்கு முடியவில்லையே.
உருகிய வெண்ணெய்யாக
நானும் முயற்சியும்
தோல்வியுறுகிறதே.
நண்பா! உன்னால் அந்நோயை
நீக்க முடியுமா? முடிந்தால் உதவு!

இவ்வயதிலும் என்னால் அவள் மேலான உணர்வுகளைக் கட்டுப்படுத்த முடியவில்லையே. ஏன்? எதற்கு? அவள் நல்வாழ்வை வேண்டும் மனத்தால் ஏன் அவளை மறக்க முடியவில்லை. நண்பா! உனக்குத் தெரிந்தால் கூறு!

ngiri2704@rogers.com






# கோப் குழு வழங்கிய நிபந்தனை உள்வாங்கப்படாதமைக்கு எதிர்ப்பு!

## ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்



கொழும்பு, ஜூலை 02

தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பில் மத்திய வங்கியின் ஆளுநர் அமைச்சரவைக்கு வழங்கிய தெளிவுபடுத்தல் தேசிய கடன் மறுசீரமைப்பு கொள்கை திட்டத்துக்குள் உள்வாங்கப்பட வேண்டும் என்று அரசாங்க நிதி தொடர்பான குழு முன்வைத்த நிபந்தனை பாராளுமன்ற ஒழுங்கு பத்திரத்தில் உள்ளடக்கப்படாதமைக்கு அரசாங்க நிதி தொடர்பான குழுவின் தலைவர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று சனிக்கிழமை விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

பாராளுமன்ற நிலையியல் கட்டளையின் 148ஆவது பிரிவின் பிரகாரம் பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் நிதி தொடர்பான பிரேரணை தொடர்பில் தெளிவான அறிக்கை சமர்ப்பிப்பது அரசாங்க நிதி தொடர்பான குழுவின் பொறுப்பாகும்.

அரசாங்க நிதி தொடர்பான குழு தலைவராக பதவி வகிப்பதால் விசேட வரபிரசாதங்கள் கிடைக்கப் பெறுவதாக ஒரு தரப்பினர் கருதுகிறார்கள். உண்மையில் எந்த சிறப்புரிமைகளும் கிடைப்பதில்லை. நாட்டுக்காக சுயவிருப்பத்துடன் குழுவில் சேவையாற்றுகிறோம்.

தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பில் கடந்த இரண்டு நாட்களாக அரசாங்க நிதி தொடர்பான குழு கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது. முதல் நாள் கலந்துரையாடலில் மத்திய வங்கியின் ஆளுநர், திறைசேரியின் செயலாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இரண்டாம் நாள் கலந்துரையாடலில் வங்கிகள், காப்புறுதி நிறுவனங்கள் ஆகியவற்றின் பிரதானிகள் கலந்துகொண்டனர். தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பில் குழு ஊடாக இறுதி தீர்மானத்தை எடுக்க முடியாத காரணத்தால் வாக்கெடுப்புக்கு செல்ல தீர்மானிக்கப்பட்டது. இதற்கமைய குழுவில் பெரும்பாலான தரப்பினர் தேசிய கடன் மறுசீரமைப்பு செயல்திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்ததால் செயல்திட்ட அறிக்கைக்கு அனுமதி வழங்கப்பட்டது.

இதன்போது, மத்திய வங்கியின் ஆலோசனைக்கு அமைய மத்திய வங்கி தயார்படுத்திய செயற்திட்ட அறிக்கை, ஜனாதிபதி தலைமையில் கடந்த 28ஆம் திகதி இடம்பெற்ற விசேட அமைச்சரவை கூட்டத்தில் மத்திய வங்கியின் ஆளுநர் ஆற்றிய தெளிவுப்படுத்தல் தேசிய கடன் மறுசீரமைப்பு செயல்திட்டத்துக்குள் நேரடியாக உள்வாங்கப்பட வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டது என்றார்.

இதன்போது, சபையின் நடவடிக்கையை ஆரம்பிக்குமாறு சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன சபை முதல்வருக்கு அறிவுறுத்தினார். இதன்போது எழுந்து உரையாற்றிய அரசாங்க நிதி தொடர்பான குழுவின் தலைவர் ஹர்ஷ டி சில்வா,

நிபந்தனைகளின் அடிப்படையில் தான் குழு அனுமதி வழங்கியது. செயல்திட்ட கொள்கை திட்ட அறிக்கைக்கும், பாராளுமன்ற ஒழுங்கு பத்திரத்தின் தினப் பணிகளின் அறிவித்தலுக்கும் இடையில் பரஸ்பர வேறுபாடு காணப்படுகிறது.

“2023.06.28 ஆம் திகதி அமைச்சரவை தீர்மானம் : இறையாண்மை படுகடன் நிலைபேறுதன்மையை மீட்டெடுப்பதற்கு உள்நாட்டு படுகடன் மேம்படுத்துகைழய நடைமுறைப்படுத்துவதற்கான எண்ணக்கருப் பத்திரம் மற்றும் பதிவு செய்யப்பட்ட பங்குத் தொகுதி,பிணையங்கள் கட்டளைச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் ஆகியன சமர்ப்பிக்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

மத்திய வங்கி ஆளுநர் ஆற்றிய தெளிவுப்படுத்தலை நேரடியாக உள்ளடக்கப்பட வேண்டும் என அரசாங்க நிதி தொடர்பான குழு வழங்கிய நிபந்தனை கவனத்திற் கொள்ளப்படவில்லை. இது முற்றிலும் தவறானது என்றார்.

இதன்போது, எழுந்து உரையாற்றிய சபை முதல்வர் சுசில் பிரேமஜயந்த, நிதி இராஜாங்க அமைச்சரின் உரையின் போது அந்த விடயங்கள் திருத்தம் செய்யப்படும் - என்றார்.

இதன்போது, குறுக்கிட்ட ஹர்ஷ டி சில்வா நிதி இராஜாங்க அமைச்சரவையின் உரையின் போது திருத்தம் செய்யப்படும் என்று குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. விவாதத்தை ஆரம்பிக்க முன்னர் திருத்தம் செய்யப்பட வேண்டும் என வலியுறுத்தினார். இதனை எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்களும் வலியுறுத்தினர்.

இதன்போது, எழுந்து உரையாற்றிய சபை முதல்வர் சுசில் பிரேமஜயந்த, அரசாங்க நிதி தொடர்பான குழுவின் தலைவர் ஹர்ஷ டி சில்வா முன்வைத்த நிபந்தனைக்கு அமைய தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பில் மத்திய வங்கி ஆளுநர் அமைச்சரவைக்கு ஆற்றிய தெளிவுப்படுத்தல் செயல் திட்ட அறிக்கைக்குள் நேரடியாக உள்வாங்கப்படும் இதனை திருத்தமாக அறிவிக்கிறோம் - என்றார். (ஐ)

## தமிழர்களால்...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

முயற்சிக்கும் நயவஞ்சகத்தையே புரிவார்கள். நயவஞ்சகம்தான் அவர்களின் அரசியலாகும். இதனை மக்கள் தெளிவாக புரிந்துகொள்ள வேண்டும். மக்கள் மத்தியில் காணப்படும் அறியாமைதான், இவர்களின் ஒரேயொரு பலமாகும். நல்ல மனிதர்கள் மற்றவர்களின் அறியாமையை ஒரு போதுமே, தங்களின் சுயநலத்துக்காக பயன்படுத்திக்கொள்ள மாட்டார்கள்.

நான் ஏற்கனவே குறிப்பிட்டவாறு, தமிழ் மக்களுக்கு இப்போதும் சாதகமான வாய்ப்புக்கள் இருக்கின்றன. ஆனால் அவற்றை கையாளுவற்கான அரசியல் பொறிமுறை தமிழ் மக்களிடம் இல்லை. இதுதான் தமிழர் அரசியலின் பிரதான பிரச்சினையாகும். அனைத்து கட்சிகளும், உள்நாட்டிலும் புலம்பெயர் சமூகத்தின் மத்தியிலும் துரோகி, கைக்கூலி, புலிகளின் ஆதரவாளர் மற்றும் எதிர்ப்பாளர், வசைச் சொற்கள், இவ்வாறான அனைத்துவிதமான உளறல்களையும் புறம்தள்ளி, நாம் அனைவரும் பாதிக்கப்பட்டவர்களாவர், நாம், நமக்குள் ஓரணியாக வேண்டு மென்னும் சிந்தனை உருவாகினால் மட்டுமே, தமிழர்கள் ஒரு பலமாக திரட்சிபெற முடியும். இலங்கைத் தீவின் தவிர்க்க முடியாத தரப்பாக எழுச்சியுற முடியும். அவ்வாறானதொரு சூழல் உருவாகாத வரையில், எவருக்குமே தமிழர்கள் தேவைப்படப் போவதில்லை. நாம் மற்றவர்களுக்கு தேவைப்படாத போது, நம்மீதிருப்பது, பாவமென்னும் பரிவுணர்வு மட்டுமேயாகும். இப்போது நடப்பது அதுதான்.

## இலங்கை ஆணைக்குழுக்கள் மீது அவநம்பிக்கை...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

மனித உரிமைகள் பேரவையின் தற்போதைய கூட்டத் தொடருக்கு முன்னதாக நல்லிணக்கத்துக்கான நடவடிக்கைத் திட்டம் ஒன்றை அரசாங்கம் அறிவித்தது. அதில் பிரதான அம்சமாக உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவை அமைக்கும் யோசனையை காணக்கூடியதாக இருந்தது.

ஜனாதிபதி ஊடகப்பிரிவு மூன்று வாரங்களுக்கு முன்னர் வெளியிட்ட அறிக்கையொன்றில் தேசிய காணி ஆணைக்குழு அமைத்தல், தேசிய காணிக்கொள்கை ஒன்றை வகுத்தல், காணாமல்போனோர் விவகார அலுவலகத்தின் செயற்பாடுகளை மேம்படுத்து தல் போன்ற பல யோசனைகள் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடங்கியிருப்ப தாக குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால், இவற்றில் எதுவுமே புதியதில்லை. இந்த யோசனைகள் நிகழ்ச்சி நிரலில் நீண்டகாலமாக இருந்துவருகின்ற போதிலும், எந்தவிதமான முன்னேற்றத்தையும் காணமுடியவில்லை. சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்களை சமாளிப்பதற்கான தற்காலிக தேவை எழுகின்ற சந்தர்ப்பங்களில் மாத்திரமே உண்மை மற்றும் ஆணைக் குழுவை அமைக்கும் யோசனை வெளிக்கிளம்பும். பிறகு அது மறக்கப்பட்டு விடும் என்பதே அனுபவரீதியாக நாம் கண்டது.

சிறந்த யோசனைகளை நடை முறைப்படுத்துவதில் இலங்கையில் காணப்படும் தயக்கத்துக்கு இனத்துவ மற்றும் அரசியல் நிலைமைகளே பிரதான காரணமாகும். இலங்கையில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஒன்றில் இருந்து அனுகூலமான பயன் விளைவுகளைப் பெறுவதற்கு உகந்தவையாக அந்த நிலைமைகள் இல்லை. 30 வருடகால போரின்போது சரியானது எது பிழையானது எது என்பதில் இலங்கைச் சமூகம் மிகவும் கடுமையாக பிளவடைந்து காணப்படுகிறது. பெரும்பான்மையான சிங்கள - பௌத்தர்களைப் போலன்றி சிறுபான்மை இனத்தவர்கள் குறிப்பாக தமிழர்கள் குற்றங்களுக்கு பொறுப்பானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்று கோருகிறார்கள். தென்னாபிரிக்காவில் முயற்சிக்கப்பட்டதைப் போன்று வெறுமனே பழைய காயங்களைக் குணப்படுத்தி வழமை நிலையை ஏற்படுத்தும் முயற்சிகளை அவர்கள் விரும்பவில்லை என்று கொழும்பில் இருந்து இயங்கும் மூத்த இந்திய பத்திரிகையாளரும் அரசியல் ஆய்வாளருமான பி.கே. பாலச்சந்திரன் கூறுகிறார்.

தென்னாபிரிக்காவை இலங்கையுடன் ஒப்பிடுவதில் உள்ள மிகப்பெரிய பிரதிகூலங்களில் ஒன்று ஒரு குறிப்பிட்ட திசையில் மக்களை வழிநடத்தக்கூடிய பேராளுமை கொண்ட தேசியத்தலைவர் ஒருவர் இல்லாதமையாகும். தென்னாபிரிக்காவில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு செயற்பட்ட 1995 - 2003 காலப்பகுதியில் அது ஜனாதிபதி நெல்சன் மண்டேலா, அதிமேற்றிராணியார் டெஸ்மண்ட் டுட்டு போன்ற தொலைநோக்குடைய தலைவர்களின் கண்காணிப்பில் இருந்தது. டுட்டுவே ஆணைக்குழுவின் தலைவராக இருந்தார் என்று பாலச்சந்திரன் சுட்டிக்காட்டுகிறார்.

இலங்கையில் அமைக்கப்படக்கூடிய உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவுக்கு தலைவராக சகல மக்களுக்கும் ஏற்புடைய ஒருவரை கண்டுபிடிப்பது சிரமம் என்பதை நீதியமைச்சர் ஏற்கெனவே ஒத்துக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை இலங்கையின் இன உறவுகள் நிலைவரத்தை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவொன்று பழைய காயங்களை குணப்படுத்துவதை விடவும் அவற்றை மேலும் ஆழப்படுத்தப்படக்கூடிய ஆபத்து இருப்பதாகவும் பாதுகாப்பு படைகளை இலக்குவைத்து மேற்கொள்ளப்படக் கூடிய எந்தவொரு விசாரணையும் சமூகத்தில் மேலும் பிளவுகளை ஏற்படுத்தும் என்றும் வேறு சில அவதானிகள் கருதுகிறார்கள்.

தற்போதைய சூழ்நிலையில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு ஒன்றின் வகிபாகத்தை மட்டுப்படுத்தப்பட்ட ஒன்றாக ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாகும் என்று கூறும் தேசிய சமாதானப் பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளரான கலாநிதி ஜெகான் பெரேரா கடந்த கால தவறுகள் மீண்டும் இடம்பெறாதிருப்பதை உறுதிசெய்யுமுகமாக இலங்கையிலும் வெளிநாடுகளிலும் கடந்த காலம் குறித்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டிய பெரிய தேவை இருக்கிறது என்று கடந்தவாரம் தனது கட்டுரையொன்றில் குறிப்பிட்டிருந்தார். ஆணைக்குழு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களுக்கு பதிலைத் தரவல்ல ஒரு மந்திர மருந்து அல்ல என்பது அவரது நிலைப்பாடாக இருக்கிறது.

ஆணைக்குழுவுக்கு மிகவும் கூடுதலான அளவுக்கு நடைமுறைச் சாத்தியமான மாற்று தெரிவுகளாக பின்வரும் நடவடிக்கைகளை பாலச்சந்திரன் முன்வைக்கிறார் .

“வழக்கு தொடரப்படாமல் பல வருடங்களாக சிறைவைக்கப்பட்டிருக்கும் தமிழ் கைதிகளை விடுதலை செய்தல், அட்டூழியங்கள் தொடர்பில் நம்பகமான குற்றச்சாட்டுக்களை எதிர்கொள்வோரை தண்டித்தல், பாதுகாப்பு படைகளினால் அபகரிக்கப்பட்ட பொதுமக்களின் நிலங்களை விடுவிப்பதுடன் சந்தேகத்துக்கிடமான நோக்கங்களுக்காக அரசாங்க திணைக்களங்களினால் காணிகள் சுவீகரிக்கப்படுவதை தடுத்தல், வடக்கு, கிழக்கில் போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் பொருளாதாரத்தை ஊக்குவித்தல்.” ●

## இந்துக்களின்...




சரவணமுத்து விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் ஆரம்ப மானது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற கொழும்பு இந்துக் கல்லூரி அணி, முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தது.

தனது முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி சகல விக்கெட்களையும் இழந்து 183 ஓட்டங்களைப் பெற்றது.

பின்னர், தமது முதலாம் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய கொழும்பு இந்துக் கல்லூரி அணி, 49 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

இதையடுத்து, பின்தொடர்ந்து ஆடிய கொழும்பு இந்துக் கல்லூரி அணி இரண்டாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்களையும் இழந்து 170 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் கொழும்பு இந்து கல்லூரி சார்பில் ஆர். டிலுக்சன் 72 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார்.

பந்துவீச்சில், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சார்பாக ரீ. கஜநாத் 71 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்களை பெற்றுக் கொடுத்தார்.

பின்னர், 37 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி தமது இரண்டாம் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து, 38 ஓட்டங்களை பெற்று வெற்றி பெற்றது.

போட்டியின் சிறந்த துடுப்பாட்ட வீரராக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் கே. பரிசித் தெரிவானார்.

9 வருடங்களின் பின்னர் யாழ். இந்துக் கல்லூரி கிண்ணத்தை சுவீகரித்தமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

## பல இடங்களில்...

அக்குரச, காலி உட்பட பல பகுதிகளில் பூகம்பம் உணரப்பட்டுள்ளது.

தென்கிழக்கு கடலோர பகுதியில் கடலுக்குள் மிகவும் ஆழமான பகுதியில் பூகம்பம் மையம்கொண்டிருந்தது. எனினும் நாட்டுக்கு எந்த பாதிப்பும் இல்லை என்று புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப்பணியகம் தெரிவித்துள்ளது.

(ஐ)

## பெரமுன...

சிறீலங்கா பொதுஜன பெரமுன இரு அணிகளாக பிரிந்துள்ளது. அதில் ஒரு தரப்பு ரணிலுக்கு எதிராகவும் மற்றைய அணி அவருக்கு எதிராகவும் கருத்துகளை வெளியிட்டு வருகின்றதே. இது தொடர்பில் கட்சியின் தலைவர் என்ற ரீதியில் நீங்கள் என்ன நடவடிக்கை எடுத்துள்ளீர்கள் என்று மகிந்த ராஜபக்ஷவிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். இதற்கு பதிலளித்தபோதே மகிந்த ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கூறியவை வருமாறு,

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் சார்பிலேயே ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். அவருக்கும் - அவர் தலைமையிலான அரசாங்கத்துக்கும் பொதுஜன பெரமுனவே ஆதரவளித்து வருகின்றது. அவர் தொடர்பாகவோ அல்லது அரசாங்கம் தொடர்பாகவோ எந்தவிதமான கருத்துகளையும் பொதுஜன பெரமுனவினர் தெரிவிக்கவேண்டாம்.

அறிவிக்கப்படாத ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக கருத்துகளை வெளியிடுவது பிரயோசனமற்றது. ரணில் விக்கிரமசிங்க பொதுஜன பெரமுனவின் ஆதரவுடன்தான் ஜனாதிபதி பதவியை பெற்றார் - இப்போதும் வகிக்கிறார். அவரின் பதவிக்காலம் நிறைவடையும்வரை சிறீ லங்கா பொதுஜன பெரமுன அவருக்கு ஆதரவளிக்கும். அதன் பின்னர், ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் சிந்தித்து முடிவு எடுப்போம் - என்றும் மகிந்த கூறினார். (ஐ)

## வாக்களிப்பில்...

குறிப்பாக, முன்னாள் ஜனாதிபதியும் பிரதமருமான மகிந்த ராஜபக்ஷ, அவரின் புதல்வரான நாமல் ராஜபக்ஷ, மற்றும் மூத்த சகோதரரான சமல் ராஜபக்ஷ ஆகியோர் வாக்களிப்பில் பங்கேற்றிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மதுபானங்களின்...

திணைக்களம் அறிவித்துள்ளது.

நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய இந்த வரி திருத்தம் மேற்கொள்ளப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

## முதல்...

இந்த வருடத்தின் முதல் காலாண்டில் அரசாங்கத்தின் வருமானம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 15.8 வீதமாக காணப்படுகிறது.

இந்த வருடத்தின் முதல் காலாண்டில் அரசாங்கம் மறைமுக வரிகளாக 85 ஆயிரம் கோடி ரூபாயையும் நேரடி வரியாக 30 ஆயிரத்து 400 கோடி ரூபாயையும் பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

2022 ஆம் ஆண்டின் இறுதியில், நாட்டில் மொத்த வரிக் கோப்புகளின் எண்ணிக்கை 3 இலட்சத்து 33 ஆயிரத்து 313 ஆக இருந்தது. இவற்றில் 2 இலட்சத்து 91 ஆயிரத்து 677 வருமான வரிக் கோப்புகளாகவும், மீதமுள்ள 41 ஆயிரத்து 636 பணம் செலுத்திய வரிக் கோப்புகளாகவும் இருந்தன. எதிர்காலத்தில் நாட்டின் வரித் தளத்தை விரிவுபடுத்தும் வகையில் பல புதிய திட்டங்களை அறிமுகப்படுத்த அரசாங்கம் பெரும் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

(ஐ)

# நாடு வங்குரோத்து அடைந்ததற்கு 225 எம். பிக்களுமே பொறுப்பு!

## நீதி அமைச்சர் விஜயதாஸ

கொழும்பு, ஜூலை 02

நாடு வங்குரோத்து நிலையை அடைந்துள்ளமைக்கு 225 உறுப்பினர்களும் பொறுப்புக்கூற வேண்டும். கடன் பெற்ற அரசாங்கங்களின் அமைச்சரவையில் இருந்தவர்களில் பெரும்பாலானோர் இன்று ஆளும், எதிர்க்கட்சி பக்கம் உள்ளார்கள். கடன் மறுசீரமைப்பு திட்டத்தை தவிர்த்து சிறந்த மாற்றுத்திட்டத்தை முன்வைத்தால் ஜனாதிபதியிடம் கலந்துரையாடி அதனை விரைவாக செயல்படுத்த தயார் என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றில் உரையாற்றிய போதே மேற்கண்டவாறு பேசிய அவர், அங்கு மேலும் தெரிவிக்கையில்,

நாடு பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டது. வங்குரோத்து நிலை அடைந்தது என்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். பொருளாதார பாதிப்பு அரசியல் நெருக்கடியை ஏற்படுத்திய போது வெஸ்மினிஸ்டர் முறைமைக்கு அமைய அரசாங்கத்தை பொறுப்பேற்குமாறு எதிர்க்கட்சிக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அரசாங்கத்தை பொறுப்பேற்காத காரணத்தால் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தை நாங்கள் ஒன்றிணைந்து தோற்றுவித்தோம்.

2022 ஆம் ஆண்டு நாடு முழுவதும் எரிபொருள், எரிவாயு ஆகியவற்றுக்கான வரிசை யுகம் நீடித்திருந்தது. நாளாந்தம் பல மணித்தியாலங்கள் மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டது. இவ்வாறான பின்னணியில் 97 சதவீதமாக காணப்பட்ட பணவீக்கத்தை 2023 ஆம் ஆண்டு இறுதி பகுதியில் ஒற்றை இலக்கத்துக்கு கொண்டு வருவதாக மக்களுக்கு வாக்குறுதி வழங்கினோம். தற்போது பணவீக்கம் கட்டம் கட்டமாக குறைவடைந்து செல்கிறது.

பொருளாதார பாதிப்பு ஓரிரு நாட்களில் இடம்பெற்ற ஒன்றல்ல, 2019 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ ஒரு தரப்பினரின் ஆலோசனைக்கு அமைய வரிச் சலுகை வழங்கினார். உரம் தொடர்பில் தவறான தீர்மானத்தை எடுத்தார் இதனால் பொருளாதாரம் சடுதியாக வீழ்ச்சியடைந்தது.

75 ஆண்டு கால ஆட்சியாளர்கள் திருடர்கள், 225 பாராளுமன்ற உறுப்பினர்களும் திருடர்கள் என அரசியல் நோக்கத்துக்காக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. டி. எஸ். சேனாநாயக்க, சிறிமாவோ பண்டார நாயக்க ஆகியோர் மீது ஏதும் குற்றச் சாட்டுக்கள் இருந்தால் குறிப்பிடுங்கள் என வினவினால் எவருக்கும் பதிலளிக்க முடியாது.

நாடு வங்குரோத்து நிலை அடைந்துள்ளமைக்கு 225 உறுப்பினர்களும் பொறுப்புக் கூற வேண்டும். ரணில், ராஜபக்ஷ, மைத்திரி என தொடர்ச்சியாக ஆட்சியில் இருந்த சகல அரசாங்கங்களின் அமைச்சரவையில் இருந்தவர்களில் பெரும்பாலானோர் இன்று எதிர்க்கட்சி பக்கமும், ஆளும் தரப்பு பக்கமும் உள்ளார்கள். ஆகவே எவரும் பொறுப்பில் இருந்து விலக முடியாது - என்றார்.

## நயினை...

4.00 மணிக்கு பச்சை சாத்தி அம்பாள் ரத அவரோகணம் நடைபெறும்.

நாளை திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழா காலை 6.15 மணிக்கு வசந்த மண்டப பூசையுடன் ஆரம்பமாகும். காலை 7 மணிக்கு அம்பாள் தீர்த்தமாட புறப்பட்டு, மதியம் 12 மணிக்கு தீர்த்த மாடல் நடைபெறும் என்று ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது.

நயினை அம்மனின் பெருந்திருவிழா கடந்த ஜூன் 19ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## புலிகளின்...

எனவே, அவர்கள் கூறும் விடயங்களை கவனத்தில் கொள்ள வேண்டிய தேவை கிடையாது என்று பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

தேசிய கடன் மறுசீரமைப்பு திட்டத்துக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு எதிர்ப்பு வெளியிட்டுள்ளமை தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், எதிர்க்கட்சிகள் கூறுவதைப் போன்று தேசிய கடன் மறுசீரமைப்பால் ஊழியர் சேமலாப நிதிக்கோ, நம்பிக்கை பொறுப்பு நிதிக்கோ எவ்வித பாதிப்பும் ஏற்படாது. மத்திய வங்கி ஆளுநரும் மிகத் தெளிவாக இதனைக் குறிப்பிட்டுள்ளனர். எனவே மக்கள் இது தொடர் பில் வீண் அச்சமடையத் தேவையில்லை.

55 வயதின் பின் ஓய்வு பெறும் எவருக்கும் எவ்வித சிக்கலும் இன்றி தமது ஊழியர் சேமலாப நிதியைப் பெற்றுக் கொள்ள முடியும். தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அனைத்து சந்தர்ப்பங்களிலும் எந்த தீர்மானம் எடுக்கப்பட்டாலும் அதற்கு எதிர்ப்பினையே வெளியிடும். கூட்டமைப்பு என்பது ஒரு தேசத்துரோக அமைப்பாகும். தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல் அமைப்பாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் இலக்கு நாட்டை பிளவடையச் செய்வதாகும். கூட்டமைப்பின் எம்.பிக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் முன்னிலையிலேயே பதவிப் பிரமாணம் செய்தனர். எனவே, அவர்கள் கூறும் விடயங்களை கவனத்தில் கொள்ள வேண்டிய தேவை கிடையாது - என்றார். (ஐ)

## 50மருத்துவ...

உள்ளனர். இவர்களில் 23 பேர் டிசெம்பரில் ஓய்வு பெறவுள்ளனர்.

302 குழந்தைகள் நல மருத்துவர்கள் இருந்த நிலையில் தற்போது 146 பேர் மட்டுமே உள்ளனர். இவர்களில் 28 பேர் டிசெம்பர் இறுதிக்குள் ஓய்வு பெறுவார்கள். மகப்பேறு மற்றும் மகப்பேறு நிபுணர்கள் 24 பேர் இதுவரை நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

284 மயக்க மருந்து நிபுணர்கள் இருந்தனர் ஆனால் தற்போது 129 பேர் மட்டுமே உள்ளனர். இவர்களில் 18 பேர் ஆண்டு இறுதிக்குள் ஓய்வு பெறுவார்கள்.

103 இருதயநோய் மருத்துவர்கள் இருக்க வேண்டும் ஆனால் 57 பேர் மட்டுமே உள்ளனர். இவர்களில் 8 பேர் டிசெம்பர் மாதத்திற்குள் ஓய்வு பெறுவார்கள். 129 தோல் மருத்துவர்கள் இருக்க வேண்டிய நிலையில் தற்போது 66 பேர் மட்டுமே உள்ளனர். இவர்களில் 8 பேர் டிசெம்பரில் ஓய்வு பெறுவர்.

பல மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறுகிறார்கள். இதனால், மருத்துவமனைகளில் சில விடுதிகள் முற்றிலும் செயல்படாமல் உள்ளன. சுமார் 18 ஆயிரத்து 600 பொது மருத்துவர்கள் உள்ளனர். 1500 முதல் 1700 பேர் இதுவரை வெளியேறியுள்ளனர். நம் நாட்டில் கிட்டத்தட்ட 50 மருத்துவமனைகள் மூடப்படும் அபாயம் உள்ளது.

சில மருத்துவமனைகளில் அவசர அறுவை சிகிச்சை மட்டுமே செய்யப்படுகிறது. மருத்துவர்கள், மருத்துவ நிபுணர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதால் பாரதூரமான நிலைமை - ஏற்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

## கடன் மறுசீரமைப்பு விடயத்தில் அரசு மக்களை ஏமாற்றியுள்ளது

### சுமந்திரன் எம். பி. குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூலை 02

ஈ. பி. எவ்., ஈ. ரி. எவ். ஆகியவற்றை தமது இறுதிக்கால சேமிப்பாக கருதும் மலையக தோட்டத் தொழிலாளர்களுக்கு தேசிய கடன் மறுசீரமைப்பு நிச்சயம் பாதிப்பை ஏற்படுத்தும். இதனை அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஏற்றுக்கொள்வாரா? என்று கேள்வியெழுப்பிய தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தேசிய கடன் மறுசீரமைப்பு விவகாரத்தில் அரசாங்கம் ஒட்டுமொத்த மக்களையும் ஏமாற்றியுள்ளது எனவும் தெரிவித்துள்ளார் .

பாராளுமன்றத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற தேசிய கடன் மறுசீரமைப்பு செயற்திட்டம் மீதான விவாதத்தின் போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். மேலும், தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பில் அரசாங்கம் நாட்டு மக்களை தவறாக வழிநடத்தியுள்ளது. தேசிய கடன் ஒருபோதும் மறுசீரமைக்கப்பட மாட்டாது என நிதி இராஜாங்க அமைச்சர் கடந்த காலங்களில் குறிப்பிட்டார்.

தேசிய கடன் மறுசீரமைக்கப்படும் என சர்வதேசத்துக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்துவிட்டு மக்களை தவறாக வழிநடத்தியமை முற்றிலும் தவறானது. ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றில் உறுப்பினர்கள் தமக்கு ஏற்படபோகும் பாதிப்பு தொடர்பில் குரல் கொடுக்க முடியாத நிலையில் உள்ளார்கள்.

அரசாங்க நிதி தொடர்பான குழு கூட்டத்தில் தேசிய கடன் மறுசீரமைப்புக்குள் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியன உள்வாங்கப்படும் என உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை என மத்திய வங்கியின் நாணய சபை உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால், ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றின் தலைவர்கள் சுயவிருப்பத்துடன் கடன் மறுசீரமைப்பு விவகாரத்துக்கு இணக்கம் தெரிவித்தார்கள் என அரசாங்கம் குறிப்பிடுகிறது. அரசாங்கத்தின் கருத்தை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. - என்றார். (ஐ)

## பொலிஸார்மீது தாக்குதல் நடத்திய 10 சந்தேகநபர்களுக்கும் மறியல்!

மன்னார், ஜூலை 02

உயிலங்குளத்தில் பொலிஸார்மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் கைதான ஆண்கள், பெண்கள் உள்ளிட்ட 10 பேரை எதிர்வரும் 7ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்க மன்னார் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நேற்று முன்தினம் நீதிமன்றில் சந்தேகநபர்கள் முற்படுத்தப்பட்டபோதே அவர்களை மறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

மன்னார் உயிலங்குளம் மதுபானசாலைக்கு அருகில் கடந்த சனிக்கிழமை மாலை சிலர் வன்முறையில் ஈடுபடுகின்றனர் என்று பொதுமக்கள் சிலர் உயிலங்குளம் பொலிஸாருக்கு தகவல் வழங்கியிருந்தனர்.

அந்தப் பகுதிக்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை நடத்தினர். அத்துடன், சந்தேகநபர்களாக அடையாளம் காணப்பட்டவர்களிடம் விசாரணை நடத்துவதற்காக பொலிஸார் அவர்களின் வீடுகளுக்கு சென்றனர். வீட்டுக்கு சென்ற பொலிஸாரை 10 பேர் கடுமையாக தாக்கினர். இதில் பாதிக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் மன்னார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இந்நிலையில், இந்த சம்பவம் தொடர்பில் 5 ஆண்களும் 5 பெண்களும் பொலிஸாரால் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மக்கள் மீது பெரும் சுமையை அரசாங்கம் ஏற்றப்போகிறது!

### பாராளுமன்றில் எதிர்க்கட்சி தலைவர்



கொழும்பு, ஜூலை 02

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பில் நாங்கள் சர்வதேச நாணய நிதியத்தை குறைகூறமாட்டோம். அரசாங்கமே முந்திக்கொண்டு இதனை செய்ய முயற்சிக்கிறது. நாட்டின் ஆரம்ப நிலுவையை மறை 7இல் இருந்து நேர் பெறுமானம் 2.3 வரை கொண்டு வருவதே அரசாங்கத்தின் முயற்சியாகும். மக்கள் மீது பெரும் சுமையை ஏற்டுத்தியே அரசாங்கம் இதனை மேற்கொள்ளப்போகிறது - என்று எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பில் பாராளுமன்றத்தின் அனுமதியை பெற்றுக்கொள்வதற்கான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு மேற்கொள்வதில்லை என்று நிதி இராஜாங்க அமைச்சர் மற்றும் மத்திய வங்கி ஆளுநர் தொடர்ந்து தெரிவித்து வந்தனர். இதேபோன்று ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியத்திலும் கை வைப்பதில்லை என்றே தெரிவித்து வந்தனர். நாட்டின் பொருளாதார நெருக்கடியை போக்குவதற்கு சர்வதேச நாணய நிதியத்துக்கு செல்லுமாறு நாங்கள் தெரிவித்தோம்.

அது சரி என இன்றும் தெரிவிக்கிறோம். ஆனால், சர்வதேச நாணய நிதியத்துடன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தம் பிழை. உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு மேற்கொள்ளுமாறு நாணய நிதியம் தெரிவிக்கவில்லை. அரசாங்கத்தின் தேவைக்கே இது செய்யப்படுகிறது. ஏனெனில், குறுகிய காலத்தில் நாட்டின் ஆரம்ப நிலுவையை மறை 7 இல் இருந்து நேர் பெறுமானம் 2.3 வரை கொண்டுவருவதே அரசாங்கத்தின் முயற்சியாகும். இது செய்ய முடியுமானதா எனக் கேட்கிறேன். யதார்த்தமான தீர்மானம் அல்ல. மக்கள்மீது பெரும் சுமையை ஏற்டுத்தியே அரசாங்கம் இதனை மேற்கொள்ளப் போகிறது.

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு தேவையில்லை என்பதே எனது நிலைப்பாடு. உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு மேற்கொள்ளாமல் சர்வதேச நாணய நிதியத்தின் இணக்கப்பாட்டுக்கு வந்த பல நாடுகள் இருக்கின்றன. இதேபோன்று வங்குரோத்து அடைந்த ஐவரிகோஸ்ட், ஈராக் மற்றும் ஈக்வடோர் போன்ற நாடுகளும் உள்நாட்டு கடன் மறுசீரமைப்புக்கு செல்லாமல் இருப்பதற்கு நாணய நிதியத்தின் இணக்கப்பாட்டை பெற்றுக்கொண்டிருந்தன. அதனால், உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பில் நாங்கள் நாணய நிதியத்தை குற்றம் சொல்ல முற்படுவதில்லை. நாணய நிதியம் இதனை செய்யுமாறு தெரிவிக்கவில்லை. ஆனால், அரசாங்கமே முந்திக்கொண்டு இதனை செய்யவதாகத் தெரிவித்திருக்கிறது. அதனால் எமது அரசாங்கத்தில் இந்த நிபந்தனைகளை இலகுபடுத்திக்கொள்ள நாங்கள் சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடுவோம். கடன் மறுசீரமைப்பின் போது அரசாங்கம் தேசிய கடனாளிகளுக்கு எந்த சலுகையும் வழங்காமல் வெளிநாட்டு கடனாளிகளுக்கு சலுகைகளை வழங்க நடவடிக்கை எடுத்திருக்கிறது. அதனால் தான் இதனை நாங்கள் எதிர்க்கிறோம் - என்றார். (ஐ)

# ஏழைகளின் பணத்தை கொள்ளையடிக்கும் திட்டமே உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு!

### சிறீதரன் எம். பி. சபையில் சாடல்

கொழும்பு, ஜூலை 02

“மத்திய வங்கியின் பணத்தை கொள்ளையடித்தவர்களும், யுத்தத்தை நடத்தி பணத்தை கொள்ளையடித்தவர்களும் இணைந்து ஏழைகளின் பணத்தை கொள்ளையடிக்கும் திட்டமே உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு திட்டம்”, என்று இலங்கை தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மலையகத்தில் தோட்ட தொழிலாளர்கள் இன்றும் 600 ரூபாய் சம்பளத்தைதான் பெறுகிறார்கள். அவர்கள் இந்த சம்பளத்தில் எப்படி வாழ்க்கை நடத்துவது? அந்த மக்களின் ஈ. பி. எவ்., ஈ. ரி. எவ். பணத்தை கொள்ளையடிக்க உங்களுக்கு வெட்கமாக இல்லையா?

தமிழர்களுக்கு எதிராக யுத்தம் நடத்தப்பட்டது. யுத்தத்தைக் காரணம் காட்டி சிங்கள தலைவர்கள் தமது பொக்கெற்றை நிரப்பியுள்ளனர். அவர்களின் சொத்துகள் உகண்டாவில், வேறு வெளிநாடுகளில் பதுக்கப்பட்டுள்ளன.

நாட்டில் 25 இலட்சம் மக்களின் ஊழியர் சேமலாப நிதி ஆபத்தில் உள்ளது. தயவு செய்து ஏழை மக்களின் வயிற்றில் அடிக்காதீர்கள். மத்திய வங்கியின் பணத்தை கொள்ளையடித்தவர்களும், யுத்தத்தை நடத்தி பணத்தை கொள்ளையடித்தவர்களும் இணைந்து ஏழைகளின் பணத்தை கொள்ளையடிக்கும் திட்டமே உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு திட்டம் - என்றார். (ஐ)

## டெங்குத் தாக்கத்துக்கு இந்த ஆண்டில் 31பேர் பலி!

கொழும்பு, ஜூலை 02

இந்த ஆண்டில் இதுவரை டெங்கு நோயினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 31 ஆக அதிகரித்துள்ளது.

2023ஆம் ஆண்டில் இது வரை நாட்டில் 48 ஆயிரத்து 963 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்று தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதில் மேல் மாகாணத்தில் 24 ஆயிரத்து 402 பேர் பாதிக் கப்பட்டுள்ளனர். மேலும், ஜூன் மாதத்தில் 9 ஆயிரத்து 559 டெங்கு நோயாளர்கள் உறுதிப்படுத்தப் பட்டுள்ளனர்.

61 பிரதேசங்கள் அதிக ஆபத்துள்ள வலயங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன எனறும் தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ஐ)

## யாழ்.போதனா மருத்துவமனைக்கு மைத்திரிபால சிறிசேன வருகை!



கொழும்பு, ஜூலை 02

யாழ்ப்பாணம் வந்துள்ள முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கும் சென்று அங்குள்ள நிலைமைகளை அவதானித்தார்.

அங்கு சென்ற மைத்திரிபால சிறிசேனவை மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தி வரவேற்றார்.

தொடர்ந்து, மருத்துவமனையின் செயல்பாடுகளையும் விடுதிகளையும் பார்வையிட்ட முன்னாள் ஜனாதிபதி நோயாளர்கள் மற்றும் மருத்துவமனை ஊழியர்களோடு கலந்துரையாடினார்.

சுகாதார அமைச்சராக தான் பதவியேற்ற காலத்தில் அடிக்கல் நாட்டப்பட்டு ஜனாதிபதி காலத்தில் திறந்து வைக்கப்பட்ட மருத்துவமனை கட்டட தொகுதியையும் பார்வையிட்டார்.

அந்தவேளை, நேற்று சனிக்கிழமை காலை வேளையில் பிறந்த ஆண் குழந்தை ஒன்றையும் இதன்போது முன்னாள் ஜனாதிபதி ஆசீர்வதித்தார். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 02.07.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.